இயேசு செய்த

35 அற்புதங்கள்

ஆசிரியர்

D.M.D.பெஞ்சமின், M.A., LL.M.,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இயேசு செய்த
35 அற்புதங்கள்

Bro. D.M.D. **பெஞ்சமின்,** M.A.,LL.M.,

முதல் பதிப்பு : ஜனவரி 2014
பிரதிகள் : 1000
ஆசிரியர் : சகோ. D.M.D. பெஞ்சமின்
விலை : ரூ.70/-

வெளியீடு

இயேசு வாழ்வளிக்கிறார்
நாகர்கோவில் - 629 002
கன்னியாகுமரி மாவட்டம்

Ph. : 04652-279920, 279921
Fax : 04652-227498
E-mail : revdmdbenjaminjplm@yahoo.com

Printed at
Jashua Printers, Ngl. 94435 80066

துவக்கவுரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! அற்புத தேவனாம் இயேசுவிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் அற்புத தேவனின் அத்தனை அற்புதங்களுக்கும் சொந்தக்காரர்களாகின்றனர். இயேசுவை விசுவாசித்து, அற்புதத்தை வாஞ்சித்து எதிர்பார்க்கும் அனைவருக்கும் இயேசு அற்புதம் செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார். எனினும் அற்புதங்களில் மிகப் பெரிதான அற்புதமாகிய "மனுக்குலத்தின் இரட்சிப்பு" என்பதையே இயேசு விரும்புகிறார். ஆதி பிதாவான ஆதாமின் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்த தேவ ராஜ்யத்தை, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வாயிலாக மனுக்குலத்துக்குத் திரும்பக்கொடுப்பது தான் இரட்சிப்பு எனப்படும் சுவிசேஷம். இத்தகைய பெரிய இரட்சிப்பைத் தங்கள் வாழ்வில் பிரதிபலிப்பவர்களைத் தான் இரட்சிக்கப்பட்டவர்கள் என்கிறோம்.

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று ரோமர் 10:9 இரட்சிப்பின் இலக்கணத்தைத் தெளிவாக்குகிறது. அப் 2:47, இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்ததைக் காட்டுகிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவதன் மூலம் அவர்களின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படுகிறது. வெளி 20:15, 'ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" என்று கூறுகிறது.

சுவிசேஷத்தின் மையப்பொருள் என்னவென்றால் 'பாவிகள் மனந்திரும்புதல்' என்பதே. இன்றைய அவசியமும் இதுதான். ஆனால் இந்நூற்றாண்டில் அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் பாவிகளின் மனந்திரும்புதல் என்பது வரை சென்றடையாமல், தேவனுடைய மேலான திட்டமாகிய மனுக்குலத்தின் இரட்சிப்பைத் தாமதமாக்கியிருக்கிறது என்பது தான் நிச்சயமான உண்மை.

அற்புதங்கள், யாரையும் பரலோகராஜ்யத்திற்குள் கொண்டு செல்வதில்லை. இயேசு கிறிஸ்துவின் காலம்முதல் இன்று வரை நடந்துள்ளதும், நடக்கவிருக்கிறதுமான சகல அற்புதங்களும் நிறைவுபெறும் அந்நாளில் தேவன் மனிதனிடத்தில் எதிர்பார்க்கின்ற ஒரே ஒரு அற்புதம் மனிதன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதே. இதைக்குறித்து யூதருக்குள்ளே

அதிகாரியான நிக்கொதேமு என்பவனுடன் இயேசு உரையாடுவதை யோவான் 3:1 முதல் 21 வசனங்களில் நாம் வாசிக்கலாம். மேலும் ஏசாயா தீர்க்கதரிசி, "இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்" என்று கூறுகிறார் (ஏசாயா 8:18)

இரட்சிப்பைப் பெற்று (மனந்திரும்பி) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் மூழ்கி ஞானஸ்நானம் என்றும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் சீஷர்களாக நம்மை மாற்றிக் கொள்வது தான் என்றும் அழியாத உண்மையான அற்புதம்.

இன்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜனங்கள் கூடி வருகின்ற எல்லா இடங்களும் அழிந்து போகின்ற அற்புதங்களின் மேடைகளாக மாறி வருகின்றன. அற்புதங்களுக்குப் பின்னால் ஜனங்கள் அலைந்து திரிவதைக் காணமுடிகிறது. இவ்விதமான இயேசுவின் காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றை வேதத்தில் பார்க்கலாம். இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு... இயேசுவைத்தேடிக் கொண்டு கப்பர்நகூமுக்கு வந்தார்கள். "நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்?" என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள். அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்" என்றார் (யோவான் 6:24-27).

இதில் 26-ஆம் வசனத்தில் இயேசு, "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" என்று கூறுகிறார். தேவன் பரலோகத்திலிருந்து மனிதனை நோக்கி உரத்த குரலில் சொல்லுகிற ஒரு வார்த்தை உண்டு. அது "உன்னதமானவைகளையே நாடுங்கள் என்பது." இதற்கு மாறாக அழிந்து போகின்ற அப்பத்திற்காக ஆசைப்படுகின்ற அநேக ஊழியர்கள் இன்று அதிகமாகிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகின்றது. இவர்களுக்கு தேவன் கொடுத்த பெயர் அக்கிரமச் செய்கைக்காரர் (மத் 7:23). இயேசுவின் வருகையையும், உலகத்தின் முடிவையும் குறித்து இயேசுவின் சீஷர்கள் அவரிடம் கேட்டபோது, அவர் கொடுத்த பிரதியுத்தரம் தான் மத்தேயு 24-ஆம்

அதிகாரம். அதில் இயேசு சொன்ன ஒரு முக்கியமான தீர்க்கதரிசனம் தான் இன்று உலகத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

'அக்கிரமம் மிகுதியாவதினால், அநேகருடைய அன்பு தணிந்து போகும்' (மத் 24:12). இதுதான் அந்த தீர்க்கதரிசன வசனம். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்று மத் 6:33 கூறுகிறது. ஆனால் இன்று பலர் இந்த வசனத்திற்கு மாறாக பூமியிலுள்ளவற்றை நாடித் தேடுகிறவர்களாக மனிதர்களை மாற்றுகின்றனர். மட்டுமன்றி, இவ்விதமாய் கற்பிக்கவும், அவர்களை வழிநடத்தவும் செய்கின்றனர். இன்றும் இயேசுவின் நாமத்தில் பல அற்புதங்கள் நடக்கிறதென்பது உண்மைதான். ஏனென்றால் அதற்கான அதிகாரம் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் அந்த வரங்களின் வாயிலாக தேவனுடைய சித்தத்தை அறிந்து. அவருடைய மேலான திட்டத்தைப் பகுத்தறிந்து, தேவனுடைய இராஜ்யத்தின் அங்கத்தினராக மாறும்போது மட்டுமே, தேவன் நமக்காக செய்த அற்புதங்களும் அதன் அர்த்தமும், உண்மையாகின்றன. இயேசு பத்து குஷ்டரோகிகளைச் சுகமாக்கினார். ஆனால் அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்ட பத்து பேர்களில் ஒருவன் மட்டும் இயேசுவினிடத்திற்குத் திரும்புகிறான். இயேசு அவனிடம் "மற்ற ஒன்பது பேர் எங்கே?" (லூக் 17:17) என்று கேட்கிறார். இதே கேள்வியைத் தான் கர்த்தர் இன்றும் நம்மிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். அற்புதங்களை, சுகத்தை இயேசுவால் தங்கள் வாழ்வில் அனுபவித்தவர்கள் அனைவரும் அவரண்டை திரும்பி வந்திருப்பார்களென்றால் ஆவிக்குரிய சபைகளின் எண்ணிக்கை இப்பொழுதிருக்கிறதைப் பார்க்கிலும் எவ்வளவோ அதிகரித்திருக்கும். அன்பர் இயேசு இப்பூமியில் ஊழியம் செய்த காலத்தில் பல அற்புதங்கள் நடந்தன. அதை பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்போது நாம் அறிந்து கொள்கிறோம். இதில் கர்த்தருக்கு நன்றி சொல்லி அவரைப் பின்தொடர்ந்தவர்கள் என்று பலரைப் பார்க்கிறோம். உதாரணமாக 1) ஏழு பிசாசுகள் நீங்கிய மகதலேனா மரியாள் (லூக் 8:2) அவரைப் பின் தொடர்ந்தாள். 2) பெதஸ்தா குளத்தினருகே சுகம்பெற்ற வியாதியஸ்தன் (யோவான் 5:14) தேவாலயம் சென்றான். 3) பர்திமேயு என்கிற குருடன் (மாற்கு 10:52) இயேசுவுக்குப் பின்சென்றான். 4) லேகியோன் பிசாசு பிடித்தவன் (மாற்கு 5:20) இயேசு செய்தவைகளைப் பிரசித்தம் பண்ணினான். 5) மரித்து இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்ட லாசருவின் குடும்பத்தினர் (யோவான் 12:1,2) இயேசுவுக்குப் பணிவிடை செய்து அன்பு காட்டினர். 6) அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்த பிறவிச் சப்பாணி (அப் 3:8) தேவனைத் துதித்துக் கொண்டு தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.

இப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பர்களே, இதில் எழுதப்பட்டுள்ள இயேசு செய்த அற்புதங்கள் அனைத்தும் உயிருள்ள சாட்சிகள். இவை அப்போஸ்தலர்கள் வழியாக தொடரவே, இன்று ஊழியம் செய்கின்ற தேவனுடைய பிள்ளைகள் பலராலும் மீண்டும் நடந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய வாழ்க்கையிலும் எல்லாவித அற்புதங்களையும் செய்ய தேவனால் முடியும் என்று விசுவாசியுங்கள். அற்புதங்களை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். பிரச்சனைகளை மேற்கொள்ளுங்கள். ஜீவபுஸ்தகத்தில் இடம் பெறுங்கள் என்ற ஜெபத்துடன் பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் இப்புத்தகத்தை உங்கள் கரங்களில் அர்ப்பணம் செய்கிறேன்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைக் குறித்து நான்கு சுவிசேஷங்களும் நமக்குச் சொல்கிறது. ஒரே அற்புதம் நான்கு சுவிசேஷங்களிலும், இன்னும் சில மூன்றிலும், இரண்டிலும் மற்றவை ஒன்றிலும் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் புசிக்க கொடுத்த அற்புதம் நான்கு சுவிசேஷத்திலும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இயேசு செய்த முதலாம் அற்புதமாகிய கானாவூர் கலியாண வீட்டில் தண்ணீரைத் திராட்சரமாக மாற்றிய அற்புதம் யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

இயேசு செய்த அற்புதங்களை சுலபமாக வாசிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஏற்றவாறு மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற சுவிசேஷங்களின் அடிப்படையில், ஒரு சுவிசேஷத்தில் கூறப்பட்டிருப்பதும் மற்றவைகளில் இல்லாதவைகளுமான ஒழுங்குமுறையில் தான் அற்புதங்கள் இந்த புத்தகத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அன்பர் இயேசு, எண்ணற்ற அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்திருந்தாலும், மிக முக்கியமானதாக நம் கண்களில் படும் 35 அற்புதங்களைக் குறித்துத்தான் இந்த புத்தகத்தில் நாம் பார்க்கப் போகிறோம்.

முதலாவதாக சுவிசேஷங்களின் சில முரண்பாடுகளைப் புரிந்து கொள்வது நல்லதென்று கருதுகிறேன். உதாரணமாக இயேசு எரிகோவுக்கு வந்தபோது இரண்டு குருடர்கள் இயேசுவை நோக்கி, கூப்பிட்டதாக மத்தேயு சுவிசேஷத்தில் வாசிக்கிறோம் (மத் 20:30,31). ஆனால் மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில், ஒரு குருடன் என்று வாசிக்கிறோம் (மாற் 10:46-52; லூக் 18:35-43). மட்டுமன்றி இயேசு கெர்கெசேனர் நாட்டிற்கு வந்தபோது,

பிரேதக் கல்லறைகளிலிருந்து இரண்டு பேர் இயேசுவினிடத்தில் வந்ததாக மத்: 8:28ல் வாசிக்கிறோம். ஆனால் மாற்கு: 5:1; லூக்கா 8:26,27 ஆகியவற்றில் ஒருவன் மட்டுமே வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதமான முரண்பாடுகளையெல்லாம் பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்ட மூல பாஷையிலிருந்து மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட போது ஏற்பட்ட பிழைகளாக இருக்கலாம் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். அதனால் தான் எரிகோவின் குருடனும், பிரேதக் கல்லறை மனிதனும் ஒருவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கானாவூர் கலியாண வீட்டில் நடந்த அற்புதம் இயேசுகிறிஸ்துவின் முதலாம் அற்புதமாய் இருக்க, இப்புத்தகத்தை வாசிக்கிற உங்கள் வசதிக்கேற்ப சுவிசேஷங்களின் வரிசைப்படி அற்புதங்களையும் அதற்கான விளக்கங்களையும் தந்துள்ளேன்.

இயேசு செய்த அற்புதங்களையும் அவற்றால் இன்றைய மனுக்குலத்திற்குக் கிடைக்கப்பெறும் நன்மைகளையும், பரிசுத்தாவியானவர் கொடுக்கும் கிருபைகளுக்கேற்ப விளக்கமளிக்கலாம். சுமார் 2000 ஆண்டுகளாக இச்செயல் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இன்னமும் யாராலும் விளக்கத்தின் பூரணத்தைக் கொடுக்க இயலவில்லை என்று கருதுகிறேன். காரணம் கிறிஸ்து மனுக்குலத்தின் மீது காட்டிய அன்பின் ஆழம் போலவே, அவர் செய்த அற்புதங்களின் ஆழமும் அளந்தறியப்பட இயலாதது. என்றாலும் ஆவியானவர் அடிமைக்குக் கொடுத்த வெளிப்பாட்டிற்கேற்ற படியும் பரிசுத்தாவியானவர் தந்த கிருபைக்கு ஏற்பவும் இயேசு செய்த சில அற்புதங்களுக்கு விளக்கமளிக்கலாம் என கர்த்தருக்குள் ஆசிக்கிறேன். இப்புத்தகத்தை விசுவாசத்துடன் வாசிப்பவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் அற்புத மழையில் நனைய ஜெபித்து வாழ்த்துகிறேன்.

Bro. D.M.D. பெஞ்சமின்

உள்ளே...

1.	குஷ்டரோகியைச் சுகமாக்குதல்	11
2.	நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைச் சுகமாக்குதல்	14
3.	பேதுருவின் மாமியாருடைய ஜுரத்தைச் சுகமாக்குதல்	18
4.	காற்றையும் கடலையும் அமைதிப்படுத்துதல்	21
5.	பிரேதக் கல்லறைகளிலிருந்த அசுத்த ஆவியுள்ள மனிதனைச் சுகமாக்குதல்	26
6.	திமிர்வாதக்காரனைச் சுகமாக்குதல்	32
7.	பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகமடைதல்	37
8.	ஜெபஆலயத்தலைவனின் மகளை உயிரோடெழுப்புதல்	42
9.	இரண்டு குருடர்களுக்குப் பார்வையளித்தல்	46
10.	ஊமையான மனுஷனைக் குணமாக்குதல்	50
11.	சூம்பின கையையுடைய மனிதனைக் குணமாக்குதல்	53
12.	குருடும் ஊமையுமானவனைக் குணமாக்குதல்	56
13.	ஐந்து அப்பங்களைப் பலுகச் செய்தல்	59
14.	கடலின் மீது நடத்தல்	64
15.	கெனேசரேத்து நாட்டில் நடந்த அற்புதங்கள்	67
16.	கானானிய ஸ்திரீயின் மகளைச் சுகமாக்குதல்	70
17.	ஏழு அப்பங்களைப் பலுகச் செய்தல்	74
18.	இயேசு மறுரூபமாதல்	79
19.	சந்திரரோகியைக் குணப்படுத்துதல்	85
20.	எரிகோவின் குருடனுக்குப் பார்வையளித்தல்	89
21.	அத்திமரத்தை உடனே பட்டுப் போகச் செய்தல்	93

22. கலிலேயா கடற்கரையில் நடந்த அற்புதம் 98

23. கொன்னைவாயுடைய செவிடனைக் குணமாக்குதல் 101

24. பெத்சாயிதாவில் குருடனுக்குப் பார்வையளித்தல் 105

25. நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடெழுப்புதல் 109

26. கூனியான ஸ்திரீயைக் குணமாக்குதல் 113

27. நீர்க்கோவை வியாதியுள்ள மனிதனைச் சுகமாக்குதல் 117

28. பத்து குஷ்டரோகிகளைக் குணப்படுத்துதல் 120

29. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரின் காதுகளைத் தொட்டு குணமாக்குதல் 124

30. தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுதல் 129

31. 38 வருட வியாதியஸ்தனைச் சுகமாக்குதல் 137

32. பிறவிக்குருடனுக்குப் பார்வையளித்தல் 142

33. மரித்த லாசருவை உயிரோடெழுப்புதல் 146

34. மீனின் வாயில் வெள்ளிப்பணம் எடுத்தல் 152

35. படகு நிறைய மீன்கள் 156

* * *

1

குஷ்டரோகியைச் சுகமாக்குதல்

மத்தேயு 8:1-4

1. அவர் மலையிலிருந்து இறங்கினபோது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

2. அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.

3. இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.

4. இயேசு அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.

*****

குஷ்டரோகிகளைக் குறித்து இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமாண காலத்தில் தேவன் சில கட்டாய விதிமுறைகளைக் கொடுத்திருந்தார். குஷ்டரோகி, வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து, அவன் தன் தாடியை மூடிக் கொண்டு, “தீட்டு, தீட்டு” என்று சத்தமிட வேண்டும் (லேவி.13:45-46). மட்டுமன்றி, யாராகிலும் ஒரு தொழுநோயாளியைத் தொட்டாலும் அவன் வேறுயாரையாவது தொட்டாலும் அவர்கள் தீட்டுப்பட்டவர்களாகி விடுவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இந்த வசனங்களில் எழுதப்பட்டிருக்கிற குஷ்டரோகி இயேசுவினிடத்தில் வந்தான்.

இவன் குணமடைவதற்கான சில காரணங்கள்

1. இயேசு செய்த அற்புதங்களைப் பற்றி இவன் கேள்விப்பட்டவனாக இருந்தான். உலகின் அடைக்கலங்கள் அற்றுப்போன தனக்கு அவரே உயர்ந்த அடைக்கலமென்பதை அறிந்திருந்தான்.

2. எப்படியாவது இயேசுவிடம் வந்து சேர்ந்தால் சுகமாகலாம் என்று தன் இருதயத்தில் உறுதியாக விசுவாசித்தான்.

3. இயேசுவின் அருகில் வந்து அவரைப் பணிந்து கொண்டான். உலகத்தின் மனிதர் தன்னை தூரப்படுத்தினாலும் இயேசு தன்னருகில் ஏற்றுக்கொள்வார் என்பதை அறிந்து செயல்பட்டான்.

4. ஜனங்கள் வெறுக்கக்கூடிய நோயாளியாக இருந்தும்கூட அவர்களைக் கண்டு பயப்படாமல் இயேசுவின் அருகில் நியாயப்பிரமாணத்தையும் மீறி வந்தான். இயேசுவின் இரக்கத்தை அடையும்படி தன் எல்லையை விட்டு துணிவாக வந்தான்.

5. யாரிடத்தில் வரவேண்டும் என்றறிந்து அவரிடம் வந்தான். (யோவான் 7:37) ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் என்று இயேசு கூறியதை அறிந்து செயல்பட்டான்.

இவ்வற்புதமானது இம்மனிதனைப் போல, மேற்கூறிய நிலையில் தன்னை மாற்றிக் கொண்டு, தன்னிருதயத்தை இயேசுவிடம் திருப்பிக் கொள்கிற அனைவருக்கும் சொந்தமானது. அன்று மட்டுமல்ல, இன்றும் இதுபோன்ற அற்புதத்தை நாம் எதிர்பார்க்கலாம். தேவனையும், அவர் நமக்காகச் செய்திருப்பவைகளையும் குறித்த அறிவு நமக்கு வேண்டும். நம் இயேசு ஏற்கனவே உலகின் எல்லையெங்கிலும் செய்த எல்லா அற்புதங்களையும் வேதத்தில் தேடி வாசித்து, நம் சிந்தையையும், நம் நினைவுகளையும் அவற்றால் நிரப்பிக்கொள்ள தவறக்கூடாது. அற்புதங்களை எதிர்பார்ப்பது உண்மையாயிருப்பின், இவ்வற்புதங்களைச் செய்த நம் இயேசுவை இருதயத்தில் விசுவாசித்து, இந்த குஷ்டரோகியைப்போல அவரருகில் நெருங்கிவர தீவிரித்துக் கொள்ள வேண்டும். அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பை முழுமையாகப் புரிந்துக்கொண்டு, அவரையே பற்றிக் கொண்டால் குஷ்டரோகம் நீங்கி அவனை சுத்தமாக்கினதுபோல நம் வாழ்வின் குறைவுகளையும் நீக்க அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்.

2

நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைச் சுகமாக்குதல்

மத்தேயு 8:5-13

5. இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்த போது, நூற்றுக்கு அதிபதி
ஒருவன் அவரிடத்தில் வந்து:

6. ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து
கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான்.

7. அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.

8. நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள்
பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும்,
அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

9. நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக்
கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு: நான் ஒருவனைப் போவென்றால்
போகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான்.

10. இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு பின்செல்லுகிறவர்களை
நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக்
காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

11. அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து பரலோகராஜ்யத்தில்
ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்.

12. ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

13. பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

*****

மத் 8:5-13, லூக் 7:1-10, யோவான் 4:46-54 ஆகிய பகுதிகளிலும் இந்த அற்புதத்தைப் பற்றி நாம் வாசிக்கலாம். இந்த அற்புதம் நடந்த இடம் கப்பர்நகூம். இயேசுவின் அற்புதங்கள் பல இந்த கப்பர்நகூமில்தான் நடந்தது. ஆயினும் இந்த கப்பர்நகூமின் ஜனங்கள் மனந்திரும்பாததனால் இயேசு அவர்களைக் கடிந்து கொண்டதாக வேதம் சொல்கிறது. (மத் :11:20-24)

அப்படியிருக்க மீண்டும் கப்பர்நகூமில் ஒரு அற்புதம் நடக்க இயேசுவைத் தூண்டியது எது? வேலைக்காரன் நோயுற்றிருக்கிறானென்றதும் இயேசு கரிசனைப்பட்டதன் காரணம் என்ன? இயேசுவால் குணமடைந்த பலரும் தாமாகவே இயேசுவைத்தேடி வந்தவர்கள் தான். கானானிய பெண்ணொருத்தி மகளின் நலனுக்காக கதறிய நேரம் அமைதியாயிருந்த இயேசு, (மத் 15:21-23) நூற்றுக்கதிபதியின் விஷயத்தில் இவ்வளவு அக்கறை காட்டினார், காரணம்!

இயேசு நூற்றுக்கதிபதியிடம் அக்கறை காட்ட காரணங்கள்:

1. நூற்றுக்கதிபதி என்பதன் அர்த்தம் நூறுபேர் கொண்ட படைகளின் தலைவன் என்பதாகும். (இன்றைய ராணுவ வீர்களின் தரப்படி பார்த்தால் தங்கள் சீருடையில் **மூன்று நட்சத்திரங்கள் பதித்த ஒரு இராணுவவீரனுக்குச் சமமானவன்.)** அப்படிப்பட்டவன் இரக்கம் நிறைந்தவனாய் தன்னுடைய வேலைக்காரனுக்காக இயேசுவிடத்தில் வேண்டினான்.

2. தன்னைப்போல தனக்குக் கீழ்ப்பட்ட தன் வேலைக்காரனையும் நேசித்ததினிமித்தமாகவே "கொடிய வேதனைப்படுகிறான்" என்று இயேசுவிடம் முறையிட்டான்.

3. நூறு பேருக்குத் தலைவனான அவன், வேலைகாரர்களில் ஒருவனை இயேசுவிடம் அனுப்பியிருக்கலாம் ஆனால் அவனோ இயேசு தன்னைவிட உயர்ந்தவர் என்ற மேலான சிந்தையுடையவனாய் இருந்தான்.

4. இயேசுவின் முன்னால் தன்னைத் தாழ்த்தினான். தான் தகுதியற்றவன் என ஒத்துக்கொண்டான் (மத்:8:8)

5. இயேசுவின் வார்த்தைக்கு வல்லமையுண்டு என அவன் (மத்.8:8) விசுவாசித்தான்.

6. அவன் தயவு பெறத்தக்கவன் (பாத்திரவான்) என்று பிறரால் சாட்சி பெற்றிருந்தான் (லூக்7:4).

7. அவன் தேவனுக்காக ஜெப ஆலயம் கட்டியிருந்தான் (லூக் 7:5)

வேலைக்காரன் குணமடைவதற்காக இயேசுவிடம் வந்த அவன், அவனுடைய விசுவாசத்தைக் குறித்த இயேசுவின் சான்று (மத்:8:11), பரலோக ராஜ்யத்தில் ஓர் இடம் ஆகிய வேறு இரண்டையும்கூட பெற்றுக் கொண்டான் (மத்:25:40). பிறரை நேசிக்கச் சொன்னவர் நம் இயேசு. பிறரை நம்மைப்போல் நேசிக்க நமக்குள் தாழ்மை, தேவ அன்பு, சிறுமைப்பட்டவர்களைப் பற்றிய சிந்தை ஆகியவை இருக்க வேண்டியது அவசியம். நூற்றுக்கதிபதியைப் போன்று, தனக்குக் கீழ்ப்பட்ட நிலையிலுள்ளோரின் நல்வாழ்வை வாஞ்சித்து மன்றாடுகிற நல்ல இருதயமும், தேவனுக்காகச் செயல்படுகிற நல்ல வாழ்க்கையும் உடையவர்களாய் நாம் காணப்பட்டால், நம் மன்றாட்டின்படியே பிறருக்கு விடுதலையும், சுகமும், நல்வாழ்வும் உண்டாவதோடு, பிறருக்காக மன்றாடின நம்முடைய வாழ்வும் இயேசுவின் பாராட்டுக்குரிய ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வாக உயர்வும், கனமும் பெறும்.

3

பேதுருவின் மாமியாருடைய ஜுரத்தைச் சுகமாக்குதல்

மத்தேயு 8:14,15

14. இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார்.

15. அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

மத்:8:14,15,மாற்1:29-34,லூக்.லூக்4:38-41இவ்விடங்களில் இவ்வற்புதத்தைப் பற்றி வாசிக்கலாம். பேதுருவிற்கு குடும்பமில்லையென்று பிரசங்கிப்பவர்களுண்டு. ஆனால் பேதுரு சீடனாக அழைக்கப்பட்டபோது அவனுக்குக் குடும்பம் இருந்தது. கேபா என்று அழைக்கப்பட்ட அவருக்கு மனைவியும் இருந்தாள். இது 1கொரி.9:5ல் எழுதப்பட்டுள்ளது. இயேசுவின் அழைப்பைக் கேட்டவுடன் தன்னுடைய படகு, வலை என எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு வந்தவர் பேதுரு (மத்4:19-20). ஆனால் அவர் தன்னுடைய குடும்பத்தை விட்டுவிட்டு வந்ததாக எங்கும் சொல்லப்படவில்லை. தன்னுடன் ஊழியம் செய்ய அவர் தன்னுடைய மனைவியையும், உடன் அழைத்துச் சென்றார் என்பதே உண்மை. இன்று பலர் தேவனுடைய அழைப்பைக் கேட்டவுடன் தன்னுடைய குடும்பத்தைத் தூக்கியெறிந்து விட்டு ஊழியம் என்ற பெயரில் செல்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் பேதுருவின் வாழ்க்கையும், ஊழியமும் ஒரு பாடமாக அமையும்.

பேதுருவின் குடும்பத்தில் இயேசுவின் அக்கறை:

தன்னுடன் ஊழியத்தைச் செய்த பேதுருவின் வீட்டிற்கு இயேசு அழைக்காமலே சென்றார். பேதுருவின் மாமியார் ஜுரமாய் அவதிப்பட்ட விஷயத்தை யாரும் இயேசுவிடம் சொல்லவில்லை. யாரும் அவரை அழைக்கவுமில்லை. கர்த்தருடைய ஊழியம் செய்கின்றவர்களின் குடும்பத்தை இயேசு அக்கறையோடு கண்ணோக்குகிறவர். இயேசு பேதுருவின் வீட்டிற்கு வந்தபோது அவருடைய சீடர்களும் அவருடன் வந்திருக்கக்கூடும். தன்னுடைய மாமியார் நோய்வாய்ப்பட்டிருக்கும் விஷயம், பேதுருவுக்கு அதன்பிறகு தான் தெரிந்திருக்கும். ஆனால் இயேசு இவற்றையெல்லாம் தன்னுடைய ஆவியில் உணர்ந்ததால்தான் அந்த வீட்டிற்குள் பிரவேசித்தார். பேதுருவின் மாமியாரின் கைகளைத் தொட்டார். உடனே அவளுடைய ஜுரம் நீங்கிற்று. இயேசுவின் வார்த்தைக்கு இருந்த சுகமளிக்கும் வல்லமை அவருடைய தொடுதலுக்கும் இருந்தது. கர்த்தரைத் தொட்டவர்களும், கர்த்தரால் தொடப்பட்டவர்களும் சுகமடைந்ததாக வேதம் சொல்கிறது. பெரும்பாடுள்ள பெண்மணி இயேசுவின் ஆடையைத் தொட்டதும் சுகம் பெற்றதை (மாற் 5:35-43) நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தருடைய தொடுதலினால் சுகம்பெற்ற பேதுருவின் மாமியார் உடனே எழும்பி அவருக்குப் பணிவிடை செய்தாள்.

நாம் ஊழியத்திற்காக நம்மை அர்ப்பணிக்கின்ற போது, நம் குடும்பத்தை இயேசு பொறுப்பெடுத்துக் கொள்கின்றார் என்பதற்கு இந்த அற்புதம் ஒரு முக்கியமான சான்று. தேவனுடைய அழைப்புக்கு மறுப்பு சொல்லாமல் நம்மை அர்ப்பணித்து, அவருக்குப் பின்செல்லும்போது, நம்மையும், நம் குடும்பத்தையும் விசாரித்து நடத்த வேண்டிய முழுப்பொறுப்பையும் நம்மை அழைத்த தேவன் ஏற்றுக்கொள்வார். "என்னைப் பின்பற்றி வா" என்ற இயேசுவின் அழைப்பைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற பேதுருவின் குடும்பத்தை விசாரித்துக் காப்பாற்ற உண்மையுள்ளவராயிருந்த நம் அருமை இயேசு, அவர் குரல்கேட்டு அவருக்குப் பின் செல்லுகிற நம்முடைய குடும்பத்தையும் காப்பது அதிக நிச்சயம். அன்று ஊழியனாகிய பேதுருவின் குடும்பத்தின்மீது அவருக்கு இருந்த கரிசனை, இன்றும் நம் குடும்பத்திற்கும் உண்டு. விசுவாசித்து, நம் குடும்பத்தின் மீதான அவருடைய கரிசனைக்காக நன்றி சொல்ல ஆரம்பித்து விடுங்கள். தொடர்ந்து அற்புதங்களைச் சொந்தமாக்கி, மறவாமல் நன்றி சொல்லுங்கள்.

4

காற்றையும் கடலையும் அமைதிப்படுத்துதல்

மத்தேயு 8: 23-27

23. அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின்சென்று ஏறினார்கள்.

24. அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார்.

25. அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள்.

26. அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

27. அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு: காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.

*****

அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்ற இயேசுவின் அழைப்புதான் இந்த அற்புதத்தின் ஆரம்பம்.

1. அழைப்பை விடுத்த நேரம் சாயங்காலம்:

இயேசு இந்த அழைப்பை விடுத்த நேரம் சாயங்காலம். அதாவது இருள் சூழ்வதற்கு சற்று முன்பான நேரம், உலகத்தின் கடைசி காலமான கிருபையின் நாட்கள். இந்த அழைப்பு மனந்திரும்புதலுக்கான அழைப்பு. "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை". (பிர.12:1) என்று வேதம் நமக்குச் சொல்லியும், இன்றும் நாம் மனந்திரும்பாமல், தேவராஜ்யத்திற்குச் செல்வதற்கான பயணத்தைத் தொடங்காமல் இக்கரையிலே நிற்கிறோம். நம்மை நோக்கி "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்று இயேசு அழைக்கிறார்.

காப்பாற்ற வேண்டும் என்பதுதான். மொத்தத்தில் கர்த்தர் ஒரு காவற்காரனாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் இன்பத்திலும் கர்த்தரை மறவாதவர்கள் தான் கிறிஸ்தவர்கள். சீடர்கள் செய்த ஒரு நல்ல காரியம் இயேசுவை எழுப்பியது. உடனே இயேசு எழுந்து, காற்றையும் கடலையும் அமைதிப்படுத்தினார். ஏனென்றால் ஆபத்துக் காலத்தில் இரட்சிப்புக்கு ஒரே வழி இயேசு கிறிஸ்துதான். பிரச்சனைகள் என்னும் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் வேளையில் இயேசுவை எழுப்புவது தான் நமது வழக்கம். அப்படியென்றால் இயேசு தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தமல்ல! நம்முடைய ஜெபமும், துதியும், ஆராதனையும் உபவாசமும், பரிசுத்த ஜீவியமும் உறங்கத் தொடங்கி பல காலங்கள் ஆகி விட்டது. மீண்டும் ஒரு எழுப்புதல் வர வேண்டும். சீடர்கள் இயேசுவை அதன் பிறகு தூங்கவிடவில்லை. பின்தள்ளப்பட்ட இயேசுவை முன்னணியில் கொண்டு போனார்கள். இயேசு சீடர்களை அழைத்தபோது "என் பின்னால் வாருங்கள்" என்று தான் சொன்னார். எனவே இயேசுவை முன்னணியில் நிறுத்தி அவரைப் பின் தொடர்ந்து செல்வோமானால் அமைதி உருவாகும்.

நம்மை அக்கரையாகிய பரலோக ராஜ்ஜியத்திற்கு அழைத்த நம் இயேசு நம்மோடு இருக்க வேண்டியதும், நம் பாதைகளில் நமக்கு முன்செல்ல வேண்டியதும் மிகமிக அவசியம். அவரில்லாமல் நம் வாழ்வில் வெளிச்சமில்லை. நம்முடன் உறவாடுகிறவராய், இயேசு நம்முடன் இருந்தால் மட்டுமே நம்மைச் சூழ்ந்துள்ள அலைகளும், இரைச்சலும் அடங்கும். சத்துருவாகிய சாத்தானின் சீற்றங்களும், கர்ஜனைகளும், அதட்டப்படும். அமைதி, சமாதானம், சந்தோஷம் உண்டாகும். வாழ்வில் நிச்சயமும், அர்த்தமும் ஏற்படும். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நம்மை அர்ப்பணித்தால் அவருடைய பிரசன்னமும், சமூகமும் நம்மைவிட்டு விலகாதிருக்கும். அலைகளை அமர்த்தி, இரைச்சலை அதட்டி, அமர்ந்த தண்ணீரண்டையில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் நல்ல மேய்ப்பனின் சத்தம்கேட்டு, அவருக்குப் பின்செல்ல பழகிக்கொள்ளுங்கள். சிக்கல்களுக்குள் மாட்டிக்கொள்ளாமல், எளிதாக வாழ கற்றுக்கொள்ளுங்கள்.



5

பிரேதக் கல்லறைகளிலிருந்த அசுத்த ஆவியுள்ள மனிதனைச் சுகமாக்குதல்

மத்தேயு:8:28-34

28. அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக்கல்லறைகளிலிருந்து புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்; அவர்கள் மிகவும் கொடியராயிருந்தபடியால், அந்த வழியாக ஒருவனும் நடக்கக்கூடாதிருந்தது.

29. அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.

30. அவர்களுக்குக் கொஞ்சதூரத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன.

31. அப்பொழுது, பிசாசுகள்: நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும் என்று அவரை வேண்டிக் கொண்டன.

32. அதற்கு அவர்: போங்கள் என்றார் அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின; அப்பொழுது, பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, ஜலத்தில் மாண்டு போயின.

33. அவைகளை மேய்த்தவர்கள் ஓடி, பட்டணத்தில் சென்று, இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும், பிசாசு பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும் அறிவித்தார்கள்.

34. அப்பொழுது, அந்தப் பட்டணத்தார், யாவரும் இயேசுவுக்கு எதிர் கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள்.

*****

இயேசு கிறிஸ்து கதரேனருடைய தேசத்திற்கு வந்தார் (மாற்கு 5:1). இந்த தேசம் இயேசுவின் காலத்தில் கதரேனதேசம் என்று அழைக்கப்பட்டிருந்தது. கதரேனர்கள் இங்கு வாழ்ந்ததால்தான் இந்த தேசத்திற்கு இந்த பெயர் வந்ததாக சில வேத பண்டிதர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். யார் இந்த கதரேனர்கள்? கர்த்தர் இஸ்ரவேல் மக்களை யோர்தானைக் கடந்து கானான் தேசத்துக்குப்போகுமாறு மோசேயிடம் சொன்னார். ஆனால் ரூபேனியருக்கும், கதரேனருக்கும் ஆடுமாடுகள் ஏராளமாக இருந்தபடியினால் அருகிலுள்ள புல்வெளிகளைவிட்டு யோர்தானுக்கு அப்புறம் செல்ல அவர்களுக்கு மனமில்லை (எண்.32:1-10). இது தேவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது (எண் 32:13). பச்சைப் புல்வெளிக்காக தேவனுடைய கட்டளையை கதரேனர்கள் மீறிய படியினால் அவர்களுடைய புல்வெளிகள் காய்ந்து நாசமானது மட்டுமல்லாமல், ஆடுமாடுகள் மேய்ந்த நிலம் பன்றிகள் மேய்கின்ற நிலமாக மாறியது என்பது சிலருடைய கருத்து. கானான் தேசத்தைச் சொந்தமாக்குவதற்குப் பதிலாக, அவர்கள் யோர்தானில் பட்டணங்களை உருவாக்கி அதில் குடியேறினார்கள். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் அந்த பட்டணங்கள் பிரேதக் கல்லறைகளின் நாடாக மாறியது. பூமியின் நிலையற்ற பசுமையைக் கண்டதும் அதற்காக தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கைவிடுவோர்களை கதரேனருக்கு ஒப்பிடலாம். இங்கேதான், அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் இயேசுவுக்கு எதிராக வந்தான்.

1. **குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது** (மாற்கு 5:3)

மரித்தவர்களை அடக்கம் செய்கின்ற இடம் தான் கல்லறை. இந்த கல்லறைகளுக்கு அநேகரை சாத்தான் அழைத்துச் செல்கிறான். மதுபானக்கடைகள், செக்ஸ் கூடாரங்கள், திரைப்பட கொட்டகைகள், போதை மருந்து கூடாரங்கள், சூதாட்ட ஸ்தாபனங்கள், விபசார கூடங்கள் இவையெல்லாம் தான் இன்றைய கல்லறைகள். வீட்டில் குடும்பத்தாருடன் சந்தோஷமாக வாழவேண்டிய பலர் அருவருப்பான இக்கல்லறைகளில் வாழ்வதையே விரும்புகின்றனர்.

2. கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது (மாற்கு 5:3)

இந்த பூமியில் மனிதன் கீழ்ப்படிய வேண்டிய பல சட்டங்களுண்டு. ஆவிக்குரிய சட்டங்களுமுண்டு. உலகப்பிரகாரமான (அரசாங்க) சட்டங்களுமுண்டு. மனிதன் தேவனுடைய சட்டத்திற்கும், தன்னை ஆளுகின்ற அரசாங்கச் சட்டத்திற்கும் கீழ்ப்படியவேண்டியவனாகக் காணப்படுகிறான். ஆனால் கல்லறைகளில் வாழ்கின்ற மனிதன் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிவதில்லை. யாராலும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது. அவனுடைய செயல்களுக்கு ஒரு கட்டுப்பாடும் கிடையாது. அவன் தன் விருப்பம்போல் வருவான், போவான், சாப்பிடுவான். அவன் யாருடைய அறிவுரைகளையும் கேட்பதில்லை.

3. சங்கிலிகளை முறித்து விலங்குகளைத் தகர்த்துப் போடுவான்.

சங்கிலிகளால் கட்டினாலும் அவன் அவற்றைத் தகர்த்து விடுவான். பல நேரங்களில் மனந்திரும்ப நினைத்தாலும், நல்ல வாழ்க்கை வாழ நினைத்தாலும் சிலர் அவனைப் போலவே திடீரென்று அந்த சங்கிலிகளை முறித்து மீண்டும் கல்லறைகளுக்குத் திரும்புகிறார்கள். தீர்மானங்களைத் தகர்த்தெறிகிறார்கள்.

4. அடக்க ஒருவராலும் கூடாதிருந்தது (மாற்கு 5:4)

அவனைப் பார்த்த மாத்திரத்திலே அனைவரும் பயந்து ஓடினார்கள். தேசத்திலுள்ள நல்லவர்கள், சபைத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நீதித் தலைவர்கள் என யார் நினைத்தாலும் அவனை அடக்க முடியாது. இன்று பல வீடுகளில் மதம் பிடித்த யானையைப் போலத்தான் பல மனிதர்கள் நடமாடுகிறார்கள். பெற்றோர்களுக்கு அடங்காத பிள்ளைகள் செய்கின்ற அட்டகாசங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வீட்டிலுள்ள பொருட்கள், பாத்திரங்கள், தொலைக்காட்சிப்பெட்டி என்பவைகளை அடித்து உடைக்கும் இவர்களும் கல்லறையில் வசிக்கும் மனிதர்கள் தான். இப்படிப்பட்ட கல்லறைவாசிகளால் மற்றவர்களும் நிம்மதியை இழக்கிறார்கள். எவ்வளவு அழகான பெரிய வீடுகள் இருந்தாலும் நிம்மதி இல்லாததால் மரத்தடிகளிலும், அண்டைவீடுகளிலும் அடைக்கலம் தேடுகின்றனர். பலவேளைகளில் வீட்டிலுள்ள கொடுமைகளைத் தாங்கமுடியாமல் தூரதேசம் செல்பவர்களுண்டு. ஒருசிலர் தற்கொலைகூட செய்துகொள்கின்றனர். வெளியே மரியாதைக்குரிய மனிதர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களுக்குள்ளேயோ நிம்மதி இல்லை. இவர்களைத்தான் இயேசு "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்" (மத் 23:27) என்று கூறினார்.

5. இரவும் பகலும் கூக்குரலிடுகிறவனாகக் காணப்பட்டான்

(மாற்கு 5:5)

நீதிமான்களின் வீடுகளில் இரட்சிப்பின் கெம்பீரசத்தமும் (சங்.118:15), சமாதானமான நித்திரையும் உண்டு (சங்.4:8). துன்மார்க்கருடைய வீடுகளிலோ சண்டையும் சச்சரவும் இரவில் தொடங்கி கண்ணீரும் அழுகையும் விடியற்காலைவரை நீடிக்கும். அசுத்தஆவி இரவும் பகலும் கூக்குரல் எழுப்புகிறவனாக்கி அவனை வேதனைப்படுத்தியது.

6. கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டான்

பல வீடுகளில் மனைவியை அடித்து காயப்படுத்துகின்ற கொடிய மனிதர்கள் இன்றும் உண்டு. மனைவியின் தலை கணவன். கணவனின் உடல் மனைவி. தன்னைத்தானே காயப்படுத்திக்கொள்கிற இவர்களைப்போல கெட்டவர்கள் எவருமில்லை. எனவே அவர்களும் கல்லறைகளில் வசித்தவனுக்கு ஒப்பாவார்கள்.

7. இயேசுவைப் பணிந்துக் கொண்டான் (மாற்கு 5:6)

இப்படிப்பட்டவர்கள் சில சந்தர்ப்பங்களில் பெரிய பக்தர்களைப் போல் காணப்படுவார்கள். தேவனைப் பணிந்து கொள்வார்கள், துதிப்பார்கள். ஆனால் மறுகணமே "எனக்கும் உமக்கும் என்ன?" என்பார்கள். இவனைக் கல்லறைகளுக்குக் கொண்டுச் சென்றவன் பிசாசு. இதே பிசாசுதான் பல குடும்பங்களையும் கூட கல்லறைகளாக மாற்றுகின்றான். எசேக்கியேல் தீர்க்கதரிசியிடம் "இந்த எலும்புகள் உயிரடையுமா?" (எசே.37:3) என்று வினவிய கர்த்தர், உலர்ந்த எலும்புகளாயிருக்கிற தம் ஜனத்திடம் "நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குக் கொடுப்பேன், நீங்கள் உயிரடைவீர்கள், நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்" (எசே.37:12-14) என்று கூறியதுபோலவே.

இயேசு கல்லறையில் வாழ்ந்தவனுக்கும் செய்தார். அசுத்த ஆவியை அகற்றினார். அப்போது அவன் புத்தி தெளிந்து ஆடைகளை அணிந்தான். இயேசு அவனை வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அவன் இயேசுவுக்குச் சாட்சியாக மாறி தெக்கப்போலி நாட்டில் இயேசு செய்தவைகளைப் பிரசித்தம்பண்ணினான் (மாற். 5:15-20).

வீட்டையும், குடும்பத்தையும் மறந்த நிலையில் கல்லறைகளுக்கொப்பான இடங்களில் வாழ்கின்ற உங்கள் வாழ்க்கையிலும் கர்த்தர் அற்புதம் செய்ய வல்லவராயிருக்கிறார். நாற்றமான நிலையினை விட்டு, வெளியேறமுடியாதபடி பாவ அசுத்தங்களின் அடிமைத் தனங்களுக்குள் சிக்கித்தவிக்கிற உங்கள் வாழ்வை மாற்ற இயேசு ஒருவரால் மட்டுமே முடியும். நீங்கள் உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் கட்டுப்படாதவர்களாய் சத்துருவாகிய பிசாசின் ஆதிக்கத்தினால் இதுவரை அவதிப்பட்டது ஒருவேளை உண்மையாயிருக்கலாம். ஆனால், இயேசுவினால் அற்புதத்தைப் பெற்றுக்கொண்ட அசுத்த ஆவியுள்ள அம்மனிதன் புறப்பட்டு இயேசுவுக்கு எதிராக வந்ததுபோல, பாவத்தின் நெருக்கங்களை உதறித் தள்ளிவிட்டு, இயேசுவை நெருங்கும்போது உங்களைக் காயப்படுத்தி உருத்தெரியாமல் மாற்றிக் கொண்டிருக்கும் கொடூரனுடைய பிடியிலிருந்து உங்களை மீட்டுக்கொள்ள அவர் வல்லமையுள்ளவராயிருக்கிறார். வனாந்தரங்களுக்குத் துரத்தின பிசாசை அவனைவிட்டுத் துரத்தி, இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்திருக்கிறவனாகவும், புத்தி தெளிந்தவனாகவும் மாற்றி, அநேகருக்கு இயேசுவை அறிவிக்கும் பாத்திரமாக அங்கீகரித்து, வீட்டுக்கும் திரும்பச் செய்தவர், உங்கள் வாழ்விற்கும் தெளிவைக் கட்டளையிட்டு, சமாதான தாபரங்களிலே உங்களைத் தாபரிக்கப் பண்ணுவார்.



6

திமிர்வாதக்காரனைச் சுகமாக்குதல்

மத்தேயு 9:1-8

1. *அப்பொழுது, அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டு தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்.*
2. *அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி : மகனே திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.*
3. *அப்பொழுது, வேதபாரகரில் சிலர் : இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக் கொண்டார்கள்.*
4. *இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?*
5. *உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ எது எளிது?*
6. *பூமியில் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.*
7. *உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்.*
8. *ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*

*****

மாற்கு 2:1-12, லூக்கா 5:17-26 ஆகிய வசனங்களிலும் இச்சம்பவத்தை வாசிக்கலாம். திமிர்வாதக்காரனை இயேசு

சொஸ்தமாக்கியதன் காரணம், அவனுடைய விசுவாசத்தினாலல்ல, மாறாக அவனைக் கொண்டுவந்தவர்களின் விசுவாசத்தினால் தான். அவர்கள் யார் என்பது வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. இயேசுவால் சொஸ்தமாக்கப்பட்டவர்கள் அனைவரும் தாமாகவே இயேசுவினிடத்தில் வந்தவர்கள் அல்லது தங்கள் உறவினர்களால் கொண்டுவரப்பட்டவர்கள். ஆனால் இந்த திமிர்வாதக்காரன் தானாக இயேசுவினிடத்தில் வரவில்லை, அவனுடைய உறவினர்களாலும் கொண்டுவரப்படவில்லை. இவனைக் கொண்டுவந்தவர்கள் அந்நியர்கள்.

திமிர்வாதக்காரனைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள் :

இயேசு ஒரு வீட்டில் போதித்துக் கொண்டிருக்கையில் இவர்களும் இயேசுவின் போதனையைக் கேட்டார்கள். அந்நேரம் நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை இயேசுவினிடத்திலுள்ளதை உணர்ந்தார்கள். திமிர்வாதக்காரன் இயேசு இருந்த வீட்டின் அருகில் வாழ்ந்தவனும் அவனைக் கொண்டு வந்தவர்களுக்குப் பழக்கப்பட்டவனுமாய் இருந்திருக்க வேண்டும். இயேசுவின் வல்லமையைக் கண்டவுடன் இவர்களுக்கு திமிர்வாதக்காரனின் ஞாபகம் வந்தது. உடனே அவர்கள் விரைந்துச் சென்று அவனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ஒருவேளை தன்னை எங்கே கொண்டு செல்கிறார்கள் என்பது கூட அவனுக்குத் தெரியாமலிருந்திருக்கலாம். காரணம் இயேசுவிடம் காணப்பட்ட குணப்படுத்தும் வல்லமை தீர்ந்து போவதற்குள் அவனை அவரிடத்தில் கொண்டு வர வேண்டும் என்று அவர்கள் நினைத்திருப்பார்கள். லூக் 5:18 இல் கூறப்பட்டுள்ள "அப்பொழுது" என்னும் வார்த்தை "வல்லமை வெளிப்பட்ட உடனே" என்று பொருள்படுகிறது. நெருக்கடி காரணத்தால் அவனை இயேசுவினிடத்தில் கொண்டுச் செல்ல அவர்களால் இயலவில்லை. ஏனவே வீட்டின் ஓடுகளைப் பிரித்து அவனை இறக்கினார்கள்.

கொண்டு வந்தவர்களும், அற்புதமும்:

1. இயேசுவின் வல்லமையை நேரில் கண்டவர்கள்.
2. இந்த வல்லமையினால் மற்றவர்களும் பயனடைய வேண்டும் என்று விரும்பியவர்கள்.
3. நோயாளியைச் சுமந்து கொண்டு வருவதில் எந்த தயக்கமும் இல்லாதவர்கள்.

4. மக்கள் கூட்டத்தைக்கண்டு மனந்தளர்ந்துத் திரும்பிப் போகாதவர்கள்.
5. சிறிது கஷ்டப்பட்டாலும் இயேசுவின் முன்னால் திமிர்வாதக்காரனைக் கொண்டுவரும் தைரியம் அவர்களிடத்தில் காணப்பட்டது.

இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, "மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" (மத் 9:2) "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ" (மாற் 2:11) என்றார். உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக் கொண்டு போனான். அப்போது எல்லோரும் ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். இயேசுவின் அன்பையும் வல்லமையையும் உணர்ந்த இந்த நால்வரும் ஒருமனதாய் திமிர்வாதக்காரன் குணமடைய வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களுடைய முயற்சியில் வெற்றியும் கண்டார்கள்.

கொண்டு வந்தவர்களுடைய முயற்சியின் விளைவுகள்:

1. பாவத்திலிருந்து திமிர்வாதக்காரனுக்கு இரட்சிப்பு கிடைத்தது.
2. திமிர்வாதம் நீங்கி அற்புத சுகம் உண்டானது.
3. படுக்கையிலே கிடந்தவன் ஜனங்களுக்கு முன்பாக எழுந்து நடந்தான்.
4. தேவ நாமம் மகிமைப்பட்டது.
5. படுக்கையை விட்டு எழுந்து நடந்தவன் வீட்டிற்குச் சென்றான்.

பாவம் மனிதனை நோயாளியாக்குகின்றது. பாவத்தின் காரணமாக நோயாளிகளாக்கப்பட்டவர்கள் அநேகருண்டு. இவர்கள் எழுதி முடித்த கணக்கு போன்றவர்கள். இவர்களது வாழ்க்கை எல்லா அத்தியாயங்களும் முடிந்த புத்தகம் போன்றது. இத்தகையோரை இயேசுவண்டைக் கொண்டுச் சேர்த்தால் நிச்சயம் அற்புதம் நடக்கும். பல்வேறு விதமான நோய்களினாலும், வேதனைகளினாலும் அவதிப்பட்டவர்களாக, விடுதலைபெற வழிதெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிற, நமக்கு அறிமுகமான எத்தனையோபேர் நம்மைச் சுற்றிலும் உண்டு. இயேசுவின் வல்லமையை அறிந்தவர்களும், உணர்ந்தவர்களும், அனுபவித்தவர்களுமாகிய நீங்கள், “இயேசுவால் மட்டுமே காப்பாற்றப்பட முடியும்” என்கிற நிலையில் மரணத்தின் விளிம்பிலும், பாதாளத்தின் கரையிலும் கிடத்தப்பட்டிருக்கிற மனிதர்களின் பக்கமாக உங்கள் கரங்களும், கால்களும் தீவிரிக்காவிட்டால், உங்கள் கண்களுக்குமுன் அவர்கள் மடிய நேரிடும். இக்காட்சியைக் காண்பது

உங்களுக்கு வேதனையளிப்பதாக இருக்குமானால், திமிர்வாதக்காரனைச் சுமந்த நால்வரில் ஒருவராக நீங்களும் மாறியாக வேண்டும். பிறருக்கு நல்வாழ்வும், சுகமும், இரட்சிப்பும் உண்டாக வழிவகுக்கும் வாய்க்கால்களாக உங்களை அர்ப்பணித்தால், நிச்சயமாக உங்கள் பிரயாசங்களைக் கனம்பண்ணி அநேகருக்கு பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் கர்த்தர் விடுதலையைக் கட்டளையிடுவதைப் பார்த்து உங்கள் உள்ளம் பூரிக்கும். கிறிஸ்துவின் வல்லமையினால் பிறரும் பயனடைய விரும்பி தயக்கமும், மனத்தளர்வுமின்றி தைரியமாகச் செயல்பட்ட அந்த நால்வர்மூலம் தேவநாமம் மகிமைப்பட்டதுபோல, தேவ வல்லமை வெளிப்படுவதற்கு ஊடகங்களாய்ச் செயல்படுகிற உங்கள் மூலமாகவும் தேவநாமம் மகிமையடையும்.

7

பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகமடைதல்

மத்தேயு 9:20-22

20 அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ:
21 நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்
என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, அவர் பின்னாலே வந்து,
அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.
22 இயேசு திரும்பி, அவளைப் பார்த்து : மகளே, திடன்கொள், உன்
விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த
ஸ்திரீ சொஸ்தமானாள்.

*****

மத் 9:20-22, லூக் 8:43-48லும் இச்சம்பவத்தைக் காணலாம். மூன்று சுவிசேஷங்களிலும் இதைப்பற்றி விவரிக்கப்பட்டுள்ளது என்றாலும் மாற்கு எழுதிய சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ள இவ்வற்புதமான சம்பவத்தைப் பற்றி நாம் சிந்திப்போம். ஒரு ஸ்திரீ விலகியிருக்க வேண்டிய காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேக நாள் ஊறிக் கொண்டிருந்தால், அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போல தீட்டாயிருக்கும். அவள் தொட்டவற்றைத் தொடுகிற எவனும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி.15:25-27) என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஆகவே நியாயப்பிரமாணத்தின்படி அவள் இயேசுவைத் தொடுவதும், இயேசு அவளைத் தொடுவதும் கூட தீட்டுதான்.

பெரும்பாடுள்ள ஸ்திரீ:

அவள் பன்னிரெண்டு வருட நோயாளி. தனக்குண்டானவைகள் எல்லாம் மருத்துவத்திற்காய் செலவிட்டவள். சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டவள். அவள் எந்த இனத்தவள், எந்த மதத்தவள்

என்பது குறிப்பிடப்படவில்லை. அதுவரை மருத்துவர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் தன்னுடைய பணத்தையெல்லாம் செலவழித்தவள், யார் மூலமாகவோ இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டாள். இயேசுவின் வஸ்திரத்திற்குக்கூட குணமளிக்கும் வல்லமை உண்டு என்று அவள் புரிந்து கொண்டாள்.

அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள் (லூக்.6:19), அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள், தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் (மத்.14: 35-36) என்று கேள்விப்பட்ட இந்த செய்திகள்தான் அவளை இயேசுவினிடத்தில் கொண்டு வந்திருக்க வேண்டும். சரீரத்தில் பெலவீனமும், வியாதியும் இருந்தாலும், எப்படியோ சிரமப்பட்டு நடந்து இயேசுவின் பக்கத்தில் சென்றடைந்தாள். எல்லா நம்பிக்கைகளையும் இழந்த அவள், திரள்கூட்டத்துக்கு இடையே இயேசு சென்று கொண்டிருந்தபோது, பின்னால் நின்று தனது ஒரே கடைசி நம்பிக்கையாக மிஞ்சியிருந்த இயேசுவின் வஸ்திரத்தைத் தன் இருதயத்தின் மொத்த ஏக்கத்துடனும் விசுவாசமாய் தொட்டுவிட்டாள். வேதனை நீங்கி சுகமடைந்தாள்.

குணமடைந்ததற்கான காரணங்கள்:

- விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருந்தாள்.
- இயேசுவை விசுவாசித்தாள்.
- இயேசுவைப் புரிந்து கொண்டாள்.
- இயேசுவின் வஸ்திரத்தைத் தொட தீர்மானித்தாள்.
- இயேசுவைத் தேடிப் புறப்பட்டாள்.
- மக்கள் கூட்டத்தைப் பொருட்படுத்தாமல் தைரியமாக இயேசுவிடம் வந்தாள்.
- தீர்மானித்ததை நிறைவேற்றினாள்.

கிடைத்த ஆசீர்வாதங்கள்:

- நொடிப்பொழுதில் நோய் நீங்கி குணம் பெற்றாள்.
- இயேசு அவளைப் பார்க்க விரும்பினார்.

- மகளே என்று அழைத்தார்.
- விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பை அவளுக்குக் கொடுத்தார்.
- தம்முடைய சமாதானத்தை அவளுக்கு அளித்தார்.
- வேதனை நீங்கி சுகமாயிரு என்று வாழ்த்தினார் (மாற்.5:29-34)

நாம் அறிந்து கொள்பவை :

1. இனம், மதம், மொழி என எந்த பாகுபாடும் இல்லாமல் யார் வேண்டுமென்றாலும் இயேசுவினிடத்தில் வரலாம்.

2. சகலமும் இழந்து இனி வேறு வழியே இல்லை என்று விரக்தியோடிருப்பவர்களுக்கு ஒரே வழி இயேசு தான்.

3. இயேசுவால் மட்டும்தான் தன்னுடைய நோயைக் குணப்படுத்த முடியும் என்று அவள் விசுவாசித்தாள்.

4. அவள் இயேசுவைத் தேடி வந்தது நோய் குணமாவதற்கு தானென்றாலும் அவள் எதிர்பாராதவண்ணம் அவளுக்கு இரட்சிப்பு, சமாதானம், சுகவாழ்வுக்கான வாழ்த்துக்கள் போன்றவை அவள் கேட்காமலே அவளுக்குக் கிடைத்தது. அன்று வரை அவளை உலகம் "அசுத்தமானவள்", "சபிக்கப்பட்டவள்" என்றுதான் அழைத்தது. ஆனால் அவளைத் திரும்பிப்பார்த்த இயேசுவோ ஒரு தாய் தன் பிள்ளையை அன்புடன் அழைப்பது போல "மகளே" என்று அழைத்தார்.

இயேசுவின் உள்ளத்தைத் தொட்டவர்கள்:

அநேகர் இயேசுவைத் தொட்டனர். ஆனால் பெரும்பாடுள்ள ஸ்திரீ மற்றும் நூற்றுக்கதிபதியின் விசுவாசமும், இரண்டு காசுபோட்ட விதவையின் காணிக்கையும், இயேசுவின் பாதத்தில் பரிமளதைலத்தை ஊற்றிய மரியாளின் அன்பும், பேதுருவின் கிறிஸ்துவை அறிகிற அறிவும் மட்டுமே இயேசுவின் உள்ளத்தைத் தொட்டன. இயேசுவின் உள்ளத்தைத் தொட்ட இவர்களுடைய வாழ்வும் சரித்திரம் படைக்கும்படி இயேசுவின் வல்லமையால் தொடப்பட்டது.

ஒரே நாளின் ஜெபத்திலே சுகமுண்டாகாவிட்டால், ஒரே நொடிப்பொழுதில் நம்பிக்கையை விட்டுவிடுகிற பொறுமையற்ற அநேகருக்கு பன்னிரண்டு வருடங்களாகியும், இயேசுவின் வஸ்திரத்தையாகிலும் தொட்டுவிட்டால் சுகமாகிவிடுவேன் என்று உள்ளத்தில் எண்ணின

பெரும்பாடுள்ள ஸ்திரீயின் பொறுமையோடு கூடிய விடுதலைக்கான ஏக்கத்தையும் தொலைத்து, மனமுறிவடைந்துபோய் நோய்களுக்குள் மூழ்கிவிடுவதை நாம் காணமுடிகிறது. ஆனால் பன்னிரண்டு வருடங்களாய் விடுதலை அடையாமல் வேதனையில் வாழ்ந்துகொண்டிருந்த இந்த ஸ்திரீ இயேசுவைத் தேடி புறப்பட்டுச் சென்று, விடுதலையைக்குறித்த எதிர்பார்ப்பு, ஏக்கம் மற்றும் விசுவாசத்தின் மிகுதியால் இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டுவிட தீர்மானித்து சுகமடைய துணிச்சலும், தைரியமும் அடைந்தபோது, பெரும்பாடு நீங்கி சுகவாழ்வைப் பெற்றதுபோல, நம்பிக்கையை விடாமல் விசுவாசத்தில் உறுதியும், தைரியமும் உடையவர்களாய் இயேசுவை அண்டிக்கொள்ளும்போது. நிச்சயமாக எப்படிப்பட்ட வியாதியானாலும், எவ்வளவு காலமாயிருக்கும் வியாதியானாலும் நொடிப்பொழுதில் சுகமும், ஆரோக்கியமும், மறுவாழ்வும் உண்டாகும்.

8

ஜெப ஆலயத்தலைவனின் மகளை உயிரோடெழுப்புதல்

மத்தேயு:9:23-26

23. இயேசுவானவர் தலைவனுடைய வீட்டிலே வந்து, தாரை ஊதுகிறவர்களையும், இரைகிற ஜனங்களையும் கண்டு:

24. விலகுங்கள், இந்தச் சிறுபெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப்பார்த்து நகைத்தார்கள்.

25. ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார். உடனே அவள் எழுந்திருந்தாள்.

26. இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

*****

மாற்கு 5:35-43. லூக்கா 8:49-56 ஆகிய பகுதிகளிலும் இச்சம்பவத்தை வாசிக்கலாம். ஜெப ஆலயத் தலைவனின் பன்னிரண்டு வயது மகள் நோயினால் மரணப்படுக்கையில் கிடப்பதை இயேசுவினிடத்தில் வந்து அறிவித்தது முதல் இயேசு அவளை உயிர்ப்பிக்கின்ற சம்பவம் வரையிலான எல்லா நிகழ்வுகளும் மூன்று சுவிசேஷங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் லூக்கா எழுதிய சுவிசேஷத்தின் வசனங்களிலிருந்து இச்சம்பவத்தைப் பற்றி நாம் சிந்திப்போம்.

அவளை உயிரோடெழுப்புமாறு இயேசுவைத் தூண்டியவை:

1. இயேசுவையும் அவரது வல்லமையையும் அவமதித்த அக்காலத்து யூத மதத்தலைவர்களுக்கிடையே வாழ்ந்த ஜெப ஆலயத்தலைவனாகிய இவனோ இயேசு தனது மகளைச் சுகமாக்கும் வல்லமை உடையவர்

என்பதை உணர்ந்தவனாக தனது மகள் நோய்வாய்ப்பட்டிருப்பதை இயேசுவிடம் தெரிவித்தான்.

2. இயேசுவால் மட்டுமே தன்னுடைய மகளைக் குணப்படுத்த முடியும் என்று அவன் விசுவாசித்தான்.
3. அவன் தாழ்மையை வெளிப்படுத்தினான்.
4. தன்னுடைய வீட்டிற்கு இயேசுவை அழைத்தான்.

இயேசு அவனுக்கு அளித்த ஆசீர்வாதங்கள்:

1. பயத்தைப் போக்கினார்.
2. விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்.
3. மகள் இரட்சிக்கப்படுவாள் என்று உறுதியளித்தார் (லூக்கா 8:50).

நாமும் நம்மை ஆண்டவர் முன் தாழ்த்தி, இயேசுவை நம் வீட்டிற்கு அழைத்து அவரிடத்தில் நம்முடைய துக்கங்களையெல்லாம் அறிக்கையிடுவோமானால், இயேசு நமக்குக் கூடுதலாக தரக்கூடியவைதான் மேற்சொன்ன மூன்று காரியங்களும்.

அவிசுவாசம் அற்புதங்களுக்குத் தடை (மத்.14:58)

இயேசு ஏன் ஜெபஆலயத் தலைவனின் வீட்டினுள் பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் மட்டும் தன்னுடன் அழைத்தார். மற்ற சீடர்களை ஏன் அவர் அழைக்கவில்லை? சில சந்தர்ப்பங்களில் சில காரியங்களுக்காக இந்த மூன்று சீடர்களை மட்டுமே இயேசு தன்னுடன் அழைத்துச் சென்றதை வேதபுஸ்தகத்தில் பல இடங்களில் நாம் வாசிக்கின்றோம். இயேசு மறுரூபமானபோதும் (மத் 17:1), கெத்செமனே தோட்டத்தில் இயேசு வியாகுலப்பட்ட நேரத்திலும் கூட அவருடன் இந்த மூவரும் தான் இருந்தார்கள் (மாற் 14:13). சீடர்கள் பலர் இருந்தபோதிலும் இயேசுவின் பார்வையில் பூரண விசுவாசத்துடன் காணப்பட்டவர்கள் இந்த மூவரும் தான். இன்றும் கூட நோயாளிகளுக்காக ஜெபிக்கும் போது அவிசுவாசமுள்ள யாரையும் நம்முடன் கொண்டுச் செல்லக்கூடாது. சிறுமியின் தாயையும், தந்தையையும் இயேசு தன்னுடன் வீட்டிற்குள் வர அனுமதித்தார். ஏனென்றால் இயேசுவை அழைத்த அவர்களுக்குள் பூரண விசுவாசம் காணப்பட்டது. அற்புதம் நடக்க, வீட்டிலுள்ளவர்களின் விசுவாசம் மிகவும் அவசியம். அவிசுவாசமுடையவர்களாய் நகைத்த மற்றவர்களை வெளியே துரத்தினார். இவ்வாறு அவிசுவாசத்தைத் துரத்திய பின்னரே இயேசு சிறுமியை உயிரோடு எழுப்பினார். இன்றும் அற்புதங்களுக்குத் தடையாக

நிற்கும் அவிசுவாசம் நம்மைவிட்டு நீங்கினால் மட்டுமே அற்புதர் இயேசு நமக்கு அற்புதம் செய்யமுடியும்.

இயேசு சிறுமியை உயிரோடெழுப்பின விதம்:

இயேசு இந்த அற்புதம் செய்தபோது ஒரு ஒழுங்கினைக் கடைபிடித்ததை நாம் காண முடிகிறது. சிறுமியின் கையைப் பிடித்தார்; பிள்ளையே எழுந்திரு என்றார்; அவளுடைய உயிர் திரும்ப வந்தது; அவளுடைய பெற்றோர் ஆச்சரியப்பட்டனர்; அவளுக்கு ஆகாரங்கொடுக்க கட்டளையிட்டார் (லூக்கா 8:54-56). இயேசு இந்த சிறுமியை உயிர்ப்பித்தது போலவே மரித்துப் போனதாக நாம் நினைக்கின்ற விஷயங்களையும் இயேசு உயிர்ப்பிப்பார். இனி உயிர்பெறாது என்று நாம் நினைக்கின்ற நம்முடைய வியாபாரம், விவசாயம், உத்தியோகம், பொருளாதாரம், உறவுகள் என எல்லாவற்றையும் உயிர்ப்பிக்க இயேசு வல்லவராயிருக்கிறார்.

இயேசு யாருடைய வீட்டுக்குள் பிரவேசிக்கிறாரோ அந்த வீட்டுக்கு இரட்சிப்பு உண்டாகும். ஐசுவரியவானாயிருந்த சகேயு இயேசுவை அவனுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அன்றே அவனுடைய வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது (லூக்கா 19:9). இயேசுவை வீட்டிற்கு அழைத்த மார்த்தாள், மரியாள் என்பவர்களின் கண்ணீரை இயேசு கண்டார். லாசருவை உயிர்ப்பித்தார். நீங்களும் அவரை வீட்டிற்குள் அழைத்து, தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழத்தி, உங்கள் நிலைமையை உள்ளபடியே அவரிடத்தில் கூறும்போது, உயிரற்றதும் நம்பிக்கைக்கு இடமற்றதுமான நிலையிலிருக்கும் உங்களின் பயத்தை நீக்கி இரட்சிப்பதுடன், விசுவாசத்தில் உறுதிப்படுத்தி செத்துப்போன எல்லா சூழ்நிலைகளையும் உயிர்பெறச்செய்து உங்களைத் தேற்றுவார். நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக தம்முடைய வார்த்தையை அனுப்பி உங்களை உயிர்ப்பிக்க இயேசு போதுமானவர். அற்புதம் செய்வதற்கு விசுவாசத்தைத் தேடுகிறபோது உங்களிடம் அவிசுவாசத்தைக் காணாதபடி, விசுவாசத்தைக் கண்டாரானால் நிச்சயமாய் நீங்கள் அற்புதத்தைக் காண்பீர்கள். அவிசுவாச சிந்தைகள் அகன்றுபோகவும், தைரியமும், விசுவாசமும் பெருகவும் தேவனிடம் மன்றாடி அவரையே சார்ந்து கொள்ளுங்கள். பயங்கள் போக்கப்படும். விசுவாசம் உறுதியடையும். இரட்சிப்பு உண்டாகும். நம்பிக்கையும், புதுவாழ்வும் மலரும்.



9

இரண்டு குருடர்களுக்குப் பார்வையளித்தல்

(மத்தேயு 9: 27-31)

27. இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

28. அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி : இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்.

29. அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு : உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

30. உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

31. அவர்களோ புறப்பட்டுப் போகையில், பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

*****

இரண்டு குருடர்களுக்குப் பார்வையளித்த இந்த அற்புதம் மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இயேசு மரித்த சிறுமியை உயிர்ப்பித்துவிட்டு திரும்பிப் போகின்ற வழியில்தான் இரண்டு குருடர்கள் இயேசுவைப் பார்த்துக் கதறினார்கள்.

குருடர்களுக்கு அற்புத விடுதலை கிடைத்ததற்கான காரணங்கள்:

1. இயேசுவை அறிந்திருந்தார்கள்.
2. இரக்கத்திற்காகக் கதறினார்கள்.
3. இயேசுவிற்குப் பின்சென்றார்கள்.

4. இயேசுவால் தங்களைக் குணப்படுத்த முடியும் என்பதை விசுவாசித்தார்கள்.

விசுவாசமும், இல்வற்புதமும்:

இயேசு வீட்டிற்கு வந்தபோது இருவரும் அவரருகே வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தை அவர்கள் வாயாலே அறிக்கையிடச் செய்தார். தாவீதின் குமாரனே என்று முதலில் அழைத்தவர்கள் பின்பு ஆண்டவரே என்று அழைத்தார்கள். இது அவர்களுடைய விசுவாசத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது. இயேசுவை தாவீதின் குமாரனே என்று கூப்பிட்டபோது, அவர்களுக்குச் சுகம் கிடைக்கவில்லை. அவர்கள் மீண்டும் இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். இந்த இடைப்பட்ட நேரம்தான் தாவீதின் குமாரன் என்னும் அவர்களின் எண்ணத்தை, ஆண்டவர் என்னும் எண்ணமாக மாற்றியது. பர்திமேயு என்கிற குருடன் இயேசுவை இரண்டாவது முறையாக மீண்டும் அழைத்தபோது தான், இயேசு அவனை குணப்படுத்தினார் (மாற் 10:47,48). கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து வேண்டிக் கொண்டபோது, இயேசு எந்த மறுமொழியும் அவளுக்குக் கூறாதிருந்தார் (மத் 15:23).

இயேசுவினருகில் வந்ததாலும், சத்தமாக அழுததாலும் இயேசு யாருக்கும் உடனடியாக விடுதலை கொடுக்கவில்லை. ஏனென்றால், நம்முடைய விசுவாசத்தை அளக்க, அவருக்குக் கால அவகாசம் தேவை. இன்று பலருக்கும் அற்புதம் நடக்காமல் போவதற்குக் காரணம் அவர்களின் பொறுமையின்மை தான். கேட்டவுடன் கிடைக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் திரும்பி விடுவார்கள். சிலவற்றைச் சாதிப்பதற்காக ஆலயத்திற்கு வருகிற சிலர், வந்தவுடன் அவர்கள் நினைத்தது நடக்கவில்லையென்றால் மறுவாரம் வரமாட்டார்கள். இந்த குருடர்களின் விடுதலைக்கான காரணம் என்னவெனில் அவர்கள் மனந்தளராமல் இயேசுவைப் பின் தொடர்ந்தது தான். உறுதியான விசுவாசம் என்பது இதுதான். வழியில் வைத்து தொடங்கிய விசுவாசம், இயேசு வீட்டிற்கு வரும்வரை நீடித்தது. "வீடு" என்று சொல்லப்படுவது தேவனுடைய ஆலயத்தைக் குறிக்கிறது. வழியில் வைத்து சுகம் கொடுக்காமல், ஆலயத்தில் வைத்து இயேசு சுகம் கொடுத்தார். அவர்களுடைய கண்களை அவர் தொட்டார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. அவர்கள் இயேசுவின் சாட்சிகளாக மாறினார்கள். உங்களுக்கும் சுகம் கொடுக்க தேவன் உங்களை தேவனுடைய ஆலயத்திற்கு அழைக்கிறார்.

இயேசுவை நோக்கிக் கூப்பிட்டுக் கொண்டே அவருக்குப் பின்சென்ற இவ்விரண்டு குருடர்களும், தாவீதின் குமாரனாகிய இயேசுவை ஆண்டவரென்றும், அவர்களுடைய கண்களைத் திறக்க இயேசுவுக்கு வல்லமையுண்டென்றும் அறிக்கையிட்டபோது கண்கள் திறக்கப்பட்டு பார்வையடைந்ததுபோல நீங்களும் கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய வல்லமையை வாயார அறிக்கையிடும்போது அடைக்கப்பட்டிருக்கும் அற்புதவாசல்கள் திறந்து வழிகள் உருவாகும். திறந்த வாசல்கள் உங்களை வரவேற்று, சாட்சிகளாக உயர்த்தி நிறுத்தும். ஆகவே ஆலயத்துக்குச் செல்ல தவறாதிருங்கள். மீண்டும் மீண்டும் அவரை வருந்திக் கூப்பிடுங்கள் நிச்சயமாக அற்புதம் நடக்கும்.

10

ஊமையான மனுஷனைக் குணமாக்குதல்

மத்தேயு 9: 32-34

*32. அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசுபிடித்த ஊமையான ஒரு
மனுஷனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.*
*33. பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். ஜனங்கள்
ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை
என்றார்கள்.*
*34. பரிசேயரோ: இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத்
துரத்துகிறான் என்றார்கள்.*

*****

பிசாசுபிடித்த ஊமையான மனுஷனைக் குறித்த இச்சம்பவம் இரண்டு சுவிசேஷங்களில் கூறப்பட்டிருந்தாலும் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளதையே குறிப்பிட விரும்புகிறேன்.

பிசாசு துரத்தப்பட்டதால் விடுதலை:

ஊமையான மனுஷனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். அவனுக்குள் இருந்த பிசாசானவன் அவனைப் பேசவிடாமல் அவனுடைய நாவைக் கட்டியிருந்தான். இயேசு அவனுக்குள் இருந்த பிசாசை விரட்டிய பிறகு அவன் பேச ஆரம்பித்தான். இந்த சம்பவம் ஜனங்களை ஆச்சரியப்பட வைத்தது. இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள்.

இன்று காணப்படும் பெரும்பாலான எல்லா வியாதிகளுக்கும் காரணம் பிசாசு தான். ஆஸ்பத்திரிக்குப் போய் எத்தனை Scan செய்தாலும் அவருடைய நோய்களை என்னவென்று கண்டுபிடிக்க முடிவதில்லை. கைகளும் கால்களும் தளர்ந்து போதல், திடீரென்று உடலில் ஏற்படும்

களுக்கு, போன்றவற்றிற்கெல்லாம் காரணம் பெரும்பாலும் பிசாசுதான் என்பதை மனிதனால் கண்டுபிடிப்பது கடினம். 18 வருடமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட எவ்வளவும் நிமிரமுடியாத கூனியாயிருந்தவளின் நோயின் காரணம் பெலவீனப்படுத்தும் ஆவிதான் என்பதை யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இயேசு அந்த ஆவியை துரத்தியவுடன் வியாதி அவளை விட்டு அகன்றது. மலையாள வேதாகமத்தில் "உன் வாதை ஒழிந்து சொஸ்தமாயிரு" என்று இயேசு அவளைப் பார்த்துச் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது. எனவே அவளுடைய வியாதிக்குக் காரணம் பிசாசு (வாதை) தான் என்பதை இயேசு அறிந்திருந்தார் என்பது தெளிவாகிறது.

மேலும் இந்த அற்புதத்தின் பின் அமைந்திருக்கும் வெற்றியின் இரகசியம் இந்த ஊமையான மனுஷனை இயேசுவிடம் கொண்டு வந்தவர்களுடைய தைரியமும், விசுவாசமும் தான். மருத்துவர்களால் குணமாக்கமுடியாத வியாதியஸ்தர்களாயிருந்தாலும் அவர்களை இயேசுவிடம் கொண்டு வந்தால், அவர் சுகமாக்குவார். இவ்விதமாய் நோய்வாய்ப்பட்டு பெலவீனமடைந்த உறவினர்களோ, நண்பர்களோ இருந்தால் அவர்களை விசுவாசத்துடன் இயேசுவிடம் கொண்டு சேர்த்துவிடுங்கள். உங்கள் விசுவாசத்துடன் கூடிய முயற்சியைக் கனம்பண்ணுகிறவிதமாய் அவர்களுக்கு நிச்சயம் விடுதலை அளிப்பார். பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்கி, அவனுடைய கொடூரமும் பயங்கரமுமான மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியாத கிரியைகளையெல்லாம் அகற்றி முழுமையானதொரு சுகத்தையும், விடுதலையையும் இயேசு கட்டளையிடுவார். விசுவாசிக்கிற உங்களை நோயோ, பேயோ இனிமேல் வேதனைப்படுத்த முடியாது. ஆரோக்கியமும், விடுதலையும் நிரந்தரமாகும்.

11

சூம்பின கையையுடைய மனிதனைக் குணமாக்குதல்

மத்தேயு 12: 9-13

9. *அவர் அவ்விடம் விட்டுப்போய், அவர்களுடைய ஜெப ஆலயத்தில்*
பிரவேசித்தார்.

10. *அங்கே சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான்.*
அப்பொழுது, அவர்மேல் குற்றஞ்சாட்டும்படிக்கு, ஓய்வுநாளில்
சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள்.

11. *அதற்கு அவர் : உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு*
இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத்
தூக்கிவிடமாட்டானோ?

12. *ஆட்டைப் பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ*
விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மை செய்வது
நியாயந்தான் என்று சொன்னார்.

13. *பின்பு அந்த மனுஷனை நோக்கி : உன் கையை நீட்டு என்றார்.*
அவன் நீட்டினான் அது மறுகையைப் போல் சொஸ்தமாயிற்று.

*****

இந்நிகழ்வு மூன்று சுவிசேஷங்களிலும் குறிப்பிடப்பட்டிருப்பினும் நாம் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளதைச் சிந்திப்போம்.

இயேசு பரிசேயருடைய ஆலயத்திற்குப் பிரசங்கம் பண்ணப்போவது வழக்கம். ஆலயத்திற்கு வருகின்ற பலர் நோயாளிகளாகவும், பிசாசினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். இந்த மனிதனும் சூம்பின கையுடையவனாக இருந்தாலும், ஆலயத்திற்கு வருவது வழக்கம். இன்று, ஆலயத்திற்கு வருகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் (உண்மை நிலை) என்று

அறிய வேண்டுமேயானால் இயேசு ஆலயத்திற்கு வர வேண்டும். ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும் படியாகவே இந்த அற்புதம் நடந்தது. (மத் 12:17)

இந்த அற்புதம் நடப்பதற்கானக் காரணங்கள்:

1. சூம்பின கையுடையவனாக இருந்தபோதிலும் தன் பெலவீனத்தைக் குறித்து வெட்கப்படாமல் ஆலயத்திற்கு வந்தான்.
2. இயேசு கையை நீட்டச் சொன்னவுடன் கீழ்ப்படிந்தான்.
3. நீ எழுந்து நடுவில் நில் என்றுச் சொன்னவுடன் எழுந்து நின்றான் (லூக்கா 6:8)

அவனுடைய இச்செயல்கள் அவன் ஒரு கீழ்ப்படிதலுள்ள விசுவாசி என்பதைத் தெரிவிக்கிறது. ஆரோக்கியமானவர்களே ஆலயத்திற்கு வர தயங்கும் போது இந்த ஊனமுற்றவன் வாஞ்சையுடன் ஆலயத்திற்கு வந்திருக்கிறான். அன்று அவன் ஆலயத்திற்கு வரவில்லையென்றால் அவன் குணமாக வாய்ப்பில்லை. இயேசுவிடம் குறைகாண வகைதேடியவர்களின் மத்தியில் இவன் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து கையை அவன் நீட்டினான். அது மறுகையைப்போல் சொஸ்தமாயிற்று (மத் : 12:13).

ஆலயத்திற்கு ஒழுங்காக வருபவர்கள் என்றாவது ஒருநாள் எதிர்பாராதவிதமாய் அற்புதத்தைக் கட்டாயமாய்க் காண்பார்கள். இவ்வளவு நாட்களாகியும் நோய் குணமாகவில்லை என்பதற்காக சோர்ந்து போகக் கூடாது. கர்த்தர் நிச்சயம் அற்புதம் செய்வார். அனைவருக்கும் முன்பாக அவன் கெம்பீரமாக எழுந்து நின்றது போல ஒருநாள் நீங்களும் சாட்சியாய் எழும்பி பிரகாசிக்கலாம். ஒருவேளை நீங்கள் பெலவீனமுடையவர் களாயிருப்பதும், உங்கள் அடிமனம் அதினிமித்தம் சோர்ந்துபோயிருப்பதும் உண்மையாயிருக்கலாம். பெலனும், அழகும், சுகமும் இல்லாதிருந்தும் இயேசு மதிக்கப்படுகிறதற்கேதுவானதொரு வாழ்க்கையை நீங்கள் வாழ்வீரகளானால் உங்களைக் குறித்து அவருடைய இருதயம் மகிழும். ஆச்சரியப்படத்தக் கவிதமாய் எதிர்பாராத நேரத்தில் திடீரென்று வேண்டிக்கொள்ளாதிருக்கும் போதே சூம்பின கையையுடையவன் சுகம்பெற்றுக்கொண்டதுபோல, உங்கள் நினைவுக்கும், எதிர்பார்ப்பிற்கும் அப்பாற்பட்டவிதமாக அற்புதங்கள் உங்களுடைய எல்லைகளை வந்துசேரும். நீங்கள் சுகமும், சந்தோஷமும் பெற்றுக்கொண்ட அற்புத சாட்சிகளாக மாற்றப்படுவீர்கள்.

12

குருடும் ஊமையுமானவனைக் குணமாக்குதல்

மத்தேயு 12:22,23

22. அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவ[ன்] அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான். குருடும் ஊமையுமானவ[ன்] பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார்.

23. ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு : தாவீதின் குமார[ன்] இவர்தானோ? என்றார்கள்.

*****

இந்நிகழ்வு மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்[று] சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் மாற்கு சுவிசேஷத்தி[ல்] தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

மூன்று காரியங்களில் அற்புதம்:

இதற்கு முன்பு நடந்த எல்லா அற்புதங்களும் ஒரே ஒ[ரு] பெலவீனத்தை மாற்றும்படியாகத்தான். ஆனால் இவனுக்கோ மூன்[று] காரியங்களில் அற்புதம் தேவைப்பட்டது. ஏனெனில் அவ[ன்] குருடனாயிருந்தான்; ஊமையனாயிருந்தான்; பிசாசுபிடித்தவனாயிருந்தா[ன்] தனது மூன்று பிரச்சினைகளுக்கும் இயேசுவிடமிருந்து ஒரே நேரத்தி[ல்] தீர்வைப் பெற்றான்.

1) பார்வையடைந்தான்,

2) பேசினான்,

3) அவனிடம் இருந்த பிசாசு அவனை விட்டு நீங்கப்பெற்றான்.

ஒரு மனிதனுக்கு எத்தனை நோய்கள் இருந்தாலும் சரி, இயேசுவின் ஒரே வார்த்தையால், அத்தனை நோய்களும் பேய்களும் அகன்று போகும்.

இன்று பல மனிதர்கள் பல நோய்களுடனும் பிரச்சினைகளுடனும் காணப்படுகின்றனர். இந்த குருடும், ஊமையுமான மனிதன் இயேசுவிடம் வந்தது போல இயேசுவிடம் வந்தால் இயேசு நிச்சயம் அற்புதம் செய்வார். குருடும் ஊமையுமாயிருந்தவன் இயேசுவின் அருகில் கொண்டுவரப்பட்டபோது பிசாசு விலகி, கண்களில் பார்வையடைந்து, நாவினால் பேசி இருள்நீங்கி வெளிச்சத்துக்குள் பிரவேசித்தான். அதுபோல நீங்களும் இயேசுவுக்கு அருகில் வரும்போது காணவும் பெற்றுக்கொள்ளவும் முடியாதபடி மறைக்கப்பட்டவைகளாயிருந்த ஆசீர்வாதங்களையும், மேன்மைகளையும், உயர்வுகளையும் உங்கள் கண்கள் காண்பதோடு, அடைக்கப்பட்டுப்போன உங்கள் வாய் திறந்து உங்களுக்கு நன்மை செய்தவராகிய தேவனை மகிமைப்படுத்த ஆரம்பித்துவிடுவீர்கள். ஆசீர்வாதங்களுக்குள் தேவனோடுகூட சமாதானமும், சந்தோஷமும், சுகவாழ்வும் ஓங்க வாழ்ந்து சுகிப்பீர்கள்.

13

ஐந்து அப்பங்களைப் பலுகச் செய்தல்

மத்தேயு 14 : 13-21

13 இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான
ஓர் இடத்துக்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு,
பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்.
14 இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி,
அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.
15 சாயங்காலமானபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து:
இது வனாந்தரமான இடம், நேரமுமாயிற்று, ஜனங்கள் கிராமங்களுக்குப்
போய்த் தங்களுக்குப் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி
அவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்.
16 இயேசு அவர்களை நோக்கி : அவர்கள் போக வேண்டுவதில்லை:
நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார்.
17 அதற்கு அவர்கள் : இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு
மீன்களுமேயல்லாமல் வேறொன்றும் இல்லை என்றார்கள்.
18 அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.
19 அப்பொழுது, அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக்
கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு
மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து,
அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள்
ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்.

20. எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்.

21. ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.

*****

இயேசு இருந்த மலையில், அவருடன் இருந்த மக்கள் சாப்பிடுவதற்காக வந்தவர்களல்ல. அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காகவும், விடுதலை பெறுவதற்காகவும் வந்தவர்களே. ஆனால் அவர்களின் பசியைக் குறித்து இயேசு அக்கறை கொண்டவராயிருந்தார். ஜனங்களுக்குத் தாம் செய்யப் போவதை அவர் யாரிடமும் சொல்லவில்லை (யோவான் 6:6). உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு (மாற் 6:38) என்று கேட்ட இயேசுவிடம், தம்மிடம் இருந்தவற்றை ஒப்புக்கொடுத்தபோது அற்புதம் நடந்தது. அப்பம் வசனத்தைக் குறிக்கின்றது. பல நேரங்களில் நாம் வேதவசனத்தை லேசாக நினைத்துக் கொண்டு அதை வெளியே எடுத்துக்கொள்வதில்லை. இருக்கிற சகலத்தையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கின்ற வாழ்க்கை தான் ஆசீர்வதிக்கப்பட முடியும். தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து, உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான். உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர். கடன்கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள். எலிசா அவளை நோக்கி : நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான் (II ராஜா 4:1-7). அவள் வீட்டிலிருந்த எண்ணெயை எலிசாவின் கையில் கொடுத்ததால் அது அற்புதமாக மாறிற்று. நம்முடைய கஷ்டங்களும், நஷ்டங்களும், கடன்பாரங்களும் மாற வேண்டுமென்றால் எதையும் மறைத்து வைக்காமல் தேவகரங்களில் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் ஐயாயிரம் பேருக்கு உணவானது:

சிறுவனின் கைகளிலிருந்து இயேசுவின் அன்பு நிறைந்த கைகளையடைந்த ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும், அவருடைய

ஆசீர்வாதத்துடன் கலந்த பிற்பாடு பரிமாறப்பட்டபோது சாப்பிட்ட புருஷர் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தனர் (மாற் 6:44) என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஸ்திரீகளின் எண்ணிக்கையோ, குழந்தைகளின் எண்ணிக்கையோ இங்கு குறிப்பிடப்படவில்லை. ஒருவருக்குக் கூட சாப்பிட முடியாத அளவாக இருந்த இந்த அப்பம் எப்படி ஐயாயிரம் பேருக்கு உணவானது? அதுவும் பன்னிரண்டு கூடைகள் மீதம் வருமளவுக்கு?

1. தங்களிடம் இருந்த சகலத்தையும் அவரிடம் ஒப்படைத்தார்கள்.
2. இயேசு சொன்னபடியே புல்தரைமீது உட்கார்ந்தார்கள்.
3. பந்திக்கு ஐம்பது ஐம்பது பேராக உட்காரும்படிச் சொன்னபோது ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு உட்கார்ந்தார்கள்.
4. இயேசு அவற்றை எடுத்து வானத்தை அண்ணாந்துப் பார்த்து ஆசீர்வதித்தார்.
5. ஜனங்களுக்கு முன் வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தபோது அவர்கள் அப்படியே செய்தார்கள்.

இன்று இப்படிப்பட்ட அற்புதங்கள் நடக்காததற்கான காரணங்கள்:

1. நம்மிடமுள்ளதை தேவகரங்களில் கொடுக்க வேண்டும். அதை எப்படி கொடுப்பது? கர்த்தர் கொடுத்துள்ள எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்க வேண்டும். அதைச் செய்யத் தவறுவது நமது அற்புதத்தைத் தடைசெய்யும்.
2. புல்வெளி மீது உட்காரச் செய்தார். இது தேவ சந்நிதானத்தில் நாம் பணிவாக இருக்க வேண்டியதைக் குறிக்கிறது. வலியவனும் சிறியவனும் ஒரே பந்தியில் உட்கார்ந்தனர். இது சமதர்மத்தையும், ஒற்றுமையையும் குறிக்கிறது. நூறு விசுவாசிகளைக் கொண்ட சபைகளுண்டு. ஆயிரம் விசுவாசிகளைக் கொண்ட சபைகளுமுண்டு. இந்த பந்தியில் அமர்பவர்களுக்கு மட்டுமே அப்பம் உண்டு. ஒருமனமின்மையும், ஒற்றுமைக்கேடும் அற்புதங்கள் நடைபெறாமல் தடுக்கும்.

3. வசன ஒழுங்குகளின்படி இல்லாமல் தேவனிடத்திலிருந்து எதையாகிலும் பெற்றுக் கொள்ளலாமென்று நினைக்க வேண்டாம். ஏனென்றால் தேவ காரியங்களுக்கென்று சில ஒழுங்குமுறைகளுண்டு.

4. அவர் அப்பத்தையும், மீனையும் எடுத்து வானத்தை அண்ணாந்துப் பார்த்து ஜெபித்தார் (மாற் 6:41). இது தேவபிள்ளைகளோடுள்ள ஒத்துழைப்பைக் குறிக்கும். சமர்ப்பணம், பணிவு, வசனத்தின்படியான வாழ்வு, தேவ பிள்ளைகளோடு ஐக்கியம், தேவ பிள்ளைகளோடான ஒத்துழைப்பு இவை யாவும் இருந்தால்தான் தேவன் நம்முடைய வாழ்வையும் வர்த்திக்கப் பண்ணுவார். அனைவரும் உணவருந்தியபின் பன்னிரண்டு கூடைகள் மீதமிருந்தது. நம்மிடமிருக்கிறதை இயேசுவிடம் ஒப்படைத்தால் நமக்குத் தேவையானதைவிட அதிகமாகவே தருவார்.

14

கடலின் மீது நடத்தல்

மத்தேயு 14:23-27

23. அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்.

24. அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது.

25. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

26. அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.

27. உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.

*****

இந்த அற்புதம் மூன்று சுவிசேஷங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு எழுதிய சுவிசேஷத்தின் இப்பகுதியை நம் சிந்தனைக்காக எடுத்துக் கொள்வோம்.

1. அவர்களை அனுப்பியவர் இயேசு:

உயிர்த்தெழுந்த இயேசு தம் சீடர்களைப் பார்த்து, "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கிக் கொள்ளுங்கள் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று கூறினார். நம்மை அனுப்பியவர் இயேசுதானென்றால், நமக்கான முழுஉத்தரவாதம் இயேசுவுடையது தான்.

2. இயேசு தம்முடைய சீடர்களின் பிரயாணத்திற்காக ஜெபிக்க மலையின் மீது சென்றார்:

எல்லா படகு பிரயாணங்களிலும் இயேசு தம் சீடர்களோடு இருந்தார். ஆனால் இந்த பிரயாணத்தில் இயேசு அவர்களோடு இல்லை. ஆனாலும் தக்கநேரத்தில் வந்து அவர்களைக் காப்பாற்றினார்.

3. நடுக்கடலில் அலையும் படகை இயேசு கண்டார்:

நம் அலைச்சல்களை கர்த்தர் எண்ணியிருக்கிறார் (சங். 56:8). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிற்காக அலைபவர்களின் அலைச்சலை அவர் கண்ணோக்குகிறார்.

4. இரவின் நாலாம் ஜாமத்திலே அவர்களிடத்தில் வந்தார்:

நாம் கஷ்டப்படுகின்ற நேரம் எங்கோ தூரத்தில் இருப்பவரல்ல இயேசு. உடனே நம் அருகில் விரைந்து வருவார். தீச்சூளையிலுள்ளே இறங்கி வந்த தேவன் (தானி 3:21-25), இரவின் நாலாம் ஜாமத்திலே கடலின்மேல் நடந்து அவர்களிடத்தில் வந்தார்.

5. அவர்களை தைரியப்படுத்துகின்ற இயேசு:

இயேசு திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் (மத் 14:27) என்று சொல்லி தம்மை வெளிப்படுத்துகிற தேவனாயிருக்கிறார். எனவேதான் தேவன் ஸ்தேவானுடைய மரணநேரத்தில் அவரை தைரியப்படுத்த தம்மை வெளிப்படுத்தினார். வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் (அப் 7:56) ஸ்தேவான் கண்டு மரணநேரத்திலும் தைரியமாக பிரகாசித்தார்.

6. இத்தனை செய்தும் பேதுருவின் சந்தேகம் தீரவில்லை: (மத் 14:28)

கர்த்தருடைய அன்பை எத்தனை தடவை ருசித்தாலும், அனுபவித்தாலும் சந்தேகம் தீராத பேதுருக்கள் இன்று பலருண்டு. இவர்களுடைய சந்தேகம் தீரவேண்டுமென்றால் தேவனுடைய அனுமதியுடன், பேதுருவைப்போல சிறிது தண்ணீர் குடிக்க வேண்டியது தான். என்றாலும் தேவன் மூழ்க அனுமதிக்க மாட்டார். அவர் கைநீட்டி ஜலப்பிரவாகத்திலிருந்து தூக்கி விடுவார் (சங்:18:16). இயேசு படவில் ஏறியதும் காற்று அமரும்

15

(மத்14:32). "நீர் மெய்யாகவே தேவனுடைய குமாரன்" என்று சொல்லி, அவரைப் பணிந்து கொள்ளச் செய்வார் (மத் 14:38).

கெனேசரேத்து நாட்டில் நடந்த அற்புதங்கள்

மத்தேயு 14:34-36

34. பின்பு, அவர்கள் கடலைக் கடந்து, கெனேசரேத்து நாட்டில் சேர்ந்தார்கள்.
35. அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும்
செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில்
கொண்டுவந்து,
36. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி
உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; தொட்ட
யாவரும் சொஸ்தமானார்கள்.

*****

கெனேசரேத்தின் அற்புதங்கள் மத்தேயு, மாற்கு ஆகிய இரண்டு சுவிசேஷங்களில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. மாற்கு சுவிசேஷத்தில் எழுதப்பட்ட சம்பவத்தை மட்டும் விவரிக்க விரும்புகிறேன்.

1. கெனேசரேத்து நாட்டு மக்கள் எளியவர்களும், வருமானமில்லாதவர்களுமாயிருந்தும் சுவிசேஷத்துக்காகக் கொடுக்கிறவர்கள்:

ஒருமுறை இயேசு கெனேசரேத்துக் கடற்கரையில், தன்னுடைய படகை இயேசுவுக்குக் கொடுத்தார். ஏழைகளாக இருந்தாலும்,

சுவிசேஷத்திற்காக தங்கள் உடமைகளை விட்டுக்கொடுக்கும் மன அவர்களிடம் இருந்தது (லூக் 5:1-5).

2. கெனேசரேத்து நாட்டு மக்கள் இயேசுவை அறிந்தவர்கள்:

பல நேரத்தில் இயேசுவோடிருந்த சீடர்கள்கூட இயேசுவை அறிந்து கொள்ளவில்லை. "இவர் யாரோ" (மாற் 4:41) என்றனர். ஆனால் இவர்களோ இயேசுவை அறிந்தவர்கள்.

3. இயேசுவைப் பறைசாற்றினர் :

இயேசு கெனேசரேத்து வந்ததை அறிந்த மக்கள் எல்லா இடங்களுக்கும் சுற்றித்திரிந்து அவர் அங்கு வந்திருக்கின்ற செய்தியை அறிவித்தனர் (மாற் 6:55). இதைப் போலத்தான் சமாரிய ஸ்திரீயும், தான் கண்ட இயேசுவை ஊருக்குள் சென்று பறைசாற்றினாள் (யோவான் 4:28-29)

4. பிணியாளிகளை இயேசுவிடம் கொண்டுவந்தனர் :

பிணியாளிகளைப் படுக்கையில் கிடத்தி அவரிடம் கொண்டு வந்தார்கள்.

5. இயேசுவின் வல்லமையை விசுவாசித்தனர் :

இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாலே சுகம் கிடைக்கும் என்று விசுவாசித்தார்கள்.

6. இயேசுவிடம் அனுமதி கேட்டனர்:

இயேசு சென்ற இடங்களில் நோயாளிகளைக் கிடத்தி, இயேசுவைத் தொட அனுமதி கேட்டார்கள். இயேசுவைத் தொட்ட அனைவரும் சொஸ்தமானார்கள்.

இயேசுவை அறிந்தவர்கள் அவர்களுடைய அர்ப்பணத்தினால் பிறருக்கு இயேசுவை அறிவித்து விசுவாசத்தோடு பிணியாளிகளைக் கொண்டுவந்து கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பயன்படுத்தினதால் கெனேசரேத்து நாடு விமோசனமடைந்த நாடாக மாறியது. கெனேசரேத்து நாட்டு மக்கள் செய்தது போல நாமும் பொழுதை வீணாக்காமல் நாம் அறிந்த இயேசுவை மற்றவர்களுக்கும் அறிவிப்போமேயானால் அவர் அவர்களைத் தொடுவார். அவர்களும் சொஸ்தமாவார்கள்.


GOODSALT.COM

16

கானானிய ஸ்திரீயின் மகளைச் சுகமாக்குதல்

மத்தேயு 15:21-28

21. பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு,தீரு சீதோன் பட்டணங்களி
திசைகளுக்குப் போனார்.

22. அப்பொழுது, அந்த திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்
அவரிடத்தில் வந்து:ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கு
என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லி
கூப்பிட்டாள்.

23. அவளுக்குப் பிரதியுத்தரமாக "அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை
அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்
கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவ
வேண்டிக்கொண்டார்கள்.

24. அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவே
வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றா

25. அவள் வந்து : ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரை
பணிந்து கொண்டாள்.

26. அவர் அவளை நோக்கி : பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து
நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.

27. அதற்கு அவள் : மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள்
தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளை
தின்னுமே என்றாள்.

28. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக : ஸ்திரீயே, உன் விசுவாச
பெரிது; நீ விரும்புகிற படி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே
அவள் மகள் ஆரோக்கியமானாள்.

இந்த சம்பவம் இரண்டு சுவிசேஷங்களில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள சம்பவம் தான் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. கானானிய ஸ்திரீயின் மகள் அற்புதமாக சுகமாக்கப்பட்ட இந்த சம்பவத்தைக் குறித்து சிந்திப்பதற்கு முன்னால், கானானியர் யார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம், காம், யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன் (ஆதி 9:18). அப்படியென்றால் கானான் என்பவன் நோவாவின் பேரன். தன் தகப்பன் செய்த தவறுக்காக தன் தாத்தா நோவாவிடமிருந்து சாபத்தைப் பெற்றுக் கொண்டான் (ஆதி 9:24,25). கானானிடமிருந்து கானானிய வம்சம் உண்டானது (ஆதி. 10:15-18). ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கிற்கு கானானிய குமாரத்திகளின் பெண் கொள்ளவில்லை (ஆதி. 24:3). தேவ ஜனமாகிய இஸ்ரவேல் மக்கள் கானானியரைத் துரத்தினார்கள். (யாத்.34:11) கானானியர்கள் என்பவர்கள் தேவனாலும் மனிதர்களாலும் வெறுக்கப்பட்டவர்கள் என்பதை இதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அந்த வம்சத்திற்குட்பட்ட இந்த ஸ்திரீக்கு ஏன் இயேசு அற்புதம் செய்தார் என்பது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று.

கானானிய ஸ்திரீயின் மகளுக்கு அற்புதம் செய்ய காரணம் :

* சமுதாயத்திற்கு பயப்படாமல் பயத்தைப் புறம்பே தள்ளிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்தாள்.

* எனக்கு இரங்கும் என்று தன்னுடைய மகளுக்கு உதவி செய்யுமாறு இயேசுவிடம் வேண்டினாள்.

* பதில் சொல்லாத போதிலும் இயேசுவைப் பொறுமையோடு பின் தொடர்ந்தாள் (மத் 15:23).

* இயேசுவிடமிருந்து வந்த பதில் மனதைப் புண்படுத்தும்விதமாக இருந்தபோதிலும் அவள் மனம்தளரவில்லை (மத் 15:26).

* இயேசு இரங்க மறுத்தபோதும், விட்டுவிடாமல் மீண்டும் வந்து இயேசுவைப் பணிந்து கொண்டாள் (மத் 15:25).

* எஜமான்களின் மேஜையிலிருந்து விழுவதால் நாய்க்குட்டிகளுக்குக் கிடைக்கும் துணிக்கைகளைப் போல பிள்ளைகளுக்குரிய அற்புதம் என்னும் அப்பத்திலிருந்து விழும் துணிக்கைகள் எனக்கு வேண்டும் என்று கேட்குமளவுக்குத் தன்னைத் தாழ்த்தினாள் (மத் 15:27). அதனால் தான்,

இயேசு அவளைப் பார்த்தார். ஸ்திரியே உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார் (மத் 15:28). அவள் இயேசுவைப் பின் தொடர்ந்து தன்னுடைய மகளுக்காக மட்டுமே. ஆனால் அவளுக்குக் கிடைத்ததோ இரண்டு மடங்கு ஆசீர்வாதம்.

சில நேரங்களில் நம்முடைய ஜெபங்களுக்கு உடனடியாக பதில் கிடைக்காமல் இருக்கலாம். அதற்காக மனம்தளரக் கூடாது. தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். உங்கள் கண்ணீரைக் கண்டு கொள்ளாததால் அல்ல, உங்கள் விசுவாசத்தை அளக்கவே தேவன் காலந்தாழ்த்துகிறார். அதில் நாம் வெற்றி பெற்றால் நம்மை அதிகமான நன்மைகளால் முடிசூட்டுவார். பிதாக்களால் உண்டான சாபத்தை மாற்றினார் (உபா.5:9). ஆகவே மனஞ்சலித்துப் போகாதபடி நம்மை மென்மேலும் தாழ்த்திக் கெஞ்சி இயேசுவையன்றி வேறுவழியில்லையென்று அவருடைய சமூகத்தை மாத்திரம் நோக்கிக் காத்திருந்தால், அவர் நம் விசுவாசத்தைக் கணக்கிட்டு, விலைமதித்து நம்மை அற்புதங்களால் முடிசூட்டி சந்தோஷப்படுத்துவார். நம்முடைய கண்ணீரும், கஷ்டங்களும் நம்மைவிட்டு மாறிப்போகும். இயேசுவை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுகிற உங்களை அவர் மேன்மைப்படுத்துவது உறுதி. நம்பினதற்கு மாறாகவே எல்லாம் நிகழ்ந்தாலும் மனம்பதறிகூட அவிசுவாச வார்த்தைகளைப் பேசிவிடாதிருங்கள். நீங்கள் சொல்லுகிற வார்த்தையினிமித்தம்தான் (மாற்கு 7:29) அற்புதம் உண்டாகும் என்பதை மறந்துவிடாதிருங்கள். உங்கள் இருதயத்தாலும், வார்த்தைகளாலும் இயேசுவைக் கவர்ந்துகொள்ள தவறாதிருங்கள்.

17

ஏழு அப்பங்களைப் பலுகச் செய்தல்

மத்தேயு 15: 32-39

32. பின்பு இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து : ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்று நாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்.

33. அதற்கு அவருடைய சீஷர்கள் : இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்.

34. அதற்கு இயேசு உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள் : ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களும் உண்டு என்றார்கள்.

35. அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளையிட்டு,

36. அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்.

37. எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள்.

38. ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்.

39. அவர் ஜனங்களை அனுப்பிவிட்டு, படவில் ஏறி, மக்தலாவின் எல்லைகளுக்கு வந்தார்.

*****

இந்த அற்புதம் இரண்டு சுவிசேஷங்களில் மட்டும் கூறப்பட்டுள்ளது. நாம் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளதை தியானிப்போம். இந்த சம்பவம் கலிலேயாக் கடலின் அருகேயுள்ள மலையில் நடந்தது. இயேசு இருக்குமிடத்தில் ஜனங்கள் ஒன்று சேர்வது வழக்கம். இயேசு மலையின் மேல் சென்றாலும் கூட திரளான ஜனங்கள் ஒன்று கூடுவது வழக்கம். அவர்களில் பலரும் குருடர், ஊமையர், சப்பாணி, பிணியாளிகள் ஆவர். அவர்களை இயேசுவின் காலடியில் கொண்டு வந்தனர். அவர் அவர்களை சொஸ்தமாக்கினார். இன்றும் இயேசுவின் பாதத்தண்டை வருபவர்களின் பிரச்சனைகள் எல்லாவற்றிற்கும் அவர் தீர்வு தருவார்.

இயேசுவின் கரிசனையுள்ள வார்த்தைகள்:

1. ஜனங்களுக்காய் பரிதபிக்கிறேன் :

சொந்த பந்தங்கள்கூட மனமிரங்காத வேளைகளில் இயேசு மாத்திரமே நமக்காக மனமிரங்குகிறார். இன்று அநேகருடைய மனதில் இரக்கமில்லை. ஆனால் ஒரு தகப்பன் தன் குழந்தைகளுக்கு இரங்குவது போல தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரங்குகிறார். இந்த மன இரக்கத்தை (உருக்கம்) நாம் நல்ல சமாரியனிடம் காணலாம். (லூக்கா 10:30)

2. என்னிடத்தில் மூன்று நாட்கள் தங்கியிருக்கிறார்கள் (மத் 15:32)

வந்தவர்களில் யாரும் வந்து மூன்று நாட்களாகி விட்டதே என்று சொல்லவில்லை. ஆனால் இயேசுவுக்கு அதைப்பற்றி எண்ணம் இருந்தது. மேலும் அவர்கள் பட்டினியாய் இருப்பதை இயேசு விரும்பவில்லை.

3. சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்

சாப்பிட ஒன்றுமில்லையென்று யாரும் இயேசுவிடம் சொல்லவில்லை. ஆனால் இயேசு அவர்களின் மன எண்ணங்களை அறிந்தவர். அவர் அவர்களின் தேவையை உணர்ந்தார். ஏனென்றால் அவர் அனைத்தையும் அறிந்தவர்.

4. அவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை:

"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது" என்கிறார் தாவீது (சங் 34:10). தன் பிள்ளைகளுக்கு ஒருபோதும், அவர் எந்த விதத்திலும் குறைவை அனுமதிக்கமாட்டார்.

5. வழியில் சோர்ந்து போவார்களே:

நாம் நாடுகிற துறைமுகத்தில் நம்மைக் கொண்டு வந்து சேர்க்கிறார் (சங் 107:30). மேலும் நம்மை அழைத்த தேவன் கடைசிபரியந்தம் நடத்துவார். வழியில் விட்டுவிட மாட்டார். வழியில் சோர்வுகள் நேரிட்டாலும் அந்த சோர்வுகளினால் மடிந்துபோக விடமாட்டார்.

அற்புதம் செய்வதற்கு முன் இயேசு செய்த காரியங்கள்

1. உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு என்று கேட்டார். ஐந்து அப்பங்களை பலுகச் செய்த வேளையிலும் இயேசு இதே கேள்வியைக் கேட்டார். எல்லா அற்புதங்களிலும் மனிதர்களின் பங்கேற்பை அவர் விரும்பினார். இயேசு கேட்டபோது சீஷர்கள் தங்களிடம் இருந்ததை இயேசுவிடம் கொடுத்தார்கள்.

2. ஜனங்களைத் தரையில் உட்காரச் சொன்னார். இங்கு உட்காருதல் பணிவைக் குறிக்கிறது.

3. அப்பத்தைக் கையிலெடுத்து ஸ்தோத்திரத்தினால் நாமும் தேவனை மகிமைப்படுத்துவதற்காக இதை இயேசு செய்துகாட்டினார். தேவன் தந்திருப்பவற்றிற்காக ஸ்தோத்திரம் செலுத்தும்போது நம் தேவைகள் சந்திக்கப்படும்.

5. அப்பத்தைப்பிட்டு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் மூலமாகத்தான் இந்த அற்புதம் மனிதர்களிடம் வந்து சேர்ந்தது.

பரிமாறுதலும், இவ்வற்புதமும்:

1. சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். பரிமாற பரிமாற ஏழு அப்பங்களும் பெருக ஆரம்பித்தன. இன்றைய சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறுவதற்குப் பதிலாக தங்களின் வயிற்றை நிரப்புகிறார்கள். எதையும் பரிமாறாமல் மாளிகைகளையும், சொத்துக்களையும் தங்கள் தலைமுறைகளுக்கென சம்பாதித்து வைக்கிறார்கள்.

2. சீஷர்கள் பரிமாறியதை அனைவரும் திருப்தியாகச் சாப்பிட்டனர். இன்றைய ஜனத்திற்குத் திருப்தி இல்லாததன் காரணம் கர்த்தர் கொடுத்ததைப் பரிமாறாததால் தான்.

3. மீதமிருந்ததை ஏழு கூடைகளில் நிரப்பினார்கள். அப்பம் வேத வசனத்தைக் குறிக்கிறது. ஏழு அப்பங்களைக் கையில் வைத்துக் கொண்டு, ஆயுள் முழுக்க பிரசங்கித்தாலும், ஜனங்களுக்குத் திருப்தி ஏற்படாது. அதை தேவகரங்களில் ஒப்புக்கொடுக்கும்போது ஸ்தோத்திரத்தோடும், விண்ணப்பத்தோடும் அதை வர்த்திக்கப் பண்ணுவார். ஜனங்களின் ஆவீ ஆத்தும சரீரத்தில் திருப்தி ஏற்படும்.

பிரியமானவர்களே, ஒருவேளை நீங்கள் நேசித்த நண்பர்கள், உறவினர்களுக்காக நீங்கள் அனுபவித்த தியாகங்கள், கரிசனை நிறைந்த உங்கள் வார்த்தைகள் செயல்கள் எல்லாம் ஒன்றுமே இல்லாததுபோல மறக்கப்பட்டுப் போகலாம். ஆனால் இயேசுவின்மீது நீங்கள் வைத்த அன்பும், உங்கள் தியாகமும் அவருடைய அன்பிற்காக கெஞ்சும் உங்கள் இருதயமும் என்றும் அவரின் இருதயத்தில் இருக்கும். என்னதான் செய்தாலும் எண்ணப்படாமற்போகும் இவ்வுலகில், இயேசுவிற்காக நீங்கள் விட்ட சிறுதுளி கண்ணீர் முதல் பெருமூச்சுகள் வரை எதுவும் மறக்கப்படுவதில்லை. காலங்களாக அவரையே பின்தொடருகிற உங்களுக்கு நன்மைகள் ஒருவேளை தற்போது தூரமாயிருப்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் தேவவார்த்தையைச் சோர்வின்றி பற்றிக்கொண்டிருக்கிற நீங்கள் கர்த்தரிடத்தில் எதையும் மறைக்காது, மனமுவந்து கொடுத்து, பணிவுடன் வாழ்ந்தால் உங்கள் அன்பையும், தியாகத்தையும் பெரிதாகக் கருதும் தேவன் தாமதமின்றி, ஏற்றநேரங்களில் அற்புதங்களைச் செய்து உங்களையும், உங்களைச் சார்ந்தவர்களையும் திருப்தியாக்குவார். தளர்ந்து போகாமல் உற்சாக மனதுடன் கர்த்தரையே பின்பற்றுங்கள்.

18

இயேசு மறுரூபமாதல்

மத்தேயு 17 : 1-8

1 ஆறு நாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும்
அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக் கொண்டு
தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய்,

2 அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப்
பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.

3 அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக
அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

4 அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே,நாம் இங்கே
உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு
ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.

5 அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல்
நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில்
பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த
மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

6 சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்.

7 அப்பொழுது, இயேசு வந்து, அவர்களைத் தொட்டு,
எழுந்திருங்கள்,பயப்படாதேயுங்கள் என்றார்.

8 அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத்
தவிர வேறொருவரையும் காணவில்லை.

*****

இந்த சம்பவம் மூன்று சுவிசேஷங்களில் கூறப்பட்டிருந்தாலும் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளதையே இங்கு விவரிக்க விரும்புகிறேன். இதை இயேசு செய்த அற்புதம் என்று கூற முடியாது என்றாலும் இது மற்ற யாராலும் செய்ய முடியாத, இதுவரை எவரும் கண்டிராத செயல் என்பதால் இதையும் அற்புதங்களின் வரிசையில் சேர்க்கலாம் என்று பண்டிதர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இந்த அற்புதம் நடக்க காரணம் என்ன? ஆண்டவர் இயேசு செய்த எல்லா அற்புதங்களும் மனிதர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் விதத்தில் அமைந்துள்ளது. ஆனால் இது அப்படி அல்ல.

இயேசு தம் சீஷர்களோடு பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் சீஷர்களை நோக்கி, "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். பரலோக ராஜ்யத்தின் திறவுகோலை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுவது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கபட்டிருக்கும் என்றார் (மத் 16:13-19).

மத்.16:21-ஆம் வசனத்தில், அதுமுதல் என்ற ஒரு வார்த்தை கூறப்பட்டுள்ளது. இது முதல் அடுத்த பகுதி தொடங்குகிறது. அது முதல் அதாவது "பேதுருவை பாக்கியவான் என்று மேன்மைப்படுத்திய அந்த நாள் முதல்" தன்னுடைய சிலுவைமரணத்தைக் குறித்து இயேசு தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தத் தொடங்கினார். சிறிது நேரத்தில் பேதுரு அவரைத் தனியாகக் கூப்பிட்டு ஆண்டவரே இது உமக்கு நேரிடக் கூடாதே என்று அவரைக் கடிந்து கொண்டான்.

இன்று பல சீஷர்களின் மனநிலையும் இது தான். அவர்களைச் சிறிது மேன்மைப்படுத்தினால் அவர்கள் தங்களை உயர்த்தியவரின் குருவாக தங்களைப் பாவித்துக் கொள்வார்கள். இது சாத்தானின் செயல். இங்கு சீஷனான பேதுருவும் இப்படித்தான் செய்கிறான். எனவேதான் இயேசு அவனை நோக்கி, எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் என்கிறார் (மத்.16:23). சிறிது நேரத்திற்கு முன்பாக இயேசுவின் பாராட்டிற்குரியவனாக உயர்த்தப்பட்ட பேதுரு இப்போது சக சீஷர்கள் முன்னிலையில் அவமானத்திற்குரியவனாக மாறினான். அவன் தன் சந்தோஷத்தை இழந்தான். ஒருவேளை சக சீஷர்கள் இதைப் பார்த்து மனதிற்குள் சிரித்திருக்கலாமல்லவா? பேதுரு நிச்சயம் வருத்தப்பட்டிருப்பான். அவனுடைய மனம் காயப்பட்டிருக்கும். இந்த காயத்திற்கான மருந்து தான் இவ்வற்புதம் . ஏனென்றால் “அவர், இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறவர். அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறவர்” (சங் 147:3). வேதம், “கர்த்தர் தம்முடைய ஜனத்தின் முறிவைக் கட்டுகிறார்” (ஏசா 30:26) என்று கூறுகிறது.

இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று (மத்16:28) இயேசு சொன்னார். இந்த "சிலர்" என்ற வார்த்தையில் தானும் உட்பட்டிருப்போம் என்று பேதுரு நியாயமாக சிந்தித்திருப்பான். எதற்காக அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவின் பின்னால் வந்தானோ, அதைக் காணும் வரை மரிப்பதில்லை என்ற வார்த்தை அவனை உற்சாகப்படுத்தியது. ஏனென்றால் இயேசு "மெய்யாகவே சொல்லுகிறேன்" என்று உறுதியாகச் சொல்லியிருந்தார்.

17-ம் அதிகாரம் ஆறுநாளைக்குப் பின்பு என்று தொடங்குகிறது.அதாவது இந்த சம்பவம் நடந்து ஆறு நாட்களுக்குப் பிறகு என்று அர்த்தம் கொள்ளலாம். இந்த ஆறு நாட்களும் ஒரு சண்டைக்காரனைப் போல் தான் இயேசு மூவரையும் அழைத்துக் கொண்டு மலையின் மேல் சென்றார். அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது. இந்த சம்பவத்தைக் காணுமுன்தான் சிலர் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று இயேசு சொன்னார். அந்த சிலர் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய இந்த மூன்று பேரும் தான்.

இந்த காட்சியைக் கண்டவுடன் ஆறு நாட்களாக சண்டைக்காரனாக கோபித்துக்கொண்டிருந்த பேதுரு வாய் திறக்கிறான். இயேசுவை ஆண்டவரே என்று கூப்பிட்டான். நாம் இங்கேயிருக்கிறது நல்லது என்றான். மோசேக்கும் எலியாவிற்கும், இயேசுவுக்குமாக மூன்று கூடாரங்கள் அமைப்போம் என்றான். மிகுதியான சந்தோஷத்தினால் மோசேயின் வாயினின்று விவேகமற்ற வார்த்தைகள் வெளிவந்ததைப் பார்க்கின்றோம். இயேசுவை எலியாவோடும் மோசேயோடும் ஒப்பிட்டுப் பார்க்கின்றான். ஆனால் கர்த்தர் அவனுடைய விவேகமின்மையை மாற்றினார். அவர்கள் காதுகள் கேட்க, இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவி கொடுங்கள் என்று கூறி இயேசுவின் மகிமையை உறுதிப்படுத்தினார். முன்பு இயேசு ஞானஸ்நானம் எடுத்த போதும் கர்த்தர் இவர் என்னுடைய நேச குமாரன் என்று கூறினார்.

(மத் 3:17)

நாம் புரிந்து கொள்ள **வேண்டியவை:**

- ✶ கர்த்தர் நம்மை உயர்த்தும்போது நாம் பெருமை கொள்ளக்கூடாது.
- ✶ பெருமை கொள்பவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்.
- ✶ தேவன் சில தண்டனைகளைத் தரும்போது தளர்ந்து போகக்கூடாது.
- ✶ தேவன் நம்மை அடித்தாலும் நம்மை அணைத்துக் கொள்வார்.
- ✶ தேவனைப் பின்தொடர்பவர்கள் பூமியில் வாழும் போதே பரலோகத்திற்கேதுவானவற்றை தரிசிப்பார்கள்.
- ✶ இயேசு தான் இரட்சகர் என்பது உறுதி.
- ✶ தேவன் பயத்தைப் போக்குகிறார்.

நாம் செய்ய **வேண்டியவை:**

- ✶ தவறுகளைத் திருத்திக் கொடுக்க வேண்டும்.
- ✶ சங்கடப்படுத்தி விட்டுவிடக் கூடாது.
- ✶ மனக்காயத்தை மாற்ற வேதவசனத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்.
- ✶ மனஸ்தாபத்தை மாற்ற காலந்தாழ்த்தக் கூடாது.
- ✶ உற்சாகமூட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்தி மனக்காயத்தை மாற்ற வேண்டும்.

இவ்வற்புதத்தைக் குறித்த நிச்சயம் உங்களுக்குள் இருந்தால், பேதுரு கண்ட கிறிஸ்துவின் மகிமையை நீங்களும் காண்பீர்கள். அநேகரால் அவமதிக்கப்பட்டு, புறக்கணிக்கப்படுகிற தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களைத் தன்னுடைய பிள்ளைகளென்று உறுதிப்படுத்துகிற அன்புக்குரல் உங்களுக்காக இறங்கிவரத்தான் செய்யும். கிறிஸ்துவுக்காக நீங்கள் துறந்த மேன்மைகளுக்கு அதிகமான கிறிஸ்துவின் மகிமை உங்களை சுற்றியுள்ளோருக்கு முன்பாக உங்கள்மேல் வெளிப்படும். கண்ணீரின் கறைபடிந்த உங்கள் முகச்சாயல் மறுரூபமடையும், மேன்மையடையும். தேவன் வேதனைகளுக்குள்ளும், கண்ணீருக்குள்ளும் வாழ அவருடைய செல்லப்பிள்ளைகளாகிய உங்களை அனுமதித்திருப்பது உண்மையாயிருப்பினும், அவருடைய அன்பும், அரவணைப்பும் உங்களைவிட்டு விலகுவதில்லை என்பது அதிக நிச்சயம். ஆகவே உங்களை இன்னாரென்று அறிந்து. மன உறுதியுடன் தளராமல் முன்னேறிச் செல்லுங்கள். இயேசு உங்களோடிருப்பார்.

19

சந்திரரோகியைக் குணப்படுத்துதல்

மாற்கு 9:14-29

14 அவர்கள் ஜனங்களிடத்தில் வந்த போது, ஒரு மனுஷன் அவரிடத்தில்
வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு :
15 ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய
வேதனைப்படுகிறான்: அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும்
விழுகிறான்.
16 அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டுவந்தேன்: அவனைச்
சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று என்றான்.
17 இயேசு பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே,
எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும்
உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில்
கொண்டு வாருங்கள் என்றார்.
18 இயேசு பிசாசை அதட்டினார்: உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது:
அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான்.
19 அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்து வந்து : அதைத்
துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள்.
20 அதற்கு இயேசு : உங்கள் அவிசுவாசத்தினாலேதான்: கடுகுவிதையளவு
விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து,
இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்:
உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
21 இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி
மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

*****

மூன்று சுவிசேஷங்களில் இந்நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ள என்றாலும் மாற்கு சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தியானிப்போ அக்காலத்தில் இயேசுவின் சீடர்களும் இயேசுவைப் போல் பல அற்புதங்க செய்தனர். ஆனால் இந்த சந்திரரோகியைச் சொஸ்தமாக்க அவர்கள முடியவில்லை. இதைக் காரணம் சொல்லி, நோயாளியைக் கொண வந்தவர்களும் இயேசுவின் சீடர்களும் தர்க்கம் செய்து கொண்டனர். இந் நேரத்தில் தான் இயேசு வருகிறார். வியாதி குணமடையாததற்குக் காரண சீஷர்களல்ல, அவனைக் கொண்டு வந்தவர்களின் அவிசுவாசம் தான் என் பகிரங்கமாக அறிவிக்கிறார். இன்றும் பலருக்கும் வியாதி குறையாமலிருக் அபிஷேகம்பெற்ற ஊழியர்கள் காரணமல்ல. வியாதியஸ்தர்களி அவிசுவாசமே காரணம். இயேசு நோயாளியின் தகப்பனாரிடம் விசுவா அறிக்கை செய்ய சொன்ன போது அவன்,என் அவிசுவாசம் நீங்க உத செய்யும் என்று கண்ணீரோடு ஜெபித்தான். ஆண்டவரின் உதவிக்கா கதறினான். அப்போது இயேசு அந்த பிசாசைக் கடிந்து கொள்ள அ அவனை விட்டு அகன்றது. இயேசு அவன் கையைப் பிடித்து தூக்கினா உடனே அவன் எழுந்திருந்தான் (மாற்.9:27).

நாம் புரிந்து கொள்ள வேண்டியவை:

✶ அவிசுவாசம் அற்புதங்களைத் தடைசெய்யும். விசுவாசத்தால் எல்லா கூடும்.

✶ அவிசுவாசம் நீங்கும்படி கண்ணீரோடு ஜெபித்தால் விசுவாசம் உண்டாகு

✶ பிள்ளைகள் வாழ்வில் அற்புதம் நிகழ பெற்றோர்களும் அவர்களுக்கா தேவனை நோக்கி விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

சீஷர்கள் செய்த தவறுகள்:

சீஷர்களின் உபவாசக்குறைவு மற்றும் ஜெபக் குறைவு ஆகியவை அவர்கள் செய்த தவறுகள். தேவபிள்ளைகள் சிலர் நோயாளிகளை கண்டவுடன் 20 நாட்கள், 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபிப்பார்க ஆனால் உபவாசம் முடிவதற்குள் நோயாளி இறந்துவிடுகிறான். இயேசுவி சீஷர்கள் இப்படியிருக்க கூடாது என்பதில் இயேசு தெளிவாக இருந்த ஆனால் இந்த நோயாளியைக் குணப்படுத்த இயேசு உபவாசமிருந்தா இல்லை. பிறகு எப்படி அவரால் மட்டும் இது சாத்தியமாயிற்று? காரண

அவர் 24 மணி நேரமும் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருப்பவர். ஒன்றும் சாப்பிடாமல், எதுவும் குடிக்காமல், ஓரே இடத்தில் உட்கார்ந்திருப்பது மட்டுமல்ல உபவாசம். நம் மனம் தேவனோடு இணைந்திருக்க வேண்டும். இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக ஏனோக்கைச் சொல்லலாம். ஏனோக்கு முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான் (ஆதி. 5 :22). அவனுடைய மனம் தேவனோடு இருந்திருக்கிறது என்பது தான் அதனுடைய அர்த்தம்.

மனம் முழுவதும் உலகப்பிரகாரமான சிந்தைகளால் நிறைந்து, எதை உண்போம், எதைக் குடிப்போம் என்ற சிந்தையால் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பவர்களால் எந்த அற்புதத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு என்று II தீமோ.4:2 கூறுகிறது. நம்முடைய பொக்கிஷம் பரலோகராஜ்யம் என்ற சிந்தையுடன் நாம் எப்போதும் தேவனோடு இணைந்து வாழ்ந்தால் தேவனிடமிருந்து அற்புதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நம்மை அற்புதங்களுக்குத் தூரமாக்கும் அவிசுவாசத்தையும், மாறுபாடான இருதயத்தையும் உங்களை விட்டகற்றினால் ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் தடைசெய்யும் மலைகளும், கோட்டைகளும் அகன்றுபோகும். “எங்கள் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்” என்று தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். வேதத்தை விசுவாசத்துடன் வாசியுங்கள். காலாகாலங்களில் இயேசு செய்த எல்லா அற்புதங்களையும் சிந்தையில் நிறுத்துங்கள். உறுதியாய் உபவாசித்து மன்றாடுங்கள். அற்புதம் நிகழும்.



20

எரிகோவின் குருடனுக்குப் பார்வையளித்தல்

மாற்கு 10:46-52

29. *அவர்கள் எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.*

30. *அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர், இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு : ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.*

31. *அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ : ஆண்டவரே அதட்டினார்கள். அவர்களோ : ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.*

32. *இயேசு நின்று, அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து : நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார்.*

33. *அதற்கு அவர்கள் : ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும் என்றார்கள்.*

34. *இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார் உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப் பின்சென்றார்கள்.*

*****

மூன்று சுவிசேஷங்களில் இந்த அற்புதம் விவரிக்கப்பட்டிருந்தாலும் மாற்கு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளதைத் தியானிப்போம். பர்திமேயு என்கிற குருடன் சபிக்கப்பட்ட எரிகோவில் பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். இயேசு வருகிறார் என்று அவன் கேள்விப்பட்டு

அவரைத் தனக்கு இரங்கும்படி கூப்பிட்டான். அநேகர் பேசாதிருக்கும்படி அதட்டியும், அதிகமாய் கூப்பிட்ட அவனை இயேசு அழைத்து, நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டு அவனைப் பார்வையடையச் செய்தார். அவன் இயேசுவுக்குப் பின்சென்றான்.

பார்வை கிடைக்க காரணங்கள் :

எத்தனையோ பிச்சைக்காரர்கள் இருந்தபோதிலும் இவனுக்குமட்டும் சுகம் கிடைக்க காரணம் என்ன? அவன் இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டதும், அற்ப உலகப்பொருட்களுக்காக பிச்சை கேட்பதை வெறுத்து நிறுத்திவிட்டு, தன் சிந்தையை தனக்குப் பார்வையளிக்கவல்ல இயேசுவின் பக்கம் திருப்பின அவன் செய்கையே அவனைப் பார்வையடையச் செய்தது.

நிறுத்தாமல் கூப்பிட்டான் :

பலர் அவனை அதட்டிய பிறகும் அவன் தளரவில்லை. ஆகவே தான் இயேசு நின்று, அவனை அழைத்துவரச் சொன்னார். இயேசு அவனைக் கடந்துச்சென்று விட்டபிறகும் அவன் கூப்பிடுவதை நிறுத்தவில்லை. கடந்துச் சென்ற கர்த்தர் அவனை அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பினார். ஒரு தடவைக் கூப்பிட்டு பதில் கிடைக்கவில்லையென்றால் நாம் அத்துடன் நிறுத்தி விடுவோம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. இயேசு அவனைக் கடந்துச் சென்ற பிறகும் அவன் கூப்பிடுவதை நிறுத்தவில்லை. அவனைப் பேசாதிருக்கும்படி அநேகர் அதட்டிய பிறகும் அவன் கூப்பிடுவதை நிறுத்தவில்லை.

மேல்வஸ்திரத்தைத் தூக்கியெறிந்தன்:

இயேசு உன்னை அழைக்கிறார் என்றதும் அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டான். மேல்வஸ்திரம் அவனுடைய கறைபடிந்த பழைய வாழ்க்கையைக் குறிக்கிறது. அற்புதம் நடக்க வேண்டுமென்றால் அவிசுவாசம், பாவம், அசுத்தம் போன்றவைகளாகிய மேல்வஸ்திரத்தை தூக்கி எறிந்தாக வேண்டும்.

எழுந்தான் :

இது ஒரு புதிய வாழ்க்கையின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. பழைய வாழ்க்கை என்னும் இருப்பிடத்தை விட்டு அவன் எழுந்தான். கெட்ட குமாரனு

ணந்திரும்பி தன் தகப்பனிடம் போக தீர்மானித்தபோது உடனே அந்த இடத்தை விட்டு எழுந்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

இயேசுவினருகில் வந்தான்:

பலர் தம் பழைய இருப்பிடத்தை விட்டு எழும்புகின்றனர். ஆனால் எழும்பிய பிறகு தன் மனம்போன போக்கில் போகின்றனர். ஆனால் இவன் இயேசுவுக்கு அருகில் வந்தான். இயேசுவுக்கு சமீபமாய் நெருங்கினால் அவருடைய வெளிச்சம் நமக்குள் பிரவேசிக்கும். இருளின் அதிகாரங்கள் அழிக்கப்படும்.

பார்வையடைய வேண்டும் என்றான்:

இயேசு அவனை நோக்கி, நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். அதற்கு அவன் ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனுக்கு விசுவாசத்தினால் வந்த இரட்சிப்பு, கண்களுக்கு பார்வை ஆகிய இரண்டு நன்மைகளைக் கொடுத்தார்.அவன் இயேசுவைப் பின்பற்றினான். இயேசுவின் அற்புதங்களில் பெரும்பாலானவை ஆத்துமாவின் இரட்சிப்பும், சரீர சுகமும் கொடுப்பவை தான். இயேசு நமக்கும் சரீர சுகமும், ஆத்துமாவின் இரட்சிப்பும் தருவார்.

உங்களுடைய கஷ்டங்களும், வேதனைகளும் மாற இயேசு போதுமானவர் என்பதை நீங்கள் அறிந்திருந்தும் குடும்பத்தினர், உறவினர், அயலகத்தார் ஆகியோர்களினால் ஒருவேளை விடுதலைதரும் ஆராதனையிலும், ஜெபத்திலும் பங்குகொள்ள இயலாதவர்களாய் தவித்துக் கொண்டிருப்பது உண்மையாயிருக்கலாம். இக்குருடனைப்போல, அத்தடைகளைப் பொருட்படுத்தாமல் கர்த்தரை இன்னும் அதிகமாய்க் கூப்பிடும்போது, இயேசு உங்களைத் தம்மிடம் அழைப்பார். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்பார். உடனே உங்கள் கவலை கண்ணீர் துக்கங்கள் தூக்கி வீசப்படும். நீங்கள் கர்த்தருக்காக எழுந்து நிற்பீர்கள். நீங்கள் கேட்பதற்கு அதிகமாய் உங்களுக்குச் செய்வார்.


listverse.com

21

அத்திமரத்தை உடனே பட்டுப் போகச் செய்தல்

மத்தேயு 21:18-22

18. காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில், அவருக்குப்
பசியுண்டாயிற்று.
19. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதினிடத்திற்
போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங்காணாமல் :
இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது
என்றார்: உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.
20. சீஷர்கள் அதைக் கண்டு: இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப்
பட்டுப்போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.
21. இயேசு அவர்களை நோக்கி : நீங்கள் சந்தேகப்படாமல்
விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்கு செய்ததை
நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து : நீ
பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும்
அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன்.
22. மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக்
கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.

*****

இந்த சம்பவம் இரண்டு சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்டுள்ளது என்றாலும் மத்தேயு சுவிசேஷத்தில் உள்ளதை சிந்திப்போம். இயேசு தம்முடைய சீஷர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவே இந்த அற்புதத்தைச் செய்தார். மனிதர்களுக்கு மட்டுமல்ல, இயற்கையின்

விருட்சங்களிலும் அற்புதம் செய்ய இயேசு வல்லவராயிருக்கிறார் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

காலையில் பசியுண்டாயிற்று :

சாதாரணமாக காலையில் எவருக்கும் பசி ஏற்படாது. ஆனால் இயேசுவின் இப்பசி, மனிதர்களின் நல்ல சிறப்புமிக்க முதன்மையான நேரத்தில் அவர்களிடத்திலிருந்து பலனை எதிர்பார்க்கிற இயேசுவைக் காண்பிக்கிறது. காலை என்பது ஒருநாளின் சிறப்பும், உற்சாகமும், முக்கியத்துவமும் நிறைந்த நேரம். மனித வாழ்க்கையின் காலை எனப்படுவது வாழ்வின் சிறப்பும், வலிமையும், உற்சாகமும், எதிர்பார்ப்பும், முக்கியத்துவமும் மிக்க நேரம். மனித வாழ்க்கையில் காலையும் அதனைத் தொடர்ந்து வரும் மாலையும் உண்டு. அதன் பங்கை தேவனுக்குக் கொடுக்க வேண்டும். நீ உன் வாலிப பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை (பிர : 12:1) என்கிறது வேதம். இங்கே காலை என்பது வாலிப பிராயத்தைக் குறிக்கிறது. “கர்த்தாவே காலையிலே என் சத்தத்தைக் கேட்டருள்வீர், காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகிக் காத்திருப்பேன்” (சங் 5:3) என்கிறார் தாவீது. கர்த்தர் நம்மிடத்திலிருந்து நம்முடைய நன்மை மிக்க நேரத்தின் சிறந்த கனியை எதிர்பார்க்கிறார்.

வழியருகே ஒரு அத்திமரம் :

வழியருகில் மரம் வைத்திருப்பது பயணிகளுக்கு நிழல் கொடுப்பதற்காக. ஆனால் ஆண்டவர் அந்த அத்திமரத்திடமிருந்து நிழலையல்ல, கனியையே எதிர்பார்த்தார். அத்திமரத்தில் கனி இல்லாமல் போகாது. எப்போதும் அதில் கனி இருக்க வேண்டும். (உபா. 24:20,22 லேவி 19:9:10). இந்த கனிகளில்லாத அத்திமரம் உபயோகமற்ற மனிதர்களைக் குறிக்கிறது. கனிகளில்லாத ஆவிக்குரிய வாழ்க்கை வாழும் எவரையும் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இலைகளேயன்றி வேறொன்றுமில்லை:

அத்திமரத்தைப் பார்த்தால் கனிகள் நிறைய இருப்பது போல் காட்சியளித்தது. ஏனென்றால் அதில் இலைகள் நிறைய இருந்தன. இது யாரையும் எளிதில் ஈர்க்கத்தக்க வசீகரமான மனிதனைக் குறிக்கிறது. இந்த வசீகர தோற்றமெல்லாம் தேவ சமூகத்தில் நிலை நிற்பதில்லை. கிறிஸ்தவ போர்வைபோன்ற பகட்டான தோற்றத்தை மட்டும்

உடையவர்களாயிருந்தால், நாமும் கனிதேடுகிற கிறிஸ்துவின் பசிக்கு ஏமாற்றத்தையே கொடுக்கிறவர்களாயிருக்கிறோம் என்பது உண்மை.

தேவ சாபத்திற்கு ஆளானது :

"தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பலனை மறுதலிக்கிறவர்கள்"(11 தீமோ 3 :5) என்று சிலரை வேதம் அடையாளமிடுகிறது. வேஷத்தைப் பார்த்தால் பெரிய பக்தன். ஆனால் உள்ளத்தில் பாவத்தின் மூட்டைகள். மனிதர்கள் யாரும் இந்த அத்திமரத்தில் கனியில்லை என்பதை கண்டுபிடிக்காமற்போகலாம். ஆனால் இயேசுவைச் சந்திக்க வேண்டியது வரும். அன்று எந்த அத்தியும் தப்பிக்க முடியாது. இதுவரை கண்டுபிடிக்கப்படாத அவைகளை, உன் கண்முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன......... (சங் 50 :21) என்று சங்கீதம் கூறுகிறது.

உடனே அத்திமரம் பட்டு போனது :

பலன்கொடுக்காத பகட்டான வாழ்க்கை தேவ கோபத்தை ஏற்படுத்தும். தேவ சாபத்தை வாங்கிக் கொண்ட எவனாலும் நிலைத்து நிற்க முடியாது. ஆகவே ஆவிக்குரிய கனிகள் தங்களில் வெளிப்பட ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு செயல்பட்டாக வேண்டும்.

சீஷர்களுக்குண்டான அனுபவம் :

1. சீஷர்கள் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.
2. சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால் தங்களாலும் இயேசுவைப்போல் செய்ய இயலும் என்பதை புரிந்து கொண்டனர்.
3. இதை விடப் பெரிதாக, மலையைப் பார்த்துப் பெயர்ந்துபோ என்றாலும் அது அப்படியே ஆகும் என்பதையும் புரிந்து கொண்டனர்.

இன்று நம்முடைய வாழ்க்கையிலும் பல அத்தி மரங்களும், மலைகளும் நம் பாதைகளை வழிமறிக்கின்றன. விசுவாசத்தோடு ஜெபித்தால் இவை மாற்றப்பட்டு வழிகள் செவ்வையாகும், தடைகள் அகலும். அத்திமரம் சாத்தானின் சக்தியையும், மலை நோய் கடன்பிரச்சனை போன்றவற்றையும் குறிக்கிறது. அத்திமரம் பட்டுப் போனது போல இவைகளெல்லாம் பட்டுப் போக வேண்டும். அது நம்முடைய விசுவாசத்தால் மட்டுமே முடியும். இயேசு வழியருகே நிழலுக்காக வளர்க்கப்பட்ட அத்திமரத்திடமே கனியை எதிர்பார்த்து கனிதரும் நற்குல செடிகளாக சபையாகிய தோட்டத்தில்

நடப்பட்ட நம்மிடத்தில் அவர் கனிகளை எதிர்பார்ப்பது எவ்வளவு அதிக நிச்சயம்? வலிமையும், திறனுமுள்ள நம்மிடம் இந்நாட்களில் கனிதேடுகிற இயேசுவை பகட்டான கிறிஸ்தவ தோற்றத்தை மாத்திரம் காட்டி ஏமாற்றாது, வெளிதோற்றத்திற்கேற்ற கனிகளை அவருக்குப் படைக்க உங்களால் இயலுமானால் என் பிள்ளையாகிய உன் ஆத்துமா வாழ்வதுபோல எல்லாவற்றிலும் வாழ்ந்து நீ சுகமாயிரு என்று மனதார ஆசீர்வதிப்பார். அத்திமரத்தை உடனே பட்டுப்போகச்செய்தவருக்கு உங்கள் வாழ்க்கையை துளிர்விடச் செய்வதும் லேசான காரியம். நொடியும் தாமதமின்றி, உங்கள் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்.

22

கலிலேயா கடற்கரையில் நடந்த அற்புதம்

மாற்கு 3:7-12

7. இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம் விட்டு, கடலோரத்துக்குப் போனார்.

8. கலிலேயாவிலும், யூதேயாவிலும், எருசலேமிலும், இதுமேயாவிலும், யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின் சென்றார்கள். அல்லாமலும் தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளிலுமிருந்து திரளான ஜனங்கள் அவர் செய்த அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடத்தில் வந்தார்கள்.

9. அவர் அநேகரைச் சொஸ்தமாக்கினார். நோயாளிகளெல்லாரும் அதை அறிந்து அவரைத் தொடவேண்டுமென்று அவரிடத்தில் நெருங்கிவந்தார்கள்.

10. ஜனங்கள் திரளாயிருந்தபடியால் அவர்கள் தம்மை நெருக்காதபடிக்கு, தமக்காக ஒரு படவை ஆயத்தம் பண்ணவேண்டுமென்று, தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்.

11. அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து: நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன.

12. தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவைகளுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

*****

இது மாற்கு சுவிசேஷத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இந்த சம்பவம் நடந்த இடம் கலிலேயா கடலோரம். இயேசுவின் அற்புதங்கள் நடப்பதற்குக் குறிப்பிட்ட இடம்தான் வேண்டும் என்றில்லை.

திரளான ஜனங்கள் அவர் செய்த அற்புதங்களைக் குறித்து கேள்விப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள் (மாற் 3:8). அவர் அநேகரைச் சொஸ்தமாக்கினார் (மாற் 3:9). தமக்காக ஒரு படவை ஆயத்தம்பண்ணவேண்டுமென்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்.(மாற் 3:10) அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டதும் அவர் முன்பாக விழுந்தது (மாற். 3:11).

இந்த அற்புதங்கள் நிகழ காரணங்கள் :

1. அற்புதங்கள் நடக்க இடம் ஒரு பிரச்சனையல்ல, இயேசுவின் பிரசன்னம் தான் முக்கியம் என்பதை அந்த ஜனங்கள் அறிந்திருந்தனர்.
2. இடமும், சூழ்நிலையும் பாராமல் இயேசு இருக்கும் இடத்திற்கு நோயாளிகளைக் கொண்டு வந்தனர்.

இயேசு சொன்னபடி அவர் இருப்பதற்கென ஓர் படகை சீஷர்கள் ஆயத்தம் செய்து கொடுத்தபடியால், அற்புதங்கள் தொடர்ந்தன. இயேசு நமக்கு அற்புதம் செய்ய நம் வாழ்வை இயேசுவுக்குக் கொடுக்க வேண்டும்.மேலும் நம் இருதயமாகிய படகில் இயேசு இருந்தால், சாத்தான் திரும்பவும் நோய்களையும் பிரச்சனைகளையும் கொண்டு நம்மை அணுகமாட்டான். இயேசு செய்த அற்புதங்களைக் குறித்து தீரு, சீதோன் பட்டணங்களின் ஜனங்களுக்குச் சொல்ல சில மனிதர்கள் இருந்தபடியால் அங்குள்ள மக்கள் சுகமடைய முடிந்தது. அறிவிப்பவர்கள் இல்லாமலிருந்தால் இயேசுவை நெருக்குமளவிற்கு, அதிகமானவர்களாய் வந்த நோயாளிகள் சுகமும், இரட்சிப்புமடையாமல் மடிந்து போயிருப்பார்கள். ஆகவே தேசத்துக்கு இயேசுவை அறிவிக்கிற அநேகர் உருவாக, நீங்களும் அவர்களில் ஒருவராகிவிடுங்கள். அயலகத்தாரும் இயேசுவினாலுண்டாகும் நல்வாழ்வைப் பெற்றுக்கொள்ள வழிசெய்யுங்கள்.



23

கொன்னைவாயுடைய செவிடனைக் குணமாக்குதல்

மாற்கு7:31- 37

31. மறுபடியும், அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப்
புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக்
கடலருகே வந்தார்.
32. அங்கே கொன்னைவாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில்
கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி
வேண்டிக் கொண்டார்கள்.
33. அப்பொழுது, அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே
அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில்
வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு:
34. வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா என்றார்:
அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம்.
35. உடனே அவனுடைய செவிகள் திறக்கப் பட்டு, அவனுடைய நாவின்
கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்.
36. அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக்
கட்டளையிட்டார் ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்கு
கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம்
பண்ணி,
37. எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார். செவிடர் கேட்கவும், ஊமையர்
பேசவும் பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்.

*****

மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் இந்த சம்பவம் விவரிக்கப்படவில்லை. இவ்வற்புதம் நிகழ கொன்னை வாயுடைய செவிடனான அவனை அவரிடத்தில் கொண்டு வந்து இயேசுவின் கையை அவன்மீது வைக்க வேண்டின அந்த மனிதர்களே காரணமாயினர். அவர்கள் வேண்டிக் கொண்டதும், தனியே இயேசு அவனை அழைத்துக் கொண்டு போன போது, அவன் இயேசுவுடன் சென்றதுமே அற்புதத்தை அவனருகே கொண்டு வந்ததற்குக் காரணமானது. இயேசுவுடன் சென்ற அவனுடைய காதுகளில் இயேசு தம் விரல்களை வைத்தார். உமிழ்ந்து நாவைத் தொட்டார். அவனுக்காக வானத்தை அண்ணாந்து பார்த்தார். அவன் துக்கம் அவரது இருதயத்திலிருந்து பெருமூச்சாய் வெளிவந்தது. அவனுக்காக அவர் வாய்திறந்தார் திறக்கப்படுவாயாக என்றார். அவனுடைய நாவின் கட்டுகள் அவிழ்ந்தது அவன் நன்றாகப் பேசினான். இந்த அற்புதத்தில் விசேஷித்த காரியம் இயேசு உமிழ்ந்து அவன் நாவினைத் தொட்டதுதான். உமிழ்நீர் என்பது ஓர் மருந்து

சொஸ்தமாக்கும்படி இயேசு செய்தவை:

- தனியே அழைத்துக்கொண்டு போனார்.
- தன் விரல்களை அவன் காதுகளில் வைத்தார்.
- உமிழ்ந்து அவன் நாவைத் தொட்டார்.
- வானத்தை அண்ணாந்து பார்த்தார்.
- பெருமூச்சு விட்டார்.
- எப்பத்தா என்றார்.

அற்புதம் நிகழ காரணங்கள்:

- இயேசுவிடம் கொண்டுவரப்பட்டான்.
- அவர் கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்.
- இயேசு அவனைத் தனியே அழைத்தபோது, தாமதமின்றி இயேசுவுடன் தனியே சென்றான்.

இந்த கொன்ன வாயுடைய செவிடனை சொஸ்தமாக்குகையில் இயேசு ஒரு தனிப்பட்ட உரிமைகலந்த முறையில் செயல்பட்டார். தனிமையான இடத்துக்கு அவனை உரிமையோடு அழைத்துச்சென்ற இயேசு அவனை சுத்தமாக்க தன் உமிழ்நீரைப் பயன்படுத்தினார். உமிழ்நீர் சிறந்த மருந்து என்பது உண்மையாயினும், எவரும் தங்கள் உமிழ்நீரை பிறர்மீது படுவதற்

அனுமதிப்பதில்லை. இங்கு இயேசு தன் உமிழ்நீரை அவனுக்கு பயன்படுத்தினது அழைத்த தன்னுடன் தனியே புறப்பட்டுச் சென்ற அவனிடம் இயேசு உரிமையாகச் செயல்பட்டதைக் காட்டுகிறது. நாமும் நம்முடைய சூழ்நிலையைவிட்டு அவருடைய அழைப்பைக் கேட்டு, தனிமையை இனிமையாய் ஏற்று அவருக்குப் பின்சென்றால், தன் சொந்தஇரத்தத்தினால் கழுவி, தன் உறவாக நம்மையும் ஏற்று ஆசீர்வதிப்பார். தாமதமின்றி அவருக்குக் கீழ்ப்படிவோம்.

24

பெத்சாயிதாவில் குருடனுக்குப் பார்வையளித்தல்

மாற்கு 8:22-26

22. பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை
அவரிடத்தில் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி அவரை
வேண்டிக்கொண்டார்கள்.

23. அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு
வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து,
அவன்மேல் கைகளை வைத்து எதையாகிலும் காண்கிறாயா என்று
கேட்டார்.

24. அவன் ஏறிட்டுப் பார்த்து : நடக்கிற மனுஷரை மரங்களைப் போலக்
காண்கிறேன் என்றான்.

25. பின்பும் அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து,
அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன்
சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்.

26. பின்பு அவர் அவனை நோக்கி: நீ கிராமத்தில் பிரவேசியாமலும்,
கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி,
அவனை வீட்டிற்கு அனுப்பி விட்டார்.

*****

இயேசு பெத்சாயிதா ஊரில் குருடனுக்குப் பார்வையளித்த இந்த சம்பவம் மாற்கு சுவிசேஷத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

இந்த அற்புதம் நிகழ்ந்தவிதம்:

* குருடனை சில ஆட்கள் இயேசுவினிடத்தில் விசுவாசத்தோடு கொண்டு வந்தார்கள்.
* இயேசு குருடனுடைய கையைப் பிடித்து அவனை கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு போனார்.
* கண்களில் உமிழ்ந்தார்.
* அவன்மேல் கைகளை வைத்தார்.
* அவன் மனிதர்களை மரம் போல கண்டான்.
* அவர் மறுபடியும் அவன் கண்களின் மீது கையை வைத்தார்.
* அவன் யாவையும் தெளிவாய்க் கண்டான்.
* கிராமத்தில் பிரவேசியாதே என்றார்.
* அவனை வீட்டிற்கு அனுப்பினார்.

நாம் அறிந்துகொள்ள வேண்டியவை:

இயேசு குருடனை கிராமத்துக்குள் பிரவேசிக்க வேண்டாம் என்றார் சில நேரங்களில் அற்புதம் நிலைப்பட பழைய நிலையிலிருந்து மாற்றம் தேவை என்பதை உணர்த்துகின்றது. பரிபூரண சுகத்திற்காக இயேசு இரண்டு முறை முயற்சி செய்திருக்கிறார். சில அற்புதங்கள் நிகழ கால அவகாசம் தேவை என்பதை இது உணர்த்துகின்றது. ஒரு முறை இயேசு கலிலேயாவில் பிரசங்கித்து கொண்டிருந்தார். அப்போது திரளான ஜனங்கள் அவரிடம் வந்தனர். ஆனால் இயேசு அங்கிருந்து புறப்பட்டு யோர்தானுக்கு அக்கரையிலுள்ள யூதேயாவின் எல்லைகளுக்கு வந்தார். அங்கு பலரை குணமாக்கினார். ஒரு நாள் ஜெபித்து சுகம் கிடைக்கவில்லை என்றவுடன் பின்வாங்கக் கூடாது சுகம் கிடைக்கும் வரை நம்பிக்கையோடு இருப்பதுடன், தொடர்ந்து ஒவ்வொரு நாட்களும் ஜெபிக்க வேண்டும்.

இயேசு யார்யாரை அழைத்து பழைய வாழ்வின் நிலைமைகளிலிருந்து வெளியே கொண்டுச் சென்றாரோ அவர்களைத் தன்னுடைய பிள்ளைகளாக தன் எலும்பிற்கும், இரத்தத்திற்கும், உரியவர்களாய் எண்ணுவதை கொன்னை வாயுடைய செவிடனுக்கு அற்புதம் செய்த விதம் உறுதிப்படுத்துகிறது. பெற்றோர் தங்கள் சொந்தப் பிள்ளைகளுக்குண்டாகும் சில உடல்புண்களுக்குத் தங்கள் உமிழ்நீரை மருந்தாக பயன்படுத்துவதுண்டு அப்படியே வெளியே அழைத்துக் கொண்டுபோன இவ்விரு மனிதர்களையும்

வேலைக்குலையில் பற்ற நோயாளிகளோடு செயல்பட்டதைப் போலல்லாமல், இவனுக்கு உமிழ்நீரைப் பயன்படுத்தி சுகமளித்திருப்பது கிறிஸ்துவால் ஒதுக்கப்பட்டு ஜனத்தைவிட்டு பிரித்தெடுக்கப்பட்டவர்கள் மீது வைத்திருக்கும் கரிசனை சொந்தபிள்ளைகள் மீதுள்ள கரிசனைக்கு ஒப்பானதென்பதை விளங்கப் பண்ணுகிறது. பிரியமானவர்களே, நீங்கள் கிறிஸ்துவின் அழைப்பை அலட்சியமாகக் கருதாமல், அவரிடம் பெற்ற அழைப்பை அழைத்த அருமை தகப்பனுடைய அன்பின் ஆழத்துடனிணைத்து பொருத்திப் பார்க்கும் இருதயம் உங்களுக்கிருந்தால், நிச்சயம் நீங்கள் கடந்து சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும், தகப்பனுடைய கிரியைகள் உங்களுக்காக வெளிப்படும். கிறிஸ்துவின் அன்பின் ஆழத்தையறிந்து மகிழ்ச்சியோடு முன்னேறுங்கள். அவருடைய பாசக்கரம் உங்களைத் தாங்கும்.



25

நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடெழுப்புதல்

லூக்கா7:11-15

11. மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்: அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனே கூடப் போனார்கள்.

12. அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்த போது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள். அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள்.

13. கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி,

14. கிட்ட வந்து, பாடையைத் தொட்டார்: அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

15. மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.

*****

இந்த சம்பவம் லூக்கா சுவிசேஷத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள். அவன் ஒரு விதவையின் மகன். ஜீவனாகிய இயேசுவின் முன்னால் மரணத்திற்கு ஆயுள் மிகவும் குறைவு. அவள் ஒரு விதவை. அவன் அவளுக்கு ஒரே மகன். அவள் அழுது கொண்டே வந்தாள்.

இயேசு அவளைக் கண்டார்

இயேசு நம் கண்ணீரைக் காண்கிற தேவன். இயேசு திக்கற்றவர்களுக்குத் துணையாக இருக்கிறார். அவர் மனதுருக்கமுள்ளவர். மனம் என்பது எல்லோரிடமும் இருக்கும். ஆனால் மனதுருக்கம்? மனதுருக்கம் உள்ளவர்களால் மட்டுமே வேதனையில் பங்கு கொள்ள முடியும் இயேசு மனதுருகினார். அந்த விதவையின் வேதனையில் பங்கு கொண்டார். அவள் வேதனையை மாற்ற சித்தம் கொண்டார்.

அழாதே என்றார்

நாம் அழுகின்றபோது, நம் அழுகையை மாற்றாமல் தேவன் போகமாட்டார். மரியாள் அழுவதைக் கண்ட இயேசு அவளை தேற்றிய பின்னரே அவ்விடம் விட்டுச்சென்றார் (யோவா 20.16). விதவையின் அழுகையைக் கண்ட அவர் அழாதே என்று சொல்லி அழுகையை மாற்றினார்.

அருகில் வந்தார்

விதவைக்கருகில் வேதனை வேளையில் வந்தவர் இயேசு. நம்முடைய சொந்தங்கள் கூட நம்மை வேடிக்கைப் பார்த்துவிட்டு அகன்றுச் செல்லும் போது, இயேசு மட்டும் நமக்கு உதவி செய்யும்படி நம் அருகில் வருவார். நமக்கு சமீபமாய் இருக்கும்படி அவரை பற்றிக்கொண்டால் ஒருபோதும் நம்மை விட்டு விலகமாட்டார்.

பாடையைத் தொட்டார்

இயேசு தொட்ட பலரும், இயேசுவை தொட்ட பலரும் சௌஸ்தமாகியுள்ளனர். இயேசு மனிதனோடு இணையும் போது தான் அற்புதம் நடக்கும். இந்த உறவை மறந்து பலரும் அற்புதத்தை எதிர்பார்க்கிறார்கள். அந்த உறவு எது? இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும் (யோவா 15:7) என்பதே. நம்மைத் தொடும்படி நம்மருகில் வருகிற இயேசுவோடு நெருங்க, நம் மனம் சம்மதித்தால் தான், நம்மை அவர் தொடமுடியும். இயேசு தொடாமல் செத்துப்போன நம்பிக்கையும், தரிசனங்களும்கூட உயிரடையாது. இயேசு பாடையைத் தொட்டவுடன் சுமந்தவர்கள் நின்றுவிட்டனர். மரித்தவனைச் சுமக்க ஒரு கூட்டமுண்டு. கெட்ட குமாரன் திரும்பி வந்த நேரம் அவன் தகப்பன் "என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்" லூக்:15:24 என்று சொன்னார். பாவத்தில் வாழ்பவன் மரித்தவனுக்குச் சமம். மரித்தவனைச்

சுமப்பது போல் இவனைச் சுமக்கவும், அநேகர் இருந்தனர். அவனிடம் பணம் தீரும்வரை அவனைச் சுமந்தார்கள். அதன்பின் அவனை அப்படியே விட்டுவிட்டுச் சென்றார்கள். ஆனால் அவனை இயேசு தொட்டபோது சுமந்தவர்கள் நின்றார்கள்.

எழுந்திரு என்றார்

சுமந்தவர்கள் நின்றதும் இயேசு அவனை எழுப்பினார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். உடனே அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். இதைப் பார்த்த அனைவரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த அற்புதம் நடந்தது ஜனங்கள் தேவனை விசுவாசிக்கவும் தேவனை மகிமைப்படுத்தவும் தான். பாவத்திலே மரித்துப்போன எவரையும் அவர் எழுப்புவார்.

இங்கே மரித்துப்போனவனை அடக்கம்பண்ணுவதற்குக் கொண்டுபோனார்களேயன்றி, உயிரோடு எழுப்பும்படி இயேசுவிடம் கொண்டுபோகவில்லை. ஆனால் அடக்க ஊர்வலத்தில் இயேசு குறுக்கிட்டார். மனதுருகினார், அருகில் வந்தார், தொட்டார். உடனே மரித்தவன் எழுந்தான். அவன் தாயினிடத்தில் ஒப்புவிக்கப்பட்டான். உங்கள் நம்பிக்கையும், விசுவாசமும், தரிசனமும்கூட ஒருவேளை செத்துப்போய் அடக்கம் பண்ணப்பட வேண்டியதாகிவிட்டதா? செத்துப்போன உங்கள் விசுவாசமும், தரிசனமும் கூட கர்த்தருக்கு முன்பாகத்தான் இருக்கிறது என்பதை மட்டும் மறந்துவிடாதிருங்கள். விசுவாசத்தையும், தரிசனத்தையும் உங்களுக்குத் தந்தவர் உங்கள் மனவேதனையைக் கண்டு மனதுருகி உங்கள்முன் தோன்றத் தான் செய்வார். மரித்த விதவையின் மகனை அடக்கம் செய்ய எல்லாரும் கடந்து வந்தபோது, இயேசு மட்டும் அவனை உயிரடையச் செய்யும்படி கடந்து வந்தார். இந்த இயேசு ஒருபோதும் விசுவாசத்தையும், தரிசனத்தையும் அழிந்துபோக அனுமதிக்கமாட்டார். அழாதே என்று உங்கள் கண்ணீரைத் துடைத்து, உங்கள் நம்பிக்கைக்கு உயிர்கொடுத்து, உங்களிடத்தில் திரும்பவும் ஒப்படைப்பார். செத்துப்போன உங்கள் தரிசனம் முளைவிடும். உங்கள் கண்கள் உயிர் பெற்ற உங்கள் தரிசனத்தைக் காணும். செழித்துயர்ந்து நிற்கும் உங்கள் விசுவாசத்தையும், வாழ்வையும் எல்லோரும் காண்பார்கள். ஆகவே மனமடிவடைந்து விடாதீர்கள். கிறிஸ்துவை மட்டும் நம்பி தொடருங்கள்.



26

கூனியான ஸ்திரீயைக் குணமாக்குதல்

லூக்கா 13:10-13

10. ஒரு ஓய்வுநாளில் அவர் ஜெபஆலயத்தில் போதகம்பண்ணிக் கொண்டிருந்தார்.

11. அப்போது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக் கூடாத கூனியாயிருந்தாள்.

12. இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி,

13. அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்.

*****

இந்த சம்பவம் மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் இல்லை. இந்த அற்புதம் ஜெப ஆலயத்தில் இயேசு போதகம் பண்ணிக் கொண்டிருக்கையில் நிகழ்ந்தது.

கூனியான ஸ்திரீயைக் குணப்படுத்தியதற்கான காரணங்கள்

- அவள் கூனியாக இருந்த போதிலும் ஆராதனைக்கு வரத் தவறவில்லை.
- இயேசுவின் பிரசங்கம் கேட்டுக் கொண்டிருந்தாள்
- வியாதியை மறந்து, இயேசுவின் வார்த்தைகளோடு சிந்தையில் இணைந்ததால் அவளுடைய வியாதியைக் குறித்து அவள் இயேசுவிடம் சொல்லவேயில்லை.

இயேசு அவளைக் கண்டார்

அவள் ஆலயத்திற்கு வராமலிருந்திருந்தால் இயேசு அவளைக் கண்டிருக்கவும் மாட்டார், அவள் சொஸ்தமாகியிருக்கவும் மாட்டாள். இயேசு

எல்லா ஓய்வுநாட்களிலும் அந்த ஆலயத்திற்கு வருவதில்லை. சுகம் பெற்று கொள்ளும்படியாக அன்றுமட்டும் அல்ல, தேவனை வழக்கம்போல ஆராதிக்கும்படியே அவள் வந்திருந்தாள். ஆராதிக்க வந்த அவள் சுகமும் பெற்றாள்.

தம்மிடத்தில் அழைத்தார்

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன்" (யோவான் 7:37) என்று தாகமாயிருக்கிறவர்களை அழைத்த இயேசு தம் உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்த இவளையும் அருகில் அழைத்தார். கூனர்கள் தேவ சந்நிதியில் வரக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்த காலம் அது. (லேவி 21:37) ஆயினும் இயேசு அவளைத் தன்னருகில் அழைத்தார்.

அவள் மேல் தம் கைகளை வைத்தார்

என் நீதியின் வலக்கரத்தாலே நம்மைத் தாங்குகிறவர் கர்த்தர் (ஏசா 41:10). இயேசு அவள்மேல் கைகளை வைத்ததும் அற்புதம் நடந்தது. ஏனென்றால் தேவகரம் அற்புதமான கரம். அவர் ஒரு தடவை தொட்டால் போதும். எந்த வியாதியும் சொஸ்தமாகும்.

உன் பெலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்றார்

பதினெட்டு வருடங்களாக அவளை வாட்டிய வியாதி உடனடியாக சொஸ்தமானது. 18 வருடமுள்ள வியாதி மாற இயேசுவுக்கு ஒரு நிமிடம் போதும். அவளுடைய கூனுக்குக் காரணம் சாத்தான். அவள் போய்கொண்டிருந்த ஆலயத்தின் குருவால் இதைப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. ஒருவேளை அவள் நிறைய மருத்துவம் கூட செய்திருக்கலாம். ஆனால் மருத்துவரீதியாக X - Ray மூலமாக கண்டுபிடிக்கமுடியாத வியாதியை இயேசுவின் பார்வை கண்டுபிடித்தது. அநேகருடைய வியாதிக்குக் காரணம் சாத்தானாக இருக்கிறான். ஆனால் அதைக் கண்டுபிடித்து அகற்ற இயேசு கிறிஸ்துவால் மட்டுமே முடியும்.

அவள் நிமிர்ந்தாள்:

உலகக் காரியங்களையே குனிந்து பார்த்துப் பார்த்து கூனிப்போய் காணப்படுகிறவர்களை சாத்தான் நிமிரவிடுவதில்லை. சாத்தானால்

மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கி விடுகிறார். (சங் 146:8). நிந்தை, அவமானம், புரளியான பேச்சுக்கள் போன்ற அநேக காரியங்களினால் சாத்தான் நம்மையும் தலை குனியச் செய்கிறான். பயப்பட வேண்டாம். நம் தலைகளை தேவனை நோக்கி உயர்த்தும்போது, தேவராஜ்யத்துக்கு ஏற்றவைகளை நோக்கும்போது நம் தேவன் நம்மை தலை நிமிரச் செய்வார். கூன் மாறின அவள் தேவனை மகிமைப்படுத்தினாள் (கொலோ 1:13). தவறாமல் ஆலயம் செல்வதினாலோ, ஆராதனை செய்வதினாலோ, பிரசங்கம் கேட்பதினாலோ மட்டும் தேவனை மகிமைப்படுத்த முடியாது. உண்மையாய் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமானால், நம்முடைய கூன் மாற வேண்டும்.

இன்று ஜெபமென்கிற முதுகெலும்பு பெலனிழந்துபோனதால் அநேகருடைய கிறிஸ்தவ வாழ்க்கை கூனிபோய் காணப்படுகிறது. கிறிஸ்துவுக்காக நிமிர்ந்து நிற்கவும், கிறிஸ்துவுடன் தலைநிமிர்ந்து வாழவும் இயலாதவர்களாய்ப் போய்விட்டார்கள். கூனிப்போன கிறிஸ்தவ வாழ்க்கையால் யாருக்கும் பிரயோஜனமில்லை. சொல்லப்போனால் அவர்களுக்குமே அவர்களுடைய வாழ்க்கை தாங்கமுடியாத பாரமே, வாழ்வதும் கடினமே. எனினும் ஜெபிக்க ஆரம்பித்துவிட்டால், மேலானவைகளை நோக்க ஆரம்பித்துவிட்டால் முதுகும் பெலனடையும், எழுந்து நிற்கவும் இயலும். ஆகவே உலகத்துக்குள் கண்களைத் திருப்பி, உங்கள் பெலனை ஒடுக்கி உங்கள் முதுகில் சவாரி செய்து கொண்டிருக்கும் சத்துருவாகிய சாத்தானையும், அவன் திட்டங்களையும் முதுகிலிருந்து தூக்கி வீசுங்கள். பாரமடைந்துபோன உங்கள் கிறிஸ்தவ வாழ்வு பெலனடையும்படி அதிகநேரம் ஜெபிக்கவும், உலகத்துக்குரியவைகளை விட்டுவிட்டு பரத்துக்குரியவைகளை நோக்கவும் திட்டமிடுங்கள், செயல்படுங்கள். உங்கள் முயற்சியைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணுவார். சுலபமாக கிறிஸ்துவுக்காக வாழச்செய்வார்.

27

நீர்க்கோவை வியாதியுள்ள மனிதனைச் சுகமாக்குதல்

லூக்கா14:1-6

1. ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர் போஜனம் பண்ணும் படிக்குப் போயிருந்தார்.
2. அப்பொழுது நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். என்ன செய்வாரோவென்று ஜனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.
3. இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்.
4. அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பி விட்டு,
5. அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார்.
6. அதற்கு உத்தரவு சொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று.

*****

இந்த அற்புதம் ஒரு ஓய்வு நாளில் பரிசேயரின் தலைவன் ஒருவனின் வீட்டில் நிகழ்ந்தது. இயேசு ஓய்வுநாளில் பல அற்புதங்கள் செய்திருக்கிறார்.

இந்த வியாதியஸ்தனும், அற்புதமும்:

வியாதியஸ்தன் இயேசுவிடம் தன்னை சொஸ்தமாக்க வேண்டிக் கொள்ளவில்லை. இயேசு என்ன செய்யப் போகிறார் என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

வியாதியஸ்தனுடனிருந்தவர்களும், அற்புதமும்:

ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவது சரியல்ல என்ற எண்ணத்துடன் "என்ன செய்வாரோவென்று" தன்மேல் நோக்கமாயிருந்த நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து இயேசு கேட்டார். அவர்கள் எதுவும் பேசாதிருந்தார்கள். அப்போது இயேசு அவனை அழைத்து சொஸ்தமாக்கினார். எப்பொழுதும் இயேசுவைக் குறைகூறிக் கொண்டிருக்கும் நியாயசாஸ்திரிகளும், பரிசேயர்களும் இந்த இடத்தில் மௌனமாக இருந்தனர்.இந்த மௌனம், ஒரு பெரிய அற்புதத்திற்கு வழிவகுத்தது.

புரிந்து கொள்ள வேண்டியவை:

1. விமர்சனம் செய்கிறவர்கள் மௌனமாயிருந்தால் அற்புதம் நடக்கும்.

2. வியாதியஸ்தன் இருந்தது பரிசேயனுடைய வீட்டில். ஒருவேளை அவன் இந்த பரிசேயனுக்கு வேண்டியவனாக கூட இருக்கலாம். எனவே தான் இயேசு அவனை சொஸ்தமாக்கிய பின் உங்களில் ஒருவனுடைய கழுதையாவது, எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால் உடனே தூக்கி விடானோ என்று கூறினார்.

நியாயசாஸ்திரிகளையும், பரிசேயரையும் பேசாமலிருக்கச்செய்து, ஓய்வுநாளிலே வியாதியஸ்தனை சொஸ்தமாக்கி அனுப்பினவர், விடுதலையைத் தடைசெய்கிறவற்றையும், விசுவாசமிழக்கச் செய்யும் பேச்சுக்களையும் அகற்றிவிட்டு உங்கள் காரியங்களிலும் அற்புதம் செய்வது நிச்சயம். ஜெபத்திற்கும், கிறிஸ்துவுடனான உறவிற்கும் குறைவைக்காத உங்கள் வாழ்வு நிறைவும், மேன்மையும் அடையவிடாமல் தடுக்கிற மதில்களால் நீங்கள் சோர்ந்து போனீர்களோ? தடைகளைத் தகர்த்துப்போட்டு உங்களை ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவர் என்றைக்கும் அமைதியாய் அமர்ந்திருக்க மாட்டார். அவர் வாய் திறப்பார். விசுவாசத்தோடு இயேசுவின் பிரசன்னத்தை தொடர்ந்து நாடுங்கள்.

28

பத்து குஷ்டரோகிகளைக் குணப்படுத்துதல்

லூக்கா 17:11-19

11. பின்பு அவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில், அவர் சமாரியா
கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார்.
12. அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர்
பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று:
13. இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.
14. அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக்
காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில்
சுத்தமானார்கள்.
15. அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து
உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி,
16. அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து அவருக்கு
ஸ்தோத்திரஞ்செலுத்தினான் : அவன் சமாரியனாயிருந்தான்.
17. அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற
ஒன்பதுபேர் எங்கே?
18. தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய
மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி,
19. அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது
என்றார்.

*****

குஷ்டரோகிகள் பத்துபேர் இயேசுவினால் சுகமடைந்த இந்த சம்பவம் வேறு எந்த சுவிசேஷத்திலும் குறிப்பிடப்படவில்லை.

தூரத்திலே நின்றார்கள்:

குஷ்டரோகிகள் ஜனங்களுக்கு மத்தியில் வருவது தடைச் செய்யப்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படியாக தூரத்திலே நின்றார்கள். ஆனால் தூரத்திலே நிறுத்தப்பட்ட அவர்களுக்காக இயேசு நின்றார். அப்படியே தூரத்திலே தள்ளப்பட்ட எல்லாருடைய கதறலையும், அழுகையையும் மாற்றும்படி நமதருமை இயேசு நிற்பார். எதுவும், எவரும் இயேசுவை விட்டு, கதறிகொண்டிருக்கும் உங்களைத் தூரப்படுத்த முடியாது.

இயேசுவின் இரக்கத்திற்காக வேண்டிக் கொண்டார்கள்:

இயேசு கருணையும் இரக்கமும் உள்ளவர். அவரிடம் வேண்டுவோர்க்கு அவர் நிச்சயம் இரக்கம் காட்டுவார். இயேசு தன்னிடம் வேண்டிக்கொண்ட அவர்களைப் பார்த்தார். குஷ்டரோகிகளை யாரும் திரும்பிப் பார்க்காத காலம் அது. ஆனால் இரக்கத்தின் சிகரமாகிய இயேசு அவர்களைப் பார்த்தார். உடைந்து நொறுங்கிய இருதயங்களிலிருந்து எழும் விண்ணப்பங்களை அவர் தள்ளிப்போடமாட்டார்.

ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார் :

விடுதலையடைவதற்காக செய்ய வேண்டியதை இயேசு சொன்னபோது அதற்குக் கீழப்படிந்த அவர்கள் போகையிலேயே சுத்தமானார்கள். ஆலயத்துக்குப் போகும்போதே சுகமடைந்தார்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிபவர்களுக்குக் கட்டாயமாக விடுதலை உண்டாகும். இவர்களில் ஒருவன் திரும்பி வந்து தேவனை மகிமைப்படுத்தினான். இயேசுவின் பாதத்தில் விழுந்தான். உரத்த சத்தத்தோடு தேவனை மகிமைப்படுத்தினான். மற்ற குஷ்டரோகிகளுக்கு கிடைக்காத ஒன்றை இயேசு அவனுக்குக் கொடுத்தார். அதுதான் இரட்சிப்பு (லூக் 17:19). தேவனிடத்திலிருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொண்ட பலரும் இன்று நன்றி மறந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் ஒரு சிலர் இன்றும் நன்றி மறக்காமல் ஆலயத்திற்கு வருகின்றனர். அப்படிப்பட்டவர்களில் பெதஸ்தா குளக்கரையிலிருந்த வியாதியஸ்தன் (யோவான் 5:8-9), தாயின் வயிற்றிலிருந்தே முடவனாயிருந்தவன் (அப்.3:8), பர்திமேயு குருடன் (லூக். 18:43), கதரேனருடைய நாட்டில் அசுத்தஆவி பிடித்திருந்தவன் (மாற். 5:43)

போன்றோர் சிலர். இயேசு அவர்களிடம் மற்ற ஒன்பது பேர் எங்கே? என கேட்டார். இதிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலா நன்மையைப் பெற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர் என்பதும் அவர் யார்யார் என்பதும் தேவனுக்கு நன்றாகவே தெரியும். எனவே நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள் (கொலோ 3:15).

சமுதாயமும், சூழ்நிலைகளும் உங்களை தூரத்தி நிறுத்திவைத்திருக்கிறதோ? உங்கள் இருதயத்தை அறியவும், வேதனையி பங்குகொள்ளவும் யாருமில்லையோ? கலங்காதிருங்கள். மனித அன்புக் ஏங்கிவிடாதிருங்கள். நீங்கள் தூரத்திலே நின்று கொண்டிருக்கும்போ உங்களுக்குச் சமீபமாய் நிற்கிறவரும், உங்களைவிட்டு நொடிப்பொழு விலகிநிற்க விருப்பமற்றவருமாகிய இயேசுவை நோக்கி உங்க இருதயத்தின் குரல் உயருமானால் உங்கள் கண்ணீரின் ஆழங் மாற்றப்படும். வேதனையும், கலக்கமும் நிறைந்த உங்க விண்ணப்பங்களுக்கு இரக்கம் வெளிப்படும். அடைக்கலமும், தஞ்சமு ஆறுதலும் அவரே. நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதை அ உங்களுக்குச் சொல்லுவார். அவர் சொற்படி செய்து, சுகவாழ்வை தவறிவிடாதிருங்கள். உங்கள் கண்களும், இருதயமும் அவரை நோக்கியிருப்பதாக.

29

பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதுகளைத் தொட்டு குணமாக்குதல்

லூக்கா 22 : 50, 51

50. அந்தப்படியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்.

51. அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்.

*****

இந்த சம்பவம் நான்கு சுவிசேஷங்களிலும் கூறப்பட்டுள்ளது. அறுபட்ட செவியை மீண்டும் ஒட்டி சொஸ்தமாக்குகின்ற அற்புதம் இந்த சுவிசேஷத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. மனிதனின் உடம்பிலிருந்து ஒரு உறுப்பு பிரிந்து போனாலும் அதை பழைய நிலைமைக்கு மாற்ற தேவனால் கூடும் என்பதற்கு ஒரு சிறந்த சான்று தான் இந்த அற்புதம். கானாவூர் கல்யாணவீட்டில் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியது முதல் அற்புதம். காதை ஒட்டவைத்த இந்த அற்புதம் வேதத்தில் எழுதப்பட்டிருக்கும் இயேசு செய்த கடைசி அற்புதம்.

உலகில் வாழ்ந்த எல்லோரையும் தன் அன்பின் அருள்மொழியால் தேற்றிய இயேசு மரணத்துக்கேதுவான துக்கமடைந்தபோது தன்னோடு விழித்து ஜெபிக்கும்படி சீஷர் மூவரை அழைத்துச் சென்றார். மும்முறை அவர்களிடம் ஜெபிக்கும்படி வருத்திக்கேட்டும் அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, ஜெபித்துத் தன்னைத் தேற்றுவாரின்றி மீண்டும் மீண்டும் நொந்து அலறினார். இயேசு தன் சீஷர்களிடம் திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டதெல்லாம் ஜெபத்தைதான். சீஷர்களின் ஜெபத்திற்காக அங்கலாய்த்தும் தேற்றுவாரின்றி மும்முறை கதறினார். இயேசு பாவிகளுடைய

கையில் ஒப்புக்கொடுக்கப்படும்வேளை அதுவாயிருந்தது. கதறியும் அலறியும், அங்கலாய்த்தும் வியாகுலப்பட்டும் ஜெபித்த இயேசுவுடன் ஜெபித்துத் தேற்ற தவறின சீஷர்களின் ஆத்திரம் பேதுருவின் பட்டயமாக இயேசுவைப் பிடிக்கவந்தவர்களில் ஒருவனான மல்குஸின் காதை வெட்டியது. ஆனால் அவருடைய தேவஅன்பு பட்டயத்தை உறையிலிடச்செய்து பிரதான ஆசாரியனின் வேலைக்காரனான மல்குஸின் காதை ஒட்டி சுகப்படுத்தியது. தேற்றுவாரற்ற வேளையிலும் இயேசுவின் பெருந்தன்மையினால் நிகழ்ந்த அற்புதம்தான் இது.

ஜெபித்த இயேசுவும், ஜெபிக்காத சீஷர்களும் :

தன்னால் தாங்கக்கூடாத பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதற்காக துக்கத்துடனும், வியாகுலத்துடனும் ஜெபித்து பெலனடைந்த இயேசுவில் சிநேகிதனே என்று தன்னைக் காட்டிக்கொடுத்தவனை அழைக்கும் தேவஅன்பும் (மத் 26:50), கைதுசெய்ய வந்தவர்களுக்குமுன் பதறாமல் நிற்கும் திடமனமும், நான்தான் யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்கும் துணிவும், வேதவசனத்திற்கும் தேவசித்தத்திற்கும் தன்னை அர்ப்பணிக்கிற இருதயமும், கைதுசெய்ய வந்தவர்கள் பின்னிட்டு விழுந்து போகத்தக்க வல்லமையும் வெளிப்பட்டது. ஆனால், துக்கத்தினால் தூக்கமடைந்து ஜெபிக்காமற்போன சீஷர்களுக்கோ இயேசுவின் அங்கலாய்ப்பு நிறைந்த கடைசியான வேண்டுகோளுக்குக் கூட கீழ்ப்படிய இயலாத அவலநிலையும், இயேசுவின் விருப்பத்திற்கு மாறாக பட்டயத்தை எடுத்துப் போராடுகிற மனநிலையும், தேவசித்தமறியாது மாம்சத்தின்படி செயல்படுகிற சுபாவமும், இயேசுவை விட்டு ஓடிப்போகிற நிர்ப்பந்தமான சூழ்நிலையும் தான் இருந்தது.

ஜெபிக்கிறவர்களுக்கும், ஜெபிக்காதவர்களுக்கும் உள்ள வேறுபாடு இங்கு தெளிவாக வெளிப்பட்டுவிட்டது. தேவனோடு உறவுள்ள ஒருவனுடைய வாழ்க்கைக்கும், தேவனோடு உறவற்ற ஒருவனுடைய வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசங்கள் ஏராளம். ஜெபிக்கிற ஆவிக்குரியவனிடமிருந்து தேவனுக்கேற்ற செயல்களும், ஜெபிக்காத உலகத்துக்குரியவனிடமிருந்து மாம்சத்துக்கேற்ற செயல்களும் வெளிப்படத்தான் செய்யும். ஜெபிக்காத சீஷர்கள் வெட்டிய காதை ஜெபித்த இயேசு ஒட்டச்செய்தார். இயேசு சொன்னதையும், செய்ததையும் கருத்திற்கொண்டு ஜெபிக்கிறவர்களுக்கு மட்டுமே அவரைப்போல செயல்படுகிற கிருபை உண்டாகும்.

ஒட்டவைத்த இயேசு:

முறிந்துபோன உடல் உறுப்புகளை ஒன்றாக இணைக்கவும், உடைந்த உள்ளங்களை ஒன்றுசேர்க்கவும், அறுக்கப்பட்ட உறவுகளை மீண்டும் இணைக்கவும், பிளவுபட்ட குடும்பங்களை ஒன்றாக்கவும், பிரிவினை நிறைந்த சபைகளில் ஒருமனதை மலரச்செய்யவும் இயேசுவால் முடியும். அன்பு, விசுவாச வாழ்க்கை, பரிசுத்த வாழ்க்கை, ஒற்றுமை, வேலை, வருமானம் போன்றவை எதிர்பாராதவிதமாக முறிந்துபோகும்போது, அவைகளை இயேசுவின் கையில் கொடுத்தால் அவற்றை அவர் இணைத்து அன்றிருந்துபோலவே மீண்டும் குறையும், பழுதும் அற்றதாக மாற்றுவார்.

இரத்தத்தின் பெருந்துளிகள் தரையில் விழ ஜெபித்த இயேசு, தேவனைவிட்டுப் பிரிந்துபோன மனிதனை மீண்டும் தேவனோடு தாம் இணைக்கப்போவதற்கு ஒப்பனையாகத் தான் மல்குஸின் காதை ஒட்டுகிற இந்த அற்புதத்தைச் செய்தார். அவிசுவாசத்தினால் முறித்துப்போடப்பட்ட கிளைகளிருந்த இடத்தில் காட்டொலிவமரமாகிய நம்மை ஒட்டவைத்து, ஒலிவமரமாகிய இயேசுவின் வேருக்கும், சரீரத்துக்கும் உடன்பங்காளிகளாக்கவும் (ரோமர் 11:17) அவிசுவாசத்தைவிட்டு திரும்பினால் முறித்துப்போடப்பட்ட அவர்களை ஒட்டவைக்கவும் (ரோமர் 11:23) தேவன் வல்லவராயிருக்கிறார்.

புரிந்து கொள்ள வேண்டியவை:

முறிந்துபோன குடும்ப உறவுகளையும் முறிந்து போன உடல் உறுப்புகளையும் ஒட்ட இயேசுவால் முடியும். அன்பு, வருமானம், விசுவாச வாழ்க்கை, பரிசுத்த வாழ்க்கை, வேலை, ஒற்றுமை போன்ற அநேக காரியங்கள் மனித வாழ்க்கையில் முறிந்து போகின்றன. அவைகளை இயேசுவின் கையில் கொடுத்தால், அவற்றை இணைத்து அன்றிருந்ததுபோலவே மீண்டும் குறையும் பழுதும் அற்றதாக மாற்றுவார்.

தேறுதலற்றவராய் தன்னந்தனியே விடப்பட்ட வியாகுலம் நிறைந்த வேளையில்கூட, நமக்குச் சொன்னபடியே பகைவர்களையும், தீமை செய்கிறவர்களையும் நேசிக்கிற தேவஅன்பு இயேசுவிடமிருந்து வெளிப்பட்டது. நாமும் மாம்சபிரகாரமான ஆயுதங்களை பட்டயமாக பயன்படுத்தாமல் வேதவசனமாகிய இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தால்

ஜெபமென்கிற யுத்தம் செய்கிறவர்களாயிருப்பதையே அவர் விரும்புகிறார். தீமையை நன்மையினாலே வெல்லவும், சத்துருக்களை சிநேகிக்கவும், வலது கன்னத்தில் அறைபவனுக்கு இடது கன்னத்தையும் காண்பிக்கவும் தக்க இயேசுவின் பெருந்தன்மையை நாம் பெற்றுக்கொண்டால் ஆயிரங்களும், லட்சங்களும், கோடிகளும் கிறிஸ்துவின் பக்கம் ஈர்க்கப்பட்டு அவரோடு இணைக்கப்படும். சத்துருவின் அதிகாரத்தோடிணைந்து நமக்கெதிராகச் செயல்படுபவர்களுடையும் காயங்களை ஆற்றவும் கிறிஸ்துவோடு கூட அவர்களை ஒட்டவைக்கவும் அதிகாரம் தேவனால் நமக்கருளப்படும். சபையாகிய மாளிகை உயர்ந்து எழும்பும். பரலோகத்தில் சந்தோஷம் உண்டாகும்.



30

தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுதல்

யோவான் 2:1-11

1. மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள்.
2. இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.
3. திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்.
4. அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்.
5. அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்.
6. யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது.
7. இயேசு வேலைக்காரரை நோக்கி:ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்.
8. அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.
9. அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்தி விசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து:

10. எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்.

11. இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

*****

இயேசு முதன் முதலில் செய்த அற்புதம் இது. யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே இது விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த அற்புதத்தில் பங்கு கொண்ட பாத்திரங்கள் :

1. இயேசுவின் தாய் மரியாள்
2. தண்ணீர் கொண்டு வந்த வேலைக்காரர்கள்
3. பந்தி விசாரிப்புக்காரன்
4. தண்ணீர்
5. ஜாடிகள்

கல்யாண வீடு என்பது ஒரு குடும்பத்திற்கு சமம். திருமணம் நடந்த இந்த குடும்பத்திற்கு ஒரு குறையுமில்லை. திராட்சரசத்திற்கும் குறைவில்லை. திராட்சரசம் சந்தோஷத்திற்கு அடையாளம். எதற்கும் குறைவு வராது என்று நாம் சிந்திக்க கூடாது அன்பு, ஆரோக்கியம், செல்வம், சந்தோஷம், சமாதானம், ஐக்கியம், சவுந்தர்யம், புகழ், உயர்வு, இவையெல்லாம் நிரந்தரமானவை அல்ல. ஏனென்றால் எந்த நேரத்திலும் இதற்கு மாற்றங்கள் வரலாம். அப்போதுதான் மனிதன் தளர்ந்து போகிறான். கானாவூர் கல்யாண வீட்டில் திராட்சரசம் தீர்ந்ததாக சொல்லப்படவில்லை. குறைவுபட்டதாக சொல்லப்படுகிறது. குறைவுபட்டது என்றால் தேவையை விட கொஞ்சம் இருக்கிறது என்று அர்த்தம். கொஞ்சம் இருக்கிறது என்றாலும் பந்தியில் எல்லோருக்கும் பரிமாற முடியாது. எனவே தீரும்வரை காத்திருக்காமல் தீருவதற்கு முன் என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்பது தான் புத்திசாலித்தனம். ஆன்மீக (ஆவிக்குரிய) வாழ்விலும் சில குறைபாடுகள் ஏற்படுவதுண்டு. ஆதியில் கொண்டிருந்த அன்பினின்று விலகிப் போகிறவர்கள்

(வெளி 2:4) இந்த குறைபாட்டினைச் சரியான நேரத்தில் கண்டுபிடித்து சரிசெய்யவில்லையென்றால் விசுவாச வாழ்க்கையிலிருந்து கீழே விழுந்துவிடக்கூடும். கானாவூர் கலியாண வீட்டில், வீட்டுக்காரர்கள் குறைபாட்டினைச் சரியான நேரத்தில் கண்டுபிடித்தார்கள்.

சொல்ல வேண்டியவர்களிடம் சொன்னார்கள் :

தங்கள் வீட்டில் ஒரு பிரச்சனை என்றவுடன் மனம் தளர்ந்து எல்லோரிடமும் போய் அழுது புலம்பிக்கொண்டு இருக்கவில்லை. ஒரு மனிதனிடமும் அவர்கள் ஆலோசனை கேட்கவுமில்லை. தங்கள் மனதிலே இரகசியமாய் வைத்துக்கொண்டு தெரிவிக்கவேண்டியவர்களிடம் தெரிவித்தார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 16-ம் அதிகாரத்தில், தன் கட்டுப்பாட்டிலிருந்த சிறைக்கைதிகள் (பவுல், சீலா) தப்பிவிட்டனர் என்று எண்ணி எவரிடமும் எதையும் கேட்காமல் தற்கொலை செய்து கொள்ள முயன்ற சிறைச்சாலைக்காரனைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். இன்று பலருடைய எண்ணமும் இதுதான். ஆனால் தற்கொலை என்பது எந்த பிரச்சனைக்கும் முடிவல்ல.

வாழ்க்கையில் நடக்கக்கூடிய சில கஷ்டமான சம்பவங்களை யாருக்கும் தெரிவிக்கக்கூடாதென மனதிற்குள் இரகசியமாக பாதுகாக்கிறவர்களும் உண்டு. பல காரியங்கள் வெளியில் சொல்ல முடியாத காரியங்களாக இருக்கலாம். வெளியில் சொன்னால், அதனால் ஏற்படும் விளைவுகளைக் குறித்துச் சிந்தித்து பயந்து மனதில் வைத்துக் கொள்வார்கள். கடைசியில் வாழ்க்கையை இழக்கிறார்கள். மனைவி கணவனிடமும், கணவன் மனைவியிடமும், பிள்ளைகள் பெற்றோரிடமும், பெற்றோர் பிள்ளைகளிடமும் பல விஷயங்களை மறைத்து கடைசியில் பெரிய இழப்புக்களை சந்திக்கிறார்கள். இயேசு கெத்சமெனே தோட்டத்தில், தன்னுடைய துக்கங்களையெல்லாம் தமக்குப் பிரியமான சீஷர்களிடத்தில் சொன்னார் (மாற் 14:33, மத் 26:38). கலியாண வீட்டில் திராட்சரசம் குறைந்துவிட்டதை அந்த வீட்டார் அவமானம் என்று நினைத்து மறைக்கவில்லை. தேவபயமுள்ள ஒரு ஸ்திரீயிடம் தெரிவித்தார்கள். அவர்தான் இயேசுவின் தாய் மரியாள்.

பிரச்சனைகளை யாரிடம் சொல்ல வேண்டுமோ அவர்களிடம் தான் சொல்ல வேண்டும். இயேசுவும் தன் பிரச்சனைகளை எல்லோரிடமும் சொல்லவில்லை. தமக்கு பிரியமான மூன்று சீஷர்களிடத்தில் மட்டும்தான்

சொன்னார். அதைப்போல இங்கு கல்யாணவீட்டுக்காரர்கள் விஷயத்தை இயேசுவின் தாய் மரியாளிடத்தில் மட்டுமே சொன்னார்கள்.

இயேசுவிடம் சொன்னாள் மரியாள் :

மரியாள் தனக்கு இது அசாத்தியமான காரியமென்று நன்றாகத் தெரிந்திருந்ததால் அதை இயேசுவிடம் தெரிவித்தாள். நம்மால் முடியாத காரியம் என்றால், அதை ஏற்றவர்களிடம் தெரிவிக்க வேண்டும் இல்லையென்றால் இயேசுவின் சீஷர்களைப் போல் அவமானப்பட வேண்டியதாகி விடும் (மாற் 9:14). ஒரு மருத்துவர் தன்னிடம் வரும் நோயாளிகளைத் தன்னால் குணப்படுத்த முடியும் என்றால் மட்டுமே மருத்துவம் செய்வார். தன்னுடைய அறிவுக்கு எட்டாதது என்றால் அதற்கேற்ற வேறு சிறப்புமருத்துவரிடம் அவரை அனுப்பி வைப்பார். அன்பானவர்களே நாமும் மரியாளைப் போல பகுத்தறிவாளர்களாக இருப்போம். இதற்கு ஈடான இன்னொரு சம்பவத்தை 2ராஜா 4:31-ல் வாசிக்கலாம்.

ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன? என்றார் இயேசு :

இந்த கேள்வி மிகவும் முக்கியமான ஒரு கேள்வியாக கருதப்படுகிறது என்று வேத பண்டிதர்கள் கூறுகின்றனர். இந்த கேள்வியைச் சற்று எளிதாக்கினால், "அம்மா நமக்கு ஏன் அந்த கவலை" என்று தான் அர்த்தம் வரும். ஏனென்றால் கவலைப்பட வேண்டியவர்கள் பேசாமலிருக்கிறார்கள். இந்த சம்பவத்தில் வீட்டுக்காரர்களுக்கும் இயேசுவிற்கும் இடையே ஒரு பாலமாக மரியாள் செயல்பட்டிருக்கிறாள். மரியாளின் முதல் வேண்டுகோளே இயேசுவால் நிராகரிக்கப்பட்டபோதிலும், இன்றும் மரியாள் வழியாக இயேசுவிடம் பலர் வேண்டிக் கொள்கின்றனர். இந்த வேண்டுதல் பலனுள்ளதல்ல.

அவர் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றாள் மரியாள் :

கலியாண வீட்டில் வேலைக்காரர்கள் பலர் இருந்தார்கள். அதில் ஒரு பிரிவினர் தான் தண்ணீர் எடுத்து வருபவர்கள். நம்நாட்டில் வீட்டிற்கருகில் கிணறு இருப்பதுபோல யூதர்களின் வீடுகளில் இருப்பதில்லை. அவர்களுடைய கிணறு பொதுஇடங்களில்தான் இருக்கும். எனவே விசேஷ நாட்களில் தண்ணீர் மொண்டுகொள்வதற்கான வேலைக்காரர்களைத் தனியாக நியமிப்பார்கள். மற்ற நேரங்களில் பெண்கள் இந்த வேலையைச் செய்வர்

ரெபெக்காள் (ஆதி. 24:42-48), ராகேல் (ஆதி. 29:9,10), சமாரியா ஸ்திரீ (யோவான் 4:6,7) போன்ற பெண்கள் தண்ணீர் மொண்டு கொள்ளச் சென்றதை வேதத்தில் வாசிக்க முடிகிறது. மேலும் பந்தியிலமர்ந்திருக்கும் ஆட்களைக் கண்காணிப்பதற்கும், ஏற்றவேளையில் பந்தி நடக்குமிடத்திற்கு உணவைக் கொண்டுவருவதற்கும் பந்திவிசாரிப்புக்காரன் ஒருவனை நியமித்திருப்பார்கள்.

இயேசுவின் ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருந்த மரியாள் வேலைக்காரிடம், இயேசு உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றாள். அவர்களும் இயேசு சொன்ன காரியங்களுக்கு ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காமல் கீழ்ப்படிந்து செயல்பட உடனடியாக ஆயத்தமானார்கள். இயேசுவின் கட்டளைக்காக அவர்கள் காத்திருந்தார்கள். ஆறு கற்சாடிகள் இருப்பதை இயேசு கண்டார். ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்று சொன்னதும் முழுமனதோடு அவைகள் நிறைய தண்ணீர் நிரப்பினார்கள். அந்த தண்ணீரை அப்படியே பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்று சொன்னபோது இயேசுவின்மீது அவர்கள் சிறுபிள்ளைத்தனமாகக் கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையால் எந்தவித விமர்சனங்களையும் செய்யாமல் அவர் சொன்னபடியே தண்ணீர் நிரப்பினதும், அதிலிருந்து பந்திவிசாரிப்புக்காரனிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டதும் தண்ணீர் மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி வேறு யாருக்கும் தெரியாது. இயேசு அற்புதமாய் அளித்த திராட்சரசத்தை முதலில் ருசிபார்த்தது பந்திவிசாரிப்புக்காரன்தான்.

இயேசு தெரிந்துகொண்ட பாத்திரங்களும், நல்ல ரசமும்:

இயேசு கண்ட பாத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிமனிதனைக் குறிக்கிறது. வேதமும் மனிதனைப் பாத்திரமாகச் சித்தரிக்கிறது. பவுலை, நான் தெரிந்துகொண்ட பாத்திரமாய் இருக்கிறான் என்று கர்த்தர் கூறினார். முன்பு ரசம் வைக்கப்பட்ட பாத்திரங்கள் மனிதர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவை. ஆனால் பின்பு கொடுக்கப்பட்ட ரசம் இருந்த பாத்திரங்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவை. மனிதரின் பாத்திரங்களில் திராட்சரசம் குறைவுபடலாம். கர்த்தர் தெரிந்துகொள்ளும் பாத்திரங்களிலோ திராட்சரசம் குறைவதில்லை. கல்வியறிவும், திறமைகளும்

உள்ள தேவனுக்காக பிரயோஜனப்பட வேண்டிய பல பாத்திரங்கள் இன்று பிரயோஜனமற்ற நிலையில் ஒதுங்கிக் காணப்படுகின்றன. ஊழியம் செய்வது வேறு ஏதோ சிலருடைய வேலை என்று நினைத்துக்கொள்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களை பெற்றவர்கள் தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்தும் செய்தால் மட்டுமே நல்லரசம் அநேகருக்கு பரிமாறப்பட முடியும்.

புது திராட்சரசத்தை பழந்துருத்திகளில் வார்த்து வைக்கிறது இல்லை (மத் 9:17). இது பாத்திரங்கள் சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறது. மேலும் பழைய பாத்திரம் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது. நியாயப்பிரமாணம் என்னும் பழைய துருத்தியில் திராட்சரசம் குறைவுபடும்போது, கர்த்தர் தேர்ந்தெடுத்த புதிய பாத்திரங்களிலுள்ள திராட்சரசம் என்றும் குறையாமல் இருக்கும். இதனையே நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது என்று (யோவான் 4:14) இயேசு குறிப்பிட்டார்.

இயேசு நிறைவுபடுத்தின இந்த திருமணவீடு குறிப்புணர்த்துபவை:

- ✶ உலகம் ஒரு பந்தி, மனுஷர்கள் பந்தியிலமர்ந்திருப்பவர்கள்.
- ✶ எதிர்பாராதவிதமாக திராட்சரசம் குறைவுபடலாம். என்ன செய்ய என்று தெரியாமல் குழம்ப நேரிடலாம்.
- ✶ குறைவினைச் சரிசெய்ய புதிய பாத்திரங்களாக நாம் மாறினால், அவர் நம்மில் பரிசுத்த ஆவியை ஊற்றுவார்.
- ✶ பந்தியில் அதை பரிமாறினால் அநேகருடைய துக்கம் சந்தோஷமாக மாற்றப்படும்.
- ✶ சகலத்திற்கும் தீர்வு இயேசு மட்டுமே.
- ✶ இயேசு சொல்வதைச் செய்ய நாம் தயாராக இருக்கவேண்டும்.

இயேசுவின் அற்புதவல்லமை முதலில் வெளிப்பட்டவேளை அவரழைக்கப்பட்டிருந்த திருமண வீட்டில் குறைவு ஏற்பட்ட வேளையாயிருந்தது. கண்ணீரின் நேரத்திலும், துன்பத்தின் நேரத்தில் மட்டுமல்ல, சந்தோஷ நேரங்களிலும் நம்மோடு இருக்கும்படி இயேசுவை நாம் கட்டாயப்படுத்தவேண்டும். சந்தோஷமான இந்த திருமணநிகழ்வில்

இயேசு அழைக்கப்பட்டிருந்ததால், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட குறைவில் தாமதமும், சிரமமும், அவமானமும் இன்றி நல்ல ரசமாக தேவமகிமை வெளிப்பட முடிந்தது. உங்கள் குடும்பங்களிலும் திருமணங்கள் ஒழுங்கு செய்யப்பட முடியாமல் தடையாய் நிற்கும் குறைவுகள் எதுவாயிருந்தாலும் இயேசுவிடம் அவற்றைச் சொல்வதோடு, அவருடைய வல்லமை விளங்கத்தக்க புதிய சுத்தமான பாத்திரங்களாக உங்களை மாற்றிக்கொண்டால் உங்கள் குறைவுகள் நிறைவாகும். அநேகர் தேவனை விசுவாசிக்க ஏதுவாக தேவவல்லமை வெளிப்படும்.



31

38 வருட வியாதியஸ்தனைச் சுகமாக்குதல்

யோவான் 5:1-9

1 இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது. அப்பொழுது
இயேசு எருசலேமுக்குப் போனார்.
2 எபிரேய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில்
ஆட்டு வாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு.
3 அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள்
முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது
கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்.
4 ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் இறங்கி, தண்ணீரைக்
கலக்குவான்: தண்ணீர் கலங்கிய பின் யார் முந்தி அதில் இறங்குவானோ
அவன் எப்பேர்பட்ட வியாதியஸ்தனானாலும் சொஸ்தமாவான்.
5 முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே
இருந்தான்.
6 படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய்
வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாக
வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்.
7 அதற்கு வியாதிஸ்தன்: ஆண்டவரே தண்ணீர் கலக்கப்படும்போது
என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை.
நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான்
என்றான்.
8 இயேசு அவனை நோக்கி: எழுந்திரு உன் படுக்கைய்யை எடுத்துக்
கொண்டு, நட என்றார்.

9. உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு, நடந்து போனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.

*****

வேதத்தில் பெதஸ்தா குளம், வியாதியஸ்தர்களின் போட்டி மைதானமாக காட்சியளிக்கிறது. இந்த குளத்தை உருவாக்கியது யார் என்பது, தண்ணீரைக் கலக்க வருகின்ற தூதன் யார் என்பதும், எப்போது கலக்குவார் என்பதும் தெளிவாக தெரியவில்லை. இந்த தூதன் ஒரு மனிதனாகவும் இருக்கலாம் என கருத்துகள் நிலவுகின்றன.

இயேசு அவனைக் கண்டார்:

பண்டிகைக் காலமானதால் அநேகர் அங்கு வந்தபோதிலும் யாரும் இவனைக் காணவில்லை. ஆனால் இயேசு அவனைக் கண்டார். வியாதியை விட தனக்கு உதவிசெய்ய யாருமில்லையே என்ற துக்கம் தான் அவனிடம் அதிகமாக காணப்பட்டது. இதிலிருந்து அவன் ஒரு வியாதியஸ்தன் மட்டுமல்ல, ஒரு அனாதையும் கூட என்பது தெளிவாகிறது. இவனை குளத்தில் இறக்கிவிட யாருமில்லாதிருந்தது, அவன் மனித உதவியற்றவன் என்பதை உறுதிப்படுத்துகிறது.

வெகுகாலமாய் வியாதியஸ்தன் என்பதை அறிந்தார்:

நம்முடைய நிலைமையை அறிகிறவர் நம் தேவன். இந்த வியாதியஸ்தன் பல வருடங்களாக வியாதிப்பட்டவன் என்பதை இயேசுவிடம் யாரும் கூறவில்லை. இயேசுவே தம் ஆவியில் இதை உணர்ந்தார். ஒருவனைப் பார்க்கும்போதே அவனுடைய இருதயத்தையும் சூழ்நிலைகளையும் கூட அறிகிறவர் நம் இயேசு. அவர் மனிதன் பார்க்கிறவிதமாய்ப் பார்க்கிறவரல்ல.

அவனை நோக்கினார் :

அவனைக் கண்டவர் அப்படியே போகவில்லை. அவனருகில் வந்து அவனைப் பார்த்தார். அவனைக் கண்டவர்கள் பலர். ஆனால் அவனை கரிசனையுடன் நோக்கினவர் இயேசு மட்டுமே. இயேசுவின் அன்பும் வல்லமையும் மிகுந்த கண்களும், வியாதியஸ்தனின் கண்ணீர் வற்றிப்போன கண்களும், இணைந்தன.

சௌஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்:

38 வருடங்களாக அவனிடம் யாரும் கேட்காத இந்த கேள்வியை இயேசு கேட்டார். ஆனால் இதற்குப் பதிலாக, விரும்புகிறேன் என்று அவன் சொல்லவில்லை. தன்னுடைய இயலாமைக்கான காரணங்களை அவன் விவரிக்கிறான். ஏனென்றால் குளத்தில் இறங்கினால் மட்டுமே தனக்கு விடுதலையுண்டு என அவன் நம்பியிருந்தான். பெதஸ்தா என்றால் அற்புதங்களின் ஊற்று என்று பொருள். அற்புதங்களின் ஊற்று இயேசு. எனவே இவன் அற்புதத்திற்காக அந்த குளத்தைத்தேடிப் போகவேண்டியதில்லை. ஏனெனில் அற்புதங்களின் ஊற்றே அவனைத் தேடி வந்தது.

எழுந்திரு என்றார் :

இயேசு கூறின ஒரே வாக்கியத்தினால் 38 வருடங்கள் கஷ்டப்பட்டவன் ஒரு நிமிடத்தில் எழும்பினான். விரக்தியின் படுக்கை மாறியது. 38 வருட படுக்கையினின்று அவன் எழுந்தான். இயேசு பல வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தியபோது எழுந்திரு என்று சொன்னதுண்டு. இதற்கு பாவத்திலிருந்து எழுந்திரு என்று அர்த்தம்.

உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார் :

படுக்கை என்பது அவனுடைய பழைய பாவவாழ்க்கையைக் குறிக்கிறது. அதாவது அவன் பாவமன்னிப்பு பெறவில்லை என்று பொருள். எழும்பினவன் நடக்க வேண்டும். ஆனால் படுக்கையும் அவனோடு உள்ளது. அவன் வாழ்க்கைக்கு எல்லையமைத்து அடக்கிப்போட்டிருந்த பாவ சாபங்களை, அவன் கரத்தின் அதிகாரத்தினால் தகர்த்துக்கொண்டு, விடுதலையானதொரு வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும்படியாகவே இக்கட்டளை இயேசுவிடத்திலிருந்து பிறந்தது.

இனி பாவஞ்செய்யாதே என்றார் :

படுக்கையை விட்டு எழுந்து நடந்த அவன் தேவாலயத்திற்குச் சென்றான். இயேசு தேவாலயத்தில் அவனைக் கண்டார். அவன் அறியாததும் அவனுக்கு அறிவிக்கப்படாததுமான மூன்று காரியங்களை தேவன் அவனுக்குத் தெரிவித்தார்.

1. "நீ சொஸ்தமானாய்" என்று தெய்வீக மருத்துவ சான்றிதழ் அவனுக்கு கொடுத்து, இனி அவன் வியாதியஸ்தனல்ல என்று அறிவித்தார்.
2. "இனிமேல் பாவஞ்செய்யாதே" என்று கூறி இதுவரை நீ செய்த பாவத்திற்கு மன்னிப்பு பெற்றுவிட்டாய் என்று அவனுக்குப் புரிய வைத்தார்.
3. அவன் இயேசுவின் சாட்சியாக மாறியதை உணரச் செய்தார்.

முப்பத்தெட்டு வருஷமாய் வியாதியாயிருந்த அவன் இயேசு பிறப்பதற்கு முன்பே வியாதிப்பட்டு, இயேசுவையும் அவருடைய சுகமாக்கும் வல்லமையையும் அறிய இயலாமல் வியாதிப்படுக்கையிலே விழுந்துபோனவன். எனவேதான் அவனுடைய ஏகநோக்கமெல்லாம் ஐந்து மண்டபங்களிலும் வருகிறவர்களில் யாராகிலும் எனக்கு உதவிசெய்யமாட்டார்களா என்ற ஏக்கமும், பெதஸ்தா குளத்தில் கிடைக்கும் சுகமுமாகவே இருந்தது. அம்மண்டபங்களிலிருந்து நோயாளிகளுக்கெல்லாம் குளத்தில் கொண்டுபோய் இறக்கிவிடுகிறவர்கள் இருப்பதைப் பார்த்துப்பார்த்து தனக்கு உதவிசெய்ய யாருமே முன்வரமாட்டார்கள் என்று விரக்தியடைந்துபோயிருந்தான். இப்படியாக நம்பிக்கையற்றவனாய் போய்விட்டபடியினாலும், தேவனிடத்திலிருந்து ஒத்தாசையுண்டாக முடியும் என்பதை அவன் உணராதிருந்தபடியினாலும் அவன் வியாதிப்படுக்கையில் இவ்வளவு நீண்டகாலம் இருக்கவேண்டியதாயிற்று. ஆவியானவராலுண்டாகும் விடுதலையை அறியாத எத்தனையோ மக்கள் ஐந்துகண்டங்களின் திசைகள் எங்கிருந்தாகிலும் விடுதலைக்கு வழியுண்டாகாதா என்று அலைமோதிக் கொண்டிருக்கின்றனர். மருத்துவமனைகள், புண்ணிய திருத்தலங்கள், அந்நிய தெய்வங்கள், மந்திரவாதிகள், குறிசொல்லுகிறவர்கள் என்று உண்மைதெய்வத்தை அறியாமல் அலைந்து தங்கள் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கடத்திவிட்டனர். அண்டசராசங்களைப் படைத்தவனைக் கட்டிக்காட்டவும், இயேசுவின் இரத்தத்தினாலுண்டாகும் மீட்பைப் பறைசாற்றவும் சபை எழுந்திருந்தால்தான் ஐந்து கண்டங்களிலும் அடங்கிக்கிடக்கும் இதுபோன்ற மக்கள் தங்கள் படுக்கைகளைவிட்டு எழுந்து கிறிஸ்துவுக்குப் பின்செல்ல முடியும். நாம் தேவனுக்காக எழுந்திருக்கும்போது, தேவனுடைய நாமத்தினிமித்தமும், அவருடைய நீதியினிமித்தமும் காலங்களாக வாழ்விழந்துபோன குடும்பங்களுக்கும் விடுதலை நிச்சயமாக கடந்துவரும்.

பிறவிக்குருடனுக்கு பார்வையளித்தல்

(யோவான் 9:1-7)

1. அவர் அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்.

2. அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம்? இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.

3. இயேசு பிரதியுத்தரமாக, இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்.

4. பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

5. நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.

6. இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி;

7. நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய் திரும்பி வந்தான்.

*****

இயேசுவையும், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்ற அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்க மறுத்து, இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கை பண்ணுகிற அனைவரையும் ஜெபஆலயத்திற்குப் புறம்பாக்கிப்கொண்டிருந்தவர்கள் ஜெபஆலயங்களில் இருந்த காலம் அது.

அங்ஙனம், இயேசுவின் மகிமையை ஏற்றுக்கொள்ள மனமற்று, யூதர்கள் அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்ட வேளையில் அவர்களுக்கு மறைந்து தேவாலயத்தை விட்டுப்போகையில்தான் இந்த பிறவிக்குருடனாகிய மனிதனை இயேசு கண்டார். புறக்கணிக்கப்பட்ட கிறிஸ்துவின் மகிமைக்குச் சாட்சியாகவே இந்த மனிதன் தேவனால் இப்படி பிறந்திருந்தான். தேவனுடைய கிரியைகள் வெளிப்பட்டு இயேசு மகிமைப்படும்படியாகக் குறிக்கப்பட்ட வேளை வந்தபோது, அவன் பார்வையடையும்படி தேவனுடைய கிரியை வெளிப்பட்டது. இந்த அற்புதம் நிகழ்ந்தது தேவநாமம் மகிமைப்படுவதற்காக மட்டுமே. ஏனென்றால் இயேசுவே அவனைக் கண்டார். அவன் தன்னை சொஸ்தமாக்க இயேசுவிடம் வேண்டிக்கொள்ளவில்லை. இயேசு உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்த சேற்றை குருடனுடைய கண்களில் பூசினார். எல்லா அற்புதங்களும் அவருடைய ஒரு வார்த்தையினால் நடந்திருக்க, இவ்வற்புதம் ஒரு வேறுபட்ட விதமான மருந்தினால் ஆனது. உமிழ்நீரும் சேறும் மருந்தென்று மருத்துவ விஞ்ஞானம் கூறுகின்றது. கண்கள், கழுத்து போன்ற இடங்களில் சுளுக்கு ஏற்பட்டால், உமிழ்நீர் தொட்டுப்போடுவது வழக்கம். அதைப்போல் மண்மருத்துவம் ஆயுர்வேத மருத்துவத்தில் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

நீ போய் சீலோவாம் குளத்தில் கழுவு என்றார்:

இயேசு செய்யவேண்டியதை இயேசு செய்தார். இனி அவன் செய்யவேண்டியதை செய்யும்போது அவனுக்கு சுகமுண்டாகும். இயேசு அவனிடம் சீலோவாம் குளத்தில் போய் கழுவச்சொன்னார். இந்த கழுவுதல் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. அப்படியே பவுலும் பார்வையடைந்ததும் எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான் (அப் 9:18). இவ்விதமாக தேவனுடைய திட்டங்களின் நிறைவேறுதலாக பிறந்த குருடன், தன்னை நோக்கிக் கடந்துவந்த அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தபோது அவனுக்குச் சுகமுண்டானதுடன் தேவனுடைய கிரியை வெளிப்படும் தேவனுடைய திட்டமும் நிறைவேறிற்று. பின்பு அவன் ஜெப ஆலயத்திற்கு புறம்பாக்கப்பட்டபோதிலும் இயேசுவை விசுவாசித்து அவரைப் பணிந்து கொண்டான்.

ஒருவேளை நீங்களும் எனக்கு ஏன் இப்படி நேரிட்டது, நான் என்ன செய்ய முடியும் என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கலாம். நிச்சயமாக இயேசு உங்கள்முன் வருவார். உங்களோடு பேசுவார். அவருக்குக் கீழ்ப்படிந்து நீங்கள் செயல்படும்போது, அக்குருடனின் இருள் மாற்றப்பட்டு வெளிச்சம்

அவனுக்குள் பிரவேசித்ததுபோல, நீங்களும் வெளிச்சத்துக்குள் பிரவேசிக்கத்தான் செய்வீர்கள். தேவனை மகிமைப்படுத்துவீர்கள், உலகத்தின் குறுக்கிடுதல்களைச் சுலபமாகத் தாண்டி கிறிஸ்துவுக்குள் நிலைத்து வாழ்வீர்கள். நீங்கள் கடந்துவந்த பாதை முழுவதும் தேவனின் மகிமைக்காக என்பதை மறந்துவிடாதிருங்கள்.



33

மரித்த லாசருவை உயிரோடெழுப்புதல்

யோவான் 11:1-45

32. இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்.

33. அவள் அழுகிறதையும், அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது, ஆவியிலே கலங்கி, துயரமடைந்தது.

34. அவனை எங்கே வைத்தீர்கள் என்றார்? ஆண்டவரே வந்து பாரும் என்றார்கள்.

35. இயேசு கண்ணீர் விட்டார்.

36. அப்பொழுது யூதர்கள்: இதோ, அவர் அவனை எவ்வளவாய் சிநேகித்தார் என்றார்கள்.

37. அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.

38. அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கி, கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.

39. இயேசு: கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி, ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள்.

40. இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.

41. *அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.*

42. *நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்: ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.*

43. *இவைகளைச் சொன்ன பின்பு: லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.*

44. *அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான், அவன் கால்களும், கைகளும், பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன்முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவனை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.*

*****

இயேசு செய்த அற்புதங்களில் மிகவும் முக்கியமான அற்புதம் இது. பழைய ஏற்பாட்டு காலத்தில் தீர்க்கதரிசி எலியா, விதவையின் மகனுக்கு உயிர்கொடுத்தார். அப்போஸ்தலர்களின் காலத்தில் மரித்துப்போன தபித்தாள் என்ற வாலிப பெண்ணை பேதுரு உயிர்ப்பித்தார். நாயீன் ஊர் விதவையின் மகனை இயேசு உயிர்ப்பித்தார். ஜெப ஆலயத்தலைவனின் மகளை இயேசு உயிர்ப்பித்தார். ஆனால் லாசரு உயிர்ப்பிக்கப்பட்ட சம்பவத்திற்கும், மற்றவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டதற்கும் சில வித்தியாசங்கள் உண்டு.

- ✶ மற்றவர்கள் மரித்தாலும் அடக்கம்பண்ணப்படவில்லை. லாசரு மரித்து அடக்கம் செய்யப்பட்டிருந்தான்.
- ✶ அவர்கள் மரித்து ஒருநாள் தான் ஆகியிருந்தது. லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகியிருந்தது.

இந்த அற்புதம் நடப்பதற்கான காரணங்கள்

- ✶ அவர்கள் இயேசுவை வீட்டில் ஏற்றுக்கொண்டவர்கள்.
- ✶ நல்ல பங்கை (பரலோகராஜ்யம்) தெரிந்தெடுத்தவர்கள்.
- ✶ வியாதி வந்ததும் உடனே இயேசுவிற்கு தெரிவித்தார்கள்.

★ இயேசு வந்திருக்கிறார் என்று அறிந்ததும் அவ்விடம் விட்டு எழுந்தார்கள்.
★ இயேசுவினருகில் வந்தார்கள்.
★ இயேசுவைப் பார்த்தார்கள்.
★ காலடியில் விழுந்தார்கள்.
★ விஷயத்தைச் சொன்னார்கள்.
★ இயேசுவை அழைத்துக்கொண்டு போனார்கள்.

இந்த அற்புதத்தைச் செய்ய வல்லமையுள்ளவராயிருந்த இயேசுகிறிஸ்து செத்து நாறிப்போன நம்வாழ்வின் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளிலும் தமது அற்புதவல்லமையை விளங்கப்பண்ணும்படி அச்சூழ்நிலையில் அங்கு அவர் பேசின வார்த்தைகளை நாம் புரிந்துகொள்வது நலமாயிருக்கும்.

அவனை எங்கே வைத்தீர்கள்?

இந்த அற்புதத்திலும் மனிதர்களின் பங்கு உள்ளது. இயேசு அவர்களிடம் அவனை எங்கே வைத்தீர்கள்? என்று கேட்டார். இவ்விதமாகவே கர்த்தர் ஆதாமிடம், "நீ எங்கே இருக்கிறாய்" என்று கேட்டார் (ஆதி 3:9). அவன் எங்கேயிருக்கிறான் என்று இயேசுவுக்குத் தெரியாததினால் அவர் கேட்கவில்லை. இந்த கேள்வியை அவர் கேட்டதற்குக் காரணம், அவனுடைய நிலைமையை அவன் தன் வாயாலே அறிக்கையிட வேண்டும் என்பதற்காகத் தான். அவன் பொய் சொல்லவில்லை. லாசருவின் விஷயத்திலும் இப்படியே அவர் செய்தார். தீர்க்கதரிசியாகிய எலிசாவின் சீஷர் மரம் முறிப்பதற்காக சென்றபோது, அவனுடைய கோடரி தண்ணீரில் விழுந்தது. அப்போது எலிசா தீர்க்கதரிசி "அது எங்கே விழுந்தது"? என்றார். அவன் கோடரி விழுந்த இடத்தைக் காட்டினான். அவர் கோடரியை மீட்டுக் கொடுத்தார். அதைப்போலவே லாசருவை வைத்த இடத்தையும் காண்பித்தார்கள்.

கல்லை எடுத்துப் போடுங்கள்

இதைக் கூட கர்த்தரால் செய்திருக்க முடியும். ஆனால் அவிசுவாசம் என்னும் கல்லை நாம் தானே அகற்ற வேண்டும். நம்முடைய வாழ்க்கையிலும் இதைப் போல மரித்துப்போன விஷயங்கள் ஏராளமுண்டு. அவற்றையெல்லாம் உயிர்ப்பிக்க கர்த்தரால் மட்டுமே முடியும். அற்றுப்போன உறவுகள், அன்பு, பொருளாதாரம் இவைகளெல்லாம் மரித்துப்போன லாசருக்கள். இவைகளை உயிர்ப்பிக்க வல்லவர் இயேசு மட்டுமே.

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா

லாசரு வியாதியாயிருந்த செய்தியை இயேசுவிடம் சொல்வதற்கு மார்த்தாளும், மரியாளும் அனுப்பிய மனிதரிடம் இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது, தேவனுடைய குமாரனும் மகிமைப்படுவார் என்று இயேசு சொல்லியிருந்தார். அதாவது வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார். ஆனால் நடந்தது என்ன? லாசரு மரித்துப்போனான். இங்கு வாக்குத்தத்தமும், சூழ்நிலையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுப்போனது. உடனே அவர்கள் இயேசு சொன்ன வாக்குத்தத்தத்தைக் கைவிட்டுவிட்டு சூழ்நிலையின் கட்டாயத்திற்கேற்றபடி காரியங்களை நடப்பிக்க ஆரம்பித்தனர். வாக்கருளின இயேசுகிறிஸ்து வந்தபிறகும் வாக்குத்தத்தம் நினைவிற்கு வரவில்லை. சூழ்நிலையையே மறவாமல் பேசினாள் மார்த்தாள். இயேசுவுக்கு அவளிருக்கும் சூழ்நிலை நன்றாகவே தனது ஆவியில் கலங்குமளவுக்குப் புரியத்தான் செய்தது. மார்த்தாள் கல்லை அதாவது அவிசுவாசத்தைத் தூக்கியெறிந்துவிட்டு இயேசு சொன்ன வாக்குத்தத்தத்தை சிந்திக்கவும், விசுவாசிக்கவும் இயலாதவளாக நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள். இயேசுவோ திரும்பவும் அவளுக்குத் தம் வார்த்தைகளை நினைவூட்டி, அவிசுவாசமாகிய தடைக்கல்லைப் புரட்டிப்போடச் செய்தார்.

இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்

கல்லை அவர்கள் எடுத்துப்போட்டதும் இயேசு பிதாவே என்றழைத்து, ஜனங்களுக்கு முன்பாக அவர்கள் தன்னை விசுவாசிக்கும்படி அவரோடு பேசினபின் லாசருவே, வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். கட்டளைக்குக் கீழ்படிந்த அவர்களுக்காக சூழ்நிலையின் கடுமையான நிலைமையைத் தாண்டி இயேசுவின் குரல் உரத்தவிதமாக வெளிப்பட்டது. தன் தகப்பனைவிட்டுப் பிரிந்துச் சென்றபோது மரித்தவனாகக் கருதப்பட்ட இளையகுமாரன் எப்போது மனந்திரும்பினானோ அப்போது மீண்டும் உயிர்பெற்றவனாகப் பேசப்பட்டான் (லூக் 15:24). இயேசுவின் கட்டளைக்குக் கீழ்படிந்துச் செயல்பட்டபோது, மரித்தவன் ஜீவன் பெற்று வெளியே வந்தான். தேவனால் உயிர்ப்பிக்கப்பட்ட நாம் பரிசுத்த ஆவியானவரைப் பற்றுக்கொள்ளும்போது மட்டுமே உயிரற்ற நிலையில் நம்மைச் சுற்றி விழுந்த கட்டுகள் சுட்டெரிக்கப்படும். இதையும் மனிதர்கள்தான் செய்ய வேண்டும்.

வியாதியாலும், அசுத்த ஆவியாலும் கட்டப்பட்டவர்கள் அநேகர். கர்த்தரின் அழைப்பைக் கேட்டு கட்டுகளை அவிழ்த்துப்போட்டு வெளியே வந்தால் கர்த்தர் அற்புதம் செய்வார். இயேசுவின் உரத்தகுரலின் சத்தத்தால் கல்லறையைவிட்டு வெளியே வந்த லாசருவின் கட்டுகள் அவிழ்க்கப்பட வேண்டியது அவசியம்.

கட்டுகள் :

பலருக்கும் கட்டுகள் ஏற்படுத்துவது அவர்களுடைய உறவினர்கள்தான். மனுஷர்களால் கட்டப்பட்டவர்கள் அநேகருண்டு. யோசேப்பைக் கட்டியவர்கள் அவனுடைய சகோதரர்கள் தான். இங்கே சில கட்டுகளைக் குறித்து நாம் பார்க்கின்றோம்.

கைகளின் கட்டு :

மனிதர்களின் உறுப்பில் முக்கியமான ஒன்று கை. சில குடும்பங்களில் சிலருடைய கைகள் கட்டப்பட்டுச் செயல்பட முடியாதவர்களாக உள்ளனர். இயேசு ஜீவன் தந்தால் கட்டுகளை, கட்டியவர்களே அவிழ்க்க நேரிடும்.

கால்களின் கட்டு :

இது நம்முடைய அசைவினை கட்டுப்படுத்துகிறது. எங்கும் போக முடியாதவர்களாக உள்ளனர். கோழியைப் போல் இவர்கள் கட்டப்பட்டவர்கள். இவர்களுக்கு எந்த சுதந்திரமும் இல்லை. அவனைப் போகவிடுங்கள் (கலாசி) என்ற தேவனுடைய சத்தம் இக்கட்டுகளை அவிழ்த்துப்போட்டு சுதந்திரமாய் தேவனுக்காய் காலூன்றி நிற்க உதவிசெய்யும்.

முகத்தைச் சுற்றிய சீலை :

இது நமது அவமானம், நிந்தை நிறைந்த வாழ்வைக் குறிக்கிறது. நாம் உயிரடைந்து தேவனுக்காக வெளியே வரும்போது நம்முகத்தைச் சுற்றியிருக்கும் சீலை, முகத்திரை, முகத்தை மூடியிருக்கும் முக்காடு போன்றவற்றை தேவன் அகற்றிப் போடுவார்.

பரிசுத்த ஆவியானவரோடிணைந்து நாம் விடுதலையாக வாழ முயலும்போது, கட்டுகள் அவிழும். உயிரடைந்த நாம் விடுதலைபெற்ற பெண்மான்களைப்போல் ஓடித்திரிய இயலும். நம்பிக்கை உயிரிழந்து உங்களை விட்டு அகன்றுபோய் எத்தனை நாளானாலும்சரி, கவலைப்படாமல் அவருடைய உயிர்ப்பிக்கும் வல்லமைக்காகக் காத்திருங்கள். விசுவாசித்தால் நீங்கள் தேவமகிமையை காணத்தான் செய்வீர்கள்.

34

மீனின் வாயில் வெள்ளிப்பணம் எடுத்தல்

மத்தேயு 17:24-27

24. அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள்
பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம்
செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள். செலுத்துகிறார் என்றான்.
25. அவன் வீட்டிற்குள் வந்த போது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு
இவனை நோக்கி: சீமோனே உனக்கு எப்படித் தோன்றுகிறது பூமியின்
ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ,
அந்நியரிடத்திலோ யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார்.
26. அதற்கு பேதுரு: அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் என்றான். இயேசு
அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்த
வேண்டுவதில்லையே.
27. ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய்,
தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின்
வாயைத் திறந்து பார். ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்: அதை
எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

*****

இயேசு வாழ்ந்த காலத்தில் வரி பிரிக்கும் சம்பிரதாயம் இருந்து வந்தது இயேசுவிற்குச் சொந்தமாக வீடோ, நிலபுலன்களோ, வேறு எந்த சொத்துகளோ இல்லை. அதனால் இந்த வரி எதற்காக என்பது தெளிவாக தெரியவில்லை. சரியான நேரத்தில் வரிப்பணம் செலுத்தாததால்தான் வரி பிரிப்பவர்கள் வீடு தேடி வந்தார்கள். சிறிது நேரம்தானென்றாலும் இயேசு

இந்த இடத்தில் ஒரு கடன்காரனானார். கடன்பட்டுப் போனவர்களுடைய வேதனையை அவர் அறிந்திருக்கிறார்.

இவ்வற்புதமும் பேதுருவும்:

கடலுக்குப் போனான் :

இயேசு, பேதுருவை அழைத்தது கடற்கரையில் வைத்து தான். அன்று கடலை விட்டவன் இப்போது திரும்பவும் கடலுக்கு போகிறான். கடன் தீர்க்க குறுக்கு வழிகளை அவன் யோசிக்கவில்லை.

தூண்டில் எடுத்தான்:

பெரிய வலையையும் படகையும் விட்டுவிட்ட அவன் மீண்டும் தூண்டில் எடுக்கவேண்டிய நிலை வந்துவிட்டதே என்று முறுமுறுக்கவில்லை. இயேசுவுக்காக எந்த சிறிய தொழிலையும் செய்ய தயாராக இருந்தான். தூண்டில் எடுப்பதற்கு அவன் வெட்கப்படவில்லை. இது பேதுருவின் இருதயம் இயேசுவுக்காக எதையும் செய்யத்தக்க ஆவலும், தாழ்மையும் உடையதாய் இருந்ததை வெளிப்படுத்துகிறது. இயேசுவின் சத்தத்துக்கேற்ப எப்போதும் செயல்படும் நெகிழ்ந்து கொடுக்கிற இருதயம் அவனுக்கிருந்தது.

நிந்தையைப் புறக்கணித்தான்:

அவ்வளவு பெரிய மீனவனாயிருந்த அவன் கிறிஸ்துவைப் பின்பற்றியதால் ஒரு தூண்டில் வைத்து மீன்பிடிக்கிறானே என்று அநேகர் நிந்தித்திருப்பார்கள். ஆனால் எதையும் அவன் பொருட்படுத்தவில்லை. வலையையும் கடலையும் படகையும் விட்டவன் தூண்டிலை எடுத்தான் கூட்டம்கூட்டமாக மீன்பிடித்தவன் ஒரு மீனுக்காக காத்திருந்தான். இயேசுவின் வார்த்தைக்கும், கட்டளைக்கும் அவன் கொடுத்த மதிப்பு அவ்வளவாயிருந்தது.

இயேசு சொன்னதை விசுவாசித்தான் :

இயேசு சொன்னபடி வெள்ளிப்பணம் உள்ள மீன் முதலாவது கிடைக்கும் என விசுவாசித்தான். அதைப்போலவே கிடைத்தது. அதனுள் இருந்த வெள்ளிப்பணத்தை அவன் எடுத்தான். இருவருடைய கடனும் தீர்ந்தது.

நாம் கற்றுக் கொள்ள வேண்டியது:

கஷ்டங்கள் வரும்போது தெரிந்த, நியாயமான தொழிலைச் செய்வதில் தவறில்லை. இன்று பலரும் வேதத்தைக் கையில் எடுத்தால்

வேறு எந்த தொழிலையும் செய்ய மாட்டார்கள். ஆனால் வேதத்தில் நாம் காணும், ஆதாம் ஒரு விவசாயி,ஆபேல் ஆடு மேய்ப்பவன், நோவா ஒரு விவசாயி, ஆபிரகாம் ஆடுமேய்ப்பவன், ஈசாக்கு ஒரு விவசாயி, யாக்கோபு ஆடுமேய்ப்பவன், பவுல் கூடாரவேலை செய்பவன். இந்த தொழில்கள் எதுவும் ஊழியத்தை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லையே. தேவ பிள்ளைகள் பொருளாதார கஷ்டங்கள் வரும்போது தெரிந்த தொழிலை தாராளமாகச் செய்யலாம். சாதாரண மனிதர்களுக்கு மீன்கள் மட்டும் கிடைக்கும் போது, தேவ பிள்ளைகளுக்கு மீனுக்குள் வெள்ளிப்பணமும் கிடைக்கும். கஷ்டங்களும் தீரும்.

வரிப்பணம் செலுத்த இயேசுவுக்கும், சீஷர்களுக்கும் கையில் ஒன்றுமில்லாதிருந்தது உண்மைதான். ஆனால் தேவையேற்பட்ட அவ்வேளையில்தானே கர்த்தர் குறித்த மீனின் வாயில் வெள்ளிப்பணம் அகப்பட்டுவிட்டதும் உண்மை. இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்டுவரும் வார்த்தைகள் ஒருபோதும் வெறுமையான வார்த்தைகளாக நின்றுவிடுவதில்லை. அவை உண்மைத்தன்மையும் (valid) நம்பகத்தன்மையும் (reliable) கொண்ட வார்த்தைகள். நிரூபணம் தொடரும் வார்த்தைகள். அவர் சொன்னவற்றில் நிரூபிக்கப்படாதவை ஒன்றுமில்லை. பேதுரு, இயேசு தன்னையழைத்தபோது "உங்களை மனுஷரைப் பிடிக்கிறவனாக்குவேன்" (மத் 4:19) என்று சொன்னதை எப்படி விசுவாசித்துப் புறப்பட்டானோ அப்படியே, தூண்டில் போட்டு மீனைப்பிடித்து வாயைத்திறந்துபார், வெள்ளிப்பணத்தைக் காண்பாய் என்று சொன்னபோதும் கீழ்படிந்துப் புறப்படத்தயாராயிருந்தான். ஆதியில் கொண்டிருந்த விசுவாசத்தை விட்டுவிடாமல் அவரையே தொடர்ந்துச்சென்றான். அப்படியே நாமும் ஆதி அன்பில் குறைவுபடாது, இயேசுவின் சத்தத்தைக்கேட்டு, விசுவாசித்துச் செயல்படுவோமானால் அவமானம், நிந்தை மற்றும் தேவைகள் நெருக்கி நிற்கும்போதும் அதனூடாக நமக்கு நிறைவும், மேன்மையும் அருளும் அற்புதமான வழிகள் உருவாகும்.

35

படகு நிறைய மீன்கள்

லூக்கா:5:4-6

4. அவர் போதகம்பண்ணி முடித்தபின்பு சீமோனை நோக்கி, ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்.

5. அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை: ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போகிறேன் என்றான்.

6. அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்.

*****

இயேசு கடற்கரையில் நின்று கொண்டிருந்தார். ஜனங்கள் கூடியிருந்தனர். அப்போது இயேசு இரண்டு படகுகள் நிற்பதை கண்டார். இயேசுவைக்காண திரளாய்க் கூடிவந்த கூட்டம், அலையடிக்கின்ற கடல், மீன்பிடிக்க செல்கின்றவர்கள் என சுற்றுலாஸ்தலம்போல் காட்சியளிக்கின்ற அந்த இடத்தில் பார்ப்பதற்கு எவ்வளவோ காட்சிகளிருக்க, இயேசுவின் கண்கள் பதிந்தது அந்த வெறுமையான படகுகளில்தான். இயேசு கண்ட படகுகளில் கவனிக்க வேண்டிய இரண்டு விஷயங்கள்.

1. எல்லா படகுகளும் கடலுக்குச் சென்றிருக்க இந்த படகுகள் மட்டும் கரையிலே நின்றுகொண்டிருந்தன.

2. இரண்டு படகுகளும் கானாவூரின் வெறுமையான ஜாடிகளைப் போன்ற வெறுமையான படகுகள்.

வாழ்க்கையை வெறுமையாக உணர்கின்றவர்களை இந்த படகு குறிக்கிறது. ஒரு காலத்தில் மிகவும் பயனுள்ளவர்களாக இருந்து, அதன்பின் வியாதியாலோ இழப்புகளாலோ, பிள்ளைகளாலோ வெறுமையாக்கப்பட்ட

ஏராளமான படகுகள் இந்த உலகத்திலுண்டு. தனிமை அனாதை மடம், முதியோர் இல்லம் போன்றவைகள் தான் இவர்கள் ஒதுங்கியிருக்கும் கடற்கரை.

ஒரு படகில் ஏறினார் :

இயேசு படகில் ஏற யாருடைய அனுமதியையும் கேட்கவில்லை. இரண்டு படகுகள் இருந்தது. ஒன்றில் அவர் ஏறினார். அவர் அவ்விரண்டில் ஒரு படகில் ஏறினபோதிலும் இரண்டு படகுகளுமே காப்பாற்றப்பட்டன.

படகினுடைய உரிமையாளனைப் புரிந்து கொண்டார் :

இந்த படகு அநாதையல்ல அதற்கு உரிமையாளனுண்டு, விரக்தியில் வலையை அலசிக் கொண்டிருந்த பேதுருவே அப்படகுக்குச் சொந்தக்காரன். பல நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக ஒதுக்கப்பட்ட ஒருவரா நீங்கள்? உங்கள் படகில் இயேசு ஏறிவிட்டார். இயேசு உங்களை பார்க்கிறார். மட்டுமல்ல நீங்கள் பயணத்திற்குத் தயாராகி விட்டீர்கள். இனி நீங்கள் செய்ய வேண்டியது ஒன்று தான். படகைத் தள்ள வேண்டும். பேதுரு படகைத் தள்ளினார். வெற்றியின் இரகசியம் இங்கு தானிருக்கிறது.

ஆழத்திலே தள்ளிக்கொண்டு போகச் சொன்னார் :

ஆழத்திலே தள்ளிக் கொண்டுபோய் மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். இங்கு தான் பேதுருவிற்கு லேசாக சந்தேகம் வருகிறது. ஏனென்றால் இரவு முழுவதும் உழைத்த பிறகும் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் தான் அவர் படகை ஒதுக்கியிருக்கிறார். இனியும் கடலுக்குள் இறக்கினால் எந்த பிரயோஜனமும் இல்லை என்பது அவருடைய கணிப்பு. சொந்த முயற்சி, பிரயாசம், அனுபவம், உடல்பலம் அனைத்துமே பலனற்றுப் போய்விட்டன என்றாலும் இயேசு சொன்னதால் அவர் கீழ்ப்படிந்தார். அவர் பலருடைய வார்த்தையைக் கேட்டும் பிரயோஜனம் எதுவும் ஏற்படவில்லை. ஆனாலும் இயேசுவின் வார்த்தையைக் கேட்டு வலையை இறக்கினார். இயேசுவின் வார்த்தைக்கு வணங்கி ஆழத்துக்குப்போன படகுக்கு நிகழ்ந்தது என்ன?

மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள் :

இயேசுவின் வார்த்தையுடன் புறப்பட்ட படகில் மிகுதியான மீன்கள் நிரம்பி வழிந்தது. தாங்க முடியாத பாரம் அடைந்தது எனினும் திரளான மீன்களின் பாரத்தைத் தாங்க படகுகளுக்கு பெலன் கிடைத்தது. அத்துடன் படகிலுள்ள அனைவரையும் படகு தாங்கியது.

பிரமிப்புடன் கரைக்குச் சென்றார்கள் :

இயேசுவின் வார்த்தையின்படி வெறுமையிலிருந்து ஆழத்திற்குக் கடந்துச்சென்ற படகின் பயணம் பிரமிப்பைக் கண்டது. மிகுதியான மீன்களுடனும், உயர்வான இயேசுவின் வார்த்தையுடனும் (லூக்.5:10) திரும்பியது. ஆழத்திற்கு அப்படகு தனியே அனுப்பப்படவில்லை. இயேசுவுடன்தான் ஆழத்திற்குள் சென்றது. அப்படியே மீண்டும் அடுத்தகட்ட உயர்வின் உறுதியைப் பெற்றுக்கொண்டதாக இயேசுவுடன் அலைகளைத் தாண்டி கரையை வந்தடைந்தது. அதுவரை இயேசு அவர்களுடன்தான் இருந்தார்.

வாழ்க்கையில் ஒதுக்கப்பட்டு போனவர்களை மீண்டும் பயன்படுத்த தேவனால் முடியும். இயேசு ஏறியது ஒரு படகில்தான். ஆனால் மீன்களால் நிறைந்தது அந்த படகு மட்டுமல்ல, மற்ற படகுகளும் தான். நமக்கும் இயேசு உதவி செய்வார். நம்முடைய தோல்விகளை அவர் வெற்றியாக மாற்றுவார். ஒருவேளை ஆழத்தில் அடைந்த ஆசீர்வாதமே உங்களுக்கு பாரமாகிப்போயிருக்கலாம். சுமைத்தாங்கியாய் உங்களை ஆற்றி, சிலுவையின் இளைப்பாறுதலையும் வெறுமையான அநேகரை நிரம்பப்பண்ணுகிற பாக்கியத்தையும் அடையச்செய்வார். அவருடைய வார்த்தைகள் வாழும் உங்கள் வாழ்வு ஒருபோதும் அர்த்தமின்றி வெறுமையையோ, பாரத்தையோ அடையாது. உங்கள் வெறுமையையும், பாரத்தையும் அவரே நீக்குவார்.

******

அற்புதம் மனிதன் செய்ய இயலாதது
அற்புதம் உலகிற்கு அப்பாற்பட்டது
அற்புதம் அற்புத தேவனால் செய்யப்படுவது
அற்புதம் பெற்றுக் கொண்ட மனிதா! - நீ
அற்புதமே முடிவு என எண்ணாதே - அதுவே
உன் கிறிஸ்தவத்தின் தொடக்கம்
அற்புதம் பெற்றுக்கொண்ட என் நண்பா - நீ
அற்புதத்தைப் பின்தொடர்ந்தே ஓடாதே - அது
நிலையற்ற கானல் நீராய் ஓடிவிடும்.
என் அன்பு நண்பனே! நீ ஒன்று செய்.
அற்புதம் செய்த தேவனையே நோக்கிக் காத்திரு
அவர் உன்னை இரட்சிப்பார்
என் அற்புதமே நீர்தானையா என்று சொல்
அற்புதங்கள் உன்வாழ்வில் நிலைநிற்கும்
அற்புதர் இயேசுவும் உன்னில் நிலைத்திருப்பார்
அற்புதர் இயேசுவை நோக்கி ஓடு
தொடர்ந்து பயணம் செய்
அற்புதர் இயேசுவோடு அற்புதமும் தொடர்ந்து வரும்.

******

அற்புதங்களும், இடம்பெற்றுள்ள வசனங்களும்

வ. எண்	அற்புதம்	வசனங்கள்
1.	குஷ்டரோகியைச் சுகமாக்குதல்	மத் 8:1- 4; மாற் 1: 40-45; லூக் 5: 15-16.
2.	நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைச் சுகமாக்குதல்	மத் 8:5-13; லூக் 7:1-10; யோவா4:46-54.
3.	பேதுருவின் மாமியாருடைய ஜீரத்தைச் சுகமாக்குதல்	மத் 8: 14-15; மாற்கு 1:29-34; லூக் 4:38-41.
4.	காற்றையும் கடலையும் அமைதிப்படுத்துதல்	மத் 8: 23-27; மாற்கு 4:35; லூக் 3: 22-25.
5.	பிரேத கல்லறைகளிலிருந்த அசுத்த ஆவியுள்ள மனிதனைச் சுகமாக்குதல்	மத் 8: 28-34; மாற்கு 5:1-20; லூக்; 8:26-39.
6.	திமிர்வாதக்காரனைச் சுகமாக்குதல்	மத்9:1-8; மாற்கு2:1-12லூக்;5:17-26.
7.	பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகமடைதல்	மத் 9:20-22;மாற்கு5:25-34; லூக் 8: 43-48.
8.	ஜெபஆலயத்தலைவனின் மகளை உயிரோடெழுப்புதல்	மத்9:23-26; மாற்கு5:35-43; லூக்8:49-56.
9.	இரண்டு குருடர்களுக்குப் பார்வையளித்தல்	மத் 9: 27-31.
10.	ஊமையான மனுஷனைக் குணமாக்குதல்	மத் 9: 32-34; லூக் 11: 14-15.
11.	சூம்பின கையையுடைய மனிதனைக் குணமாக்குதல்	மத் 12:9-13; மாற்3:1-6; லூக் 6: 6-11.
12.	குருடும் ஊமையுமானவனைக் குணமாக்குதல்	மத் 12:22-23; மாற் 3:20-30; லூக் 11: 14-23.
13.	ஐந்து அப்பங்களைப் பலுகச் செய்தல்	மத் 14:13-21; மாற் 6:30-44; லூக் 9:10-17; யோவா 6:1-14.
14.	கடலின் மீது நடத்தல்	மத் 14:23-27; மாற் 6:45-52; யோவா 6:15-21.
15.	கெனேசரேத்து நாட்டில் நடந்த அற்புதங்கள்	மத் 14:34-36; மாற் 6:53-56.
16.	கானானிய ஸ்திரீயின் மகளைச் சுகமாக்குதல்	மத் 15: 21-28; மாற் 7:24-30.
17.	ஏழு அப்பங்களைப் பலுகச் செய்தல்	மத் 15:32-39; மாற் 8:1-10.
18.	இயேசு மறுரூபமாதல்	மத் 17:1-8; மாற் 9:2-8.
19.	சந்திரரோகியைக் குணப்படுத்துதல்	மத் 17:14-21; மாற் 9:14-29; லூக் 9: 37-43.
20.	எரிகோவின் குருடனுக்குப் பார்வையளித்தல்	மத் 20:29-34; மாற் 10:46-62; லூக் 15: 35-43.
21.	அத்திமரத்தை உடனே பட்டுப்போகச்செய்தல்	மத் 21:18-22; மாற் 11:12-14.
22.	கலிலேயா கடற்கரையில் நடந்த அற்புதம்	மாற் 3:7-12.
23.	கொன்னை வாயுடைய செவிடனைக் குணமாக்குதல்	மாற் 7:31-37.
24.	பெத்சாயிதாவில் குருடனுக்குப் பார்வையளித்தல்	மாற் 8:22-26.
25.	நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடெழுப்புதல்	லூக் 7 :11-17.
26.	கூனியான ஸ்திரீயைக் குணமாக்குதல்	லூக் 13:10-17 .
27.	நீர்க்கோவை வியாதியுள்ள மனிதனைச் சுகமாக்குதல்	லூக் 14:1-6.
28.	பத்து குஷ்டரோகிகளைச் சுகமாக்குதல்	லூக் 17:11-19.
29.	பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரின் காதுகளைத் தொட்டு குணமாக்குதல்	மத் 26:51-54, மாற் 14:47 லூக் 22:50, 51, யோவா 18:10,11
30.	தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுதல்	யோவா5:1-9.
31.	38 வருட வியாதியஸ்தனைச் சுகமாக்குதல்	யோவா 5:1-9.
32.	பிறவிக்குருடனைக் குணமாக்குதல்	யோவா 9:1-7.
33.	மரித்த லாசருவை உயிரோடெழுப்புதல்	யோவா 11:1-44.
34.	மீனின் வாயில் வெள்ளிப்பணம் எடுத்தல்	மத் 17:24-27.
35.	படகு நிறைய மீன்கள்	லூக் 5:4-6.

உங்கள் கவனத்திற்கு

- இப்புத்தகத்திற்கு ஓய்வு தராதிருங்கள்
- ஒருவருக்காகிலும் இப்புத்தகத்தை அறிமுகம் செய்யுங்கள்.

ஆசிரியரின் இதர வெளியீடுகள்:

- ஸ்தோத்திரபலிகள் - 1000
- வாக்குத்தத்தங்கள் - 1000
- விசுவாச அறிக்கைகள் - 1000
- சமாரியா ஸ்திரீ
- இயேசுவின் உவமைகள்
- ஆசீர்வாத குடும்பங்கள்
- கிறிஸ்தவத்தின் அஸ்திபாரங்கள்
- 66 புத்தக விளக்கவுரை
- இயேசுவின் வருகையும், நியாயத்தீர்ப்பும்
- சகோதரரின் செய்திகளடங்கிய DVD-க்கள்
- சகோதரரின் பாடல்களடங்கிய VCD-க்கள்

உங்கள் பிரார்த்தனையும், ஒத்துழைப்பும்
எதிர்பார்க்கும் உங்கள் சகோதரர்

இயேசு செய்த 35 அற்புதங்கள்



ஆசிரியரைப்பற்றி...

சென்னையில் விமானப் பொறியியல் பட்டப் படிப்பின் போதே தேவனின் பணியாற்ற அழைக்கப்பட்டார்கள். ஒப்புக்கொடுத்தார்கள். பஞ்சாப் மாநிலத்தில் பரமனின் பணியைப் பாரத்தோடு பாமர மக்களிடையே ஆற்றினார்கள்.

கன்னியாக்குமரியைக் கண்ணோக்கின கர்த்தர் நமது சகோதரரை அழைத்து வந்தார். தற்போது தேவனுடைய உன்னத உத்தியோகஸ்தராகவும், வழக்கறிஞராகவும் பணியாற்றி ஆவியின் கனிகளோடும், ஆவியின் வரங்களோடும் 1998 - ஆம் ஆண்டிலிருந்து கர்த்தருக்கென்று உலகமெங்கிலும் சுவிசேஷ பிரபல்யம் செய்து கர்த்தரின் நல்ல நாமத்தை 8,000 விசுவாசிகள் கொண்ட ஏதேன் ஏ.ஜி சபை, கோட்டார், நாகர்கோவில். மற்றும் இயேசு வாழ்வளிக்கிறார் ஊழியங்கள் என்ற பெயரில் மிக சிறப்பாக, ஜெயமாக நிறைவேற்றி வருகிறார். இலட்சக்கணக்கான மக்கள் சகோதரரின் செய்தியாலும், ஜெபத்தினாலும், கர்த்தர் அன்னாருக்கு தந்திருக்கும் கிருபை வரங்களினாலும், பாடல்களினாலும், ஆராதனைகளாலும், எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களினாலும் பயன் பெற்று வருகின்றனர். அப்படியே தேவனால் அருளப்பட்ட இதயப்பூர்வமான வெளிப்பாடுகளை நம் குடும்பங்களின் ஆசீர்வாதங்களுக்கென்றும், திருச்சபையின் உயர்வுக்கென்றும் தரப்பட்டிருப்பதே இப்புத்தகம்.

இயேசு வாழ்வளிக்கிறார் ஊழியங்கள்

ஏதேன் ஏ.ஜி சபை.த.பெ.எண் : 47
25/12A, லாரன்ஸ் நினைவரங்கம்,
இந்து கல்லூரி ரோடு, செட்டிக்குளம் ஜங்.
நாகர்கோவில் - 629 002
அலைபேசி எண் : 04652 - 279920, 279921.
Fax : 04652 - 227498.
Email : revdmdbenjaminiplm@yahoo.com
jesusprovideslifeministries@gmail.com
Web : www.jesusprovideslife.com

JESUS PROVIDESLIFE MINISTRIES

Eden A.G. Church, P.O.Box No. 47,
25/12A, Lawrence Memoriel Hall Camp,
Hindu College Road, Chettikulam Jn,
Nagercoil 629 002.
Ph : 04652 - 279920/279921
Fax : 04652 - 227498.
Email : revdmdbenjaminiplm@yahoo.com
jesusprovideslifeministries@gmail.com
Web : www.jesusprovideslife.org.com